பஞ்சாமிர்தம்

ஒரு மாதாந்தரப் பத்திரிகை

நான் ஒரு மானுடன் : நான் மதியாதன
மானுட வாழ்வில் இல.

மாலை–I ஆவணி—1924 காசு-5

இந்திய சுயராஜ்யம்

பத்திராதிபர்

இந்தியர் பேச்சு வழக்கில் சுயராஜ்யம் என்னும் சொல் இப்பொழுது அதிகம் அடிபடுகின்றது; எனினும், அதன் பொருள் என்ன என்று கேட்டால், பலர் பல கூறுவர். உலக வாழ்க்கைக்கு வேண்டிய ஊண் உடை முதலியவற்றையும், வேறு சௌகரியங்களையும், தன்னுள் தானே விளைவித்தும் செய்தும் அடக்கிக்கொண்டு, பிறர் உதவியைத் தேடாது வாழும் நாடுதான் சுயராஜ்யம் பெற்றதென்று சிலர் எண்ணுகிறார்கள். வெளிநாட்டுத் துணிகளை விலக்கி, நமக்குப் போதிய அளவு நாமே கதர் நெய்து கொண்டால் சுயராஜ்யம் நெருங்கி விடும் என்று மகாத்மா காந்தி கூறுகிறார்; மற்றொருவர், "ஐந்து ஏகரா பூமியில் சுயராஜ்யம்" என்ற தலைப்பின் கீழ் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார்; இவ்விரண்டு கூற்றுக்களும் இக் கொள்கையைத் தழுவியனவாம். இந்த அளவையைக் கொண்டு சோதித்துப் பார்த்தால், நம்மை ஆளும் அங்கிலேயர் தாய் நாடாகும் இங்கிலாந்திலே, அவர்களுக்கு சுயராஜ்யமே இல்லை யென்று சொல்லவேண்டும். ஏனெனின், இடம் சுருங்கி, ஜனம் நெருங்கி, எத்தனையோ பல போக்கியப்

பொருள்களை விரும்பும் அந்தச் சிறு தீவானது, உலகத்திலே உள்ள மற்றெல்லா நாட்டு விளைவுகளையும் எதிர் பார்த்தே வாழுகின்றது. 'உன் நாட்டில் காப்பி, டீ, மாம்பழம் முதலியன விளையாமையால், நீ அவற்றை யெல்லாம் கைவிட்டு, உன் நாட்டில் விளைவனவற்றைக் கொண்டே பிழைக்க வேண்டும்' என்று, ஓர் அங்கிலேயனைப் பார்த்துச் சொன்னால், அவன் நம்மை நகை செய்வான். உலக வாழ்க்கையிலே அவரவர்க்கு உள்ளதைக் கொண்டு திருப்தி யடையாமல், சுகசௌகரியங்களை மேன்மேலும் பெருக்குவதுதான் மேலையர் நாகரிகத்தின் மெய்ப்பண்பு. உலகெலாம் துழாவித் திரிந்து, ஆங்காங்கு காணப்படும் இனியபொருள்களை யெல்லாம் சேகரித்துக் கொணர்ந்து அநுபவிக்கும் சக்தியை, மேலையர் மேல் மேலும் பெருக்கிக் கொண்டாடுகின்றனர். நாமோ, துறவு மார்க்கத்தையே நன்கு பாராட்டி, "உலைப்பானை உடைந்து போயிற்றென்றால், சோற்றுக் கவலை ஒழிந்தது!" என்று மகிழ்ந்து,

> "யாதனின் யாதனின் நீங்கியான், நோதல்
> அதனின் அதனின் இலன்"

என நம்பி வாழ்கின்றோம். இதனால்தான் நமது சுயராஜ்ய நோக்கமும் உலகப்பற்றைக் குறைக்கும் வழியிலே செல்கின்றது.

ஆயினும், உலகத்திலே எல்லா விதத்திலும் யுக்தி புத்தி சக்திகளில் ஒத்திருக்கும் மனிதர் இருவரையேனும் காண்பதரிது. அது போலவே, நாடுகளும் தமது நீர் நில வளங்களிலும், பலா பலங்களிலும் வேற்றுமைப் படுகின்றன. இயற்கையின் அமைப்பே இப்படி யிருக்க, ஒவ்வொரு நாடும் தனக்குத் தானே நிரம்பிப் பிற நாடுகளின் உதவியின்றி வாழவேண்டும் என்பது, ஒவ்வொரு மனிதனும் தனக்கு வேண்டிய ஊண் உடை முதலிய யாவற்றையும் தானே ஆக்கிக் கொண்டு, தான் தோன்றிப் பூரணனாக வாழவேண்டும் என்பது போலாகும். இது சாத்தியமாயின், கடவுளின் கருத்து இஃதாயின், சமூக வாழ்க்கையே ஏற்பட்டிராது. பல மிருகங்களும் அற்பப் பிராணிகளுமே ஒத்துழைத்துக் கூடி வாழ்கின்றன எனினும், தன் இனத்தாருடன் பரஸ்பர அந்நியோந்நியத்தில் உறவாடிச் சேர்ந்து வாழ்வதுதான், மனிதனது சிறப்பும் மக்கள் நாகரிகத்தின் அடிப்படையு மாகும்.

ஒவ்வொரு குடும்பமும், தனித்தனியே, தேவாரா தனையும், எதிரிகளை எதிர்த்துச் சண்டை யிடுதலும், பண்டமாற்று வியாபாரமும், உழவு முதலிய தொழில்களும் செய்வது சாத்தியமில்லை என்பதை நன்கு தெரிந்துதான், நமது முன்னோர்கள், தம் காலத்து அவசியங்களுக்கு ஏற்றபடி, நான்கு தொழில்களைச் செய்யும் வெவ்வேறான நான்கு சாதிகளை ஏற்படுத்திக் கொண்டனர். ஒரு ஜனசமூகத்தின் பொது நன்மைக்கு இன்றியமையாத பல பணிகளையும், சமூகத்தார் ஏற்றபடி பிரித்துக் கொண்டு சுலபமாய்ச் செய்வதால் உண்டாகும் சௌகரியத்தையும், பரஸ்பர அந்நியோந் நியத்தையும் பற்றி, விரித்துக் கூறவேண்டுவ தில்லை. இதே முறையைப் பல வேறு ஜனசமூகங்கள் வாழும் பல வேறு நாடுகளுக்கும் பொருத்தி மக்கள் அனைவரும் ஒத்துழைப்பதுதான், நாகரிக முன்னேற்றத்துக்கு நல்ல வழியாகின்றது. இதனால், பண்டமாற்று சுயராஜ்யபங்க மாகாது என்பது விளங்கும். நமது தாய்நாட்டின் இப்பொழுதுள்ள நிலைமையில், கதர்ப் பிரசாரம் மிக்க நன்மையை விளைக்குமென்று கருதியே மகாத்மா காந்தி இவ்வண்ணம் கூறுகின்றனரே யன்றி, ‘பிற நாட்டு விளைவுகளின் உதவியின்றி வாழ்வதுதான் சுயராஜ்யத்தின் மெய்ப்பண்பு’ என்பது அவர் கருத்தன்று. ‘பிரிட்டிஷ்ப் பொருள்கள் எல்லாவற்றையுமே பகிஷ்காரம் செய்து விடவேண்டும்’ என்று சிலர் அடிக்கடி கொண்டு வரும் பிரேரணையை, கூடாதென்று அவர் எப்பொழுதும் மறுத்துத் தடுப்பதே இதை நன்கு விளக்கும். இதனால், ஒரு நாட்டின் சுயராஜ்யமாவது, இயற்கைப்பொருள் செயற்கைப்பொருள்களில் பிறர்கை நோக்க வேண்டாது நிறைந்த நிலையன்று என்பது தெளிவாகும். அவ்வண்ணம் ஒரு நாடானது, பொருள்கள் மட்டிலும் சகல சௌபாக்கிய சம்பத்துக்களும் பொருந்தி யிருப்பினும், பிற நாட்டார் அதிகாரத்துக் குட்பட்டிருப்பின், அது சுயராஜ்ய முள்ள நாடு ஆகாதன்றோ ?

இதை எண்ணிச் சிலர், பிறர் ஏவாது தமக்குத்தாமே யஜமானராக வாழுவது தான் சுயராஜ்யம் என்று கூறுகின்றனர். தமக்குள் நடை பெறும் அதிகாரத்தில் சாதிக்குச் சாதி, மனிதனுக்கு மனிதன், எவ்வளவு ஏற்றத்தாழ்ச்சி இருந்தாலுமே சரி, அவ்வதிகாரம் பிற நாட்

டாராது அதிகாரமாயில்லாது, சுயேச்சையான சுயாதிக்ரமாயிருக்கவேண்டும் என்பதே இக் கொள்கை. தமிழ் நாட்டிலே சுயராஜ்யத் தேட்டப் பயிரைத் தமது இன்கவியமுத நீர்பாய்ச்சி வளர்த்து வந்தவரும், தமிழ் மக்களின் அதிர்ஷ்டக் குறைவினாலும் பின் புத்தியினாலும் அகால மரணத்தை அடைந்த தேசபக்த சிகாமணியுமான ஸ்ரீ. சி. சுப்பிரமணிய பாரதியார், “ஆயிரம் உண்டிங்கு சாதி—எனின், அந்நியர் வந்து புகல் என்ன நீதி?” என்று பாடி, இதை விளக்கியிருக்கிறார். இக் தக் கோட்பாடே இப்பொழுது உலகத்திலே பற்பல நாகரிக நாடுகளிலும் காணும் தேசியக் கிளர்ச்சிக்கு அடிப்படையாகும். “என்நாடு எனக்கு: உன்நாடு உனக்கு” என்பது, நியாயமாகவும் இயற்கை உண்மை போன்றும், தோன்றுகின்றது. எனினும், நாட்டுக்கு உரியவர், “என்நாடு” என்று சொல்லும் சுதந்தர முள்ளவர் யார்? என்ற கேள்வி வரும்பொழுது, இக் கொள்கையிலுள்ள சிக்கல் வெளிப்பட்டுவிடும். ‘கெநியா’ வை எடுத்துக் கொள்வோம்: “என்நாடு இது: நீ வெளியேறு” என்று அங்கே சொல்லுதற்குரியவர், ஆதிக்குடிகளான ஆபிரிக்கரா? நெற்றி வேர்வை நிலத்தில்விழப் பாடுபட்டுழைத்து, நாட்டை முன்னுக்குக் கொண்டுவந்த ஏழை இந்தியரா? கடைசியாக வந்து குடியேறி, அவ்விருவரையும் தமது மூளைவலி புயவலிகளால் அடக்கியாளும் வெள்ளையரா? இம்மூவருள், எவர் ஆதீனம் சுபாதீனமாகும்? அவ்வளவு தூரம் போகாது நமது நாட்டையே உதாரணமாக எடுத்துக்கொள்வோம்: சரித்திரக்கார்ர் கூற்றின்படி, இப்பொழுது மலைகளில் சிறுகி வாழும் வேடர், வில்லிகள், குறவர் முதலியோரே இந் நாட்டின் முதற்குடிகளாவர்; பிறகு ஆதித்திராவிடரும், பிறகு தமிழ் மக்களும், பிறகு ஆரியரும், பிறகு மகமதியரும், கடைசியாக வெள்ளையரும் வந்து சேர்ந்தனர். இவர்களுக்குள் எவர் ஆட்சியைச் சுயராச்சியம் என்னலாம்? எவரே இந்தியர், எவர் அந்நியர்? சில நூற்றாண்டுகளாக இந்தியாவில் நிலை பெற்று நிகழ்ந்த மொகலாய ராஜ்யம், சுயராஜ்யமா, அந்நியர் ஆட்சியா? கடைசியாகக் காகிநடாவில் கூடின இந்தியன் நாஷனல் காங்கிரஸின் தலைமை வகித்த மௌலானா மகமதலியை இந்தியர் என்பதா, அந்நியர் என்பதா? இப்பொழுது பரதேசிகள் போல் வந்து சில வருஷங்களே தங்கி, நம்மையாண்டு,

பிறகு தம்மூர்செல்லும் வெள்ளையர்கள், தம் நாடு மீளாது நம்மூரிலேயே நிலைத்துத் தங்கி; கொள்வினை கொடுப்புவினை பந்திபோஜனம் முதலிய கூட்டுறவொன்றும் இல்லையெனினும், மகமதியரும் ஹிந்துக்களும், ஹிந்துக்களுக்குள்ளேயே பல சாதியரும் வாழ்வதுபோல, நம்முடனிருந்து வாழ்ந்து, இராச்சிய பரிபாலன விஷயங்களில் மட்டும் நம்முடன் உறவாடி வருவார்களாயின், இப்பொழுது நடக்கும் பராதீன ஆட்சி சுயாதீனமாகிவிடுமா? அப்படி இந்தியாவிலே வாழ்வதால், அவர்களும் “எம் நாடு” என்று சொல்லுதற்குரிய இந்தியர்கள் ஆகிவிடமாட்டார்களா? இது நிற்க: நாளையே வெள்ளையர் அனைவரும் சென்னை ராஜதானியை விட்டு வெளியேறி விடுவதாக வைத்துக் கொள்வோம்; 1921-ம் வருஷத்து ஜன சங்கைப்படி, துரைத்தன அதிகாரத்தில் கான்ஸ்டேபில் முதல் கவர்னர் வரையுள்ள எல்லாப் பதவிகளையும், அவரவர் சாதித்தொகை விகிதம் பார்ப்பாரும் பாராதாரும் தம்முள் ஒத்துச் சமாதானமாய்ப் பங்கிட்டுக்கொண்டுவிட்டதாகவும் வைத்துக்கொள்வோம்; அப்பொழுதேற்படும் துரைத்தனமும்தான் உண்மையில் சுயராஜ்யமாகுமா?

‘அங்கிலேயர் சுயராஜ்யத்தை அநுபவிப்பவர்’ என்று நாம் கூறுகிறோம். “உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே” என்பது போல, ‘அங்கிலேயர்’ என்றால், இங்கிலாந்திலே பரம்பரை பிரபுக்களாயும் பிரமுகர்களாயுமுள்ள ஒரு சிலரையே குறிப்பதாயிருந்தால்தான், நேற்றுவரை இவ்வுரை பொருந்தும். இன்றோ, தொழிலாளிகள் வகுப்பினர் நிருவாக மந்திரிகளாயிருப்பதால், உயர் பிறப்பும் செல்வமுமுடைய பெரியோர் சிறப்பு ஒருவாறு குலைந்து உடைந்துவிட்டது என்னலாம். எனினும், தொழிலாளிகள் கட்சியார், பேருக்கு மட்டும் பெரும்பதவி பெற்று, உண்மையில் சுயாதிகாரமின்றித் தவிப்பதையும்; இந்தச் சொற்ப அதிகாரமும்கூடப் போகலாயிற்றென்னும்படி, அவர்கள் பாராளுமன்றத்தில் தோல்வியுற்று வருவதையும் கவனித்தால், அங்கிலேயர் சுயராஜ்ய உண்மைச்சாயம் துலங்கிவிடும். அங்கிலேயர்க்குள்ளும் (மற்றெல்லா நாட்டார்க்குள்ளும் இருப்பதுபோலவே) தொழிலாளிகளும் சாமானிய ஜனங்களுமே, தொகையிலும் குடிமாட்சியிலும் அதிகப்பட்டவர். இங்

னன மிருக்க, அங்கிலேயர் சுயராஜ்யத்தை அநுபவிப்பது உண்மையாயின், தொழிலாளிகளின் வேலை நிறுத்தங்கள் ஏன் இவ்வளவு அடிக்கடி நிகழ்கின்றன ? வேலை நிறுத்த மென்பது ஒத்துழையாமைக்கு மறு பெயரேயாகும், வேலை செய்வோர்க்கு சுயராஜ்யம் இல்லாததால், பிறர் ஆதீனத்தின் கொடுமையால் அவர்கள் கஷ்டப்படுவதால், உண்டாவதே அது. எனவே, "அங்கிலேயர் சுயராஜ்ய சுதந்தரர்" என்னும் பொதுக்கூற்று, சாதி பாஷை மதம் முதலியவற்றில் அதிக பேதங்களின்றி, நாகரிகத்தில் மிக்க முன்னேற்ற மடைந்து, ஒரு சிறு தீவுக்குள் ஒத்து வாழும் அங்கிலேயர்க் குள்ளேயே இவ்வளவு வேலி கோலி வரையறுக்கப் பட்டா லன்றி உண்மையொடு பொருந்தாதாயின், சாதி மொழி சமயம் ஆசார அநுஷ்டானங்கள் முதலியவற்றில் ஹிந்துக்களையும் மகமதியரையும் பார்சிகளையும் பவுத்தர்களையும் கிறிஸ்தவர்களையும் போல் அபாரமான பேதங்களையுடையோர் வாழும் மாபெரும் நாடாகிய இந்தியாவிலே, சுயராஜ்யம் என்பது, எளியதொரு சிறியதொரு காரியமன்றே! ஆயின், நம் நாட்டிலே இப்பொழுது மற்றெல்லாச் சொற்களினும் மிக்கு வழங்கும் சுயராஜ்யம் என்னுமொழி, வீணான வெற்றுரை தானோ, அதற்குப் பொருள் இல்லையோ எனின், அங்ஙனமன்று; உலக நாகரிகத்துக்கு முளைப் பிடித்த மேதாவிகளின் சந்ததியாரான பலகோடி மக்கள் நாள்தோறும், நாழிகைதோறும், உள்ளம் உகந்து கூறும் ஒருரை, பயனில்லாத வெற்றுரை யாகாது. கால தேச வர்த்தமானங்களோடு பொருந்த அதை ஆராய்ந்து பார்க்கின், அதன் பொருள் தெரியவரும்.

(தொடரும்)

திருக்குறள் பொருட்குமணிகள்

பல பண்டிதர்களும் அறிவாளர்களும் கூடிச் சாமானிய ஜனங்களுக்காகத் திரட்டியுதவிய நூல்; சிறிய எளிய இனிய உரையுடன் விரைவில் வெளிவரும் - விலை நாலணாதான். இப்பொழுதே ஆர்டர் செய்யுங்கள்.

பஞ்சாமிர்தம் ஆபீசு, மயிலாப்பூர்.

சர்வ சமய
சமரச தர்சநி

(343-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

27. * சர்வ சம்மத பிரார்த்தனை

தலைமுறை தலைமுறை, தலந்தொறும் தலந்தொறும்,
இலகறி வாளர், இருடிகள், ஈனர்கள்,
அலகில் அனைவரும் அடிதொழும் அப்பனே!
பலபெயர் படைத்த ஒருபரஞ் சோதி!

அறிவரி தாய ஆதிமா மூலமே!
உறுதி பயக்குமோர் நன்றுநீ; குருட்டுச்
சிறியனேன் யான்; என் தெருட்சி ஈதன்றிப்
பிறிது மேல் அறியாப் பெற்றியில் வைத்தனை.

என்னினும், இந்த இருண்ட நிலைமையில்,
உன்னி நலம் தீ துணர்ந்திடும் அறிவும்,
பின்னி இயற்கையை விதியொடு பிணைக்கினும்,
தன்னுளப் படி ஒழுகு (உ)ரிமையும் தந்தனை.

என்மனச் சான்றெனைச் செய்யென ஏவிடும்
நன்மையைச் சுவர்க்கமேல் நசைந்து தொடரவும்,
'புன்மை; தவிர்!' எனப் புகல்வதை வெறுத்து,
வெந்நரகத்தினும் விலக்கவும், மதியருள்.

உனதுளம் உவந்து நீ உதவு நலன்களை,
எனதுளம் இகழா தேற்றநு பவிப்பேன்;
மனிதர் கொள் பேறே கடவுள்கைம் மாறும்;
அனுபவித் திடல், அவர் ஆக்கினை நெறியே.

ஆயினும், சிறிய இவ் அவனிமட் டன்றே
தூயநின் அருள் எனைத்தொடுத்துளது; அண்டம் ஓர்
ஆயிரம் வேறெனைச் சூழ்வதை அறிந்தும்,
நீயொரு நரர்க்கே பதியென நினையேன்.

---

* Translation of Pope's *Universal Prayer* by அமுதகவி.

உன்கடன் ஒறுத்தல் என்ப துன்னாது,
புன்கணும் அறியா மையுமிகு புல்லனேன்,
என் கையால், நினக் கின்னாரென எண்ணிடும்
வன்கணா ளரை, இவன் வதைத்திடா தருளுக.

நன்றெனின் என்னெறி, நழுவா தனைவிட்
டென்றுமே அங்நெறி இயைந்திட அருளுக ;
அன்றெனின், அதைவிட் டதனின் மேல் நெறியை
ஒன்றிட, எனக்கு நீ உபதே சித் தருள்.

மூட அகந்தையுள் மூழ்கா தெனைக்கா ;
நாடி எனக்கு, நின் ஞானம், நன்றெனக்
கூடிடக் கொடுத்தது, கூடா தொழித்ததோடு
ஊடி என் உள்ளம் உறுமா தெனைக்கா.

ஏனையர் துயரம் உணர்ந்துயான் இரங்கிட,
நானறி அவர் குறை மறைத்திட, நல்குக ;
ஏனையர்க் கிரங்கி யான் கண்ணோடளவு, நீ
தானும் எற் கிரங்கித் தயைசெய் கண்ணோட்டம்.

ஈனனே எனினும், நின் ஆவி யேற்றலால்,
யானுமே முற்றிலும் ஈனனே யாகேன் ;
மானவ ! இன்றுறல் வாழ்வோ, மரணமோ,
போன இடமெலாம் புரந்தெனை நடாத்திடு.

இற்றை நாள் ஊணும் அமைதியும் இயைகயான் ;
மற்று வே றெதனையும் மருவுதல், ஒருவுதல்,
நற்றிறம், அன்றெனல், நன்கறி குவைநீ ;
பிற்றை நின் திருவுளப் பெற்றியின் நிகழ்க.

அலகில் வெளியெலாம் கோயிலா, அவனியும்
சலதியும் வானமும் தகுபலி பீடமா
இலகுறும் உனை, உயி ருள வெலாம் ஏத்திட,
உலகுள நறுமணத் தூபம் ஓங் கிடுகவே !

குசிகர் குட்டிக் கதைகள்

படிக்கப் படிக்கத் திகட்டாதன !
இடித்து இடித்துப் புத்திகூறுவன் !
வெடிக்க வெடிக்கச் சிரிக்கச்செய்வன !

முதல் எட்டுக்கதைகள்	0	10	0
இரண்டாம் ௸	0	10	0
இரண்டையும் சேர்த்து வாங்கினல்	1	0	0

பஞ்சாமிர்தம் ஆபீசு - மயிலாப்பூர் - சென்னை.

தென்னிந்தியாவின்

கடலைச்சார்ந்த கைத்தொழில்கள்

ஸ்ரீ. S. T. மோஸஸ், M.A., F.Z.S., F.R.A.I., கள்ளிக்கோட்டை

கடலைக் காணும்பொழுது, அதில் கிடைக்கும் ஏராளமான மச்ச வகைகளும், அதில் ஆழ்ந்துபோன பல கப்பல்கள் இறைத்த பொக்கிஷங்களும், நமக்கு ஞாபகத்தில் வருகின்றன. இவை தவிர, வேறு பல உபயோகமுள்ள சாதனங்களையும், சமுத்திரம் நமக்குக் கொடுக்கிறது. ஆகாரத்துக்கேற்ற பல பிராணிகளையும், குளிப்பதற்குதவும் கடற்காளான் என்ற ஸ்பஞ்சையும், வாசனையுள்ள மீனம்பரையும், வீடு கட்டக் கடற்கல் என்ற பவளப் பாறைகளையும், ஆபரணமாக அணிய சிப்பி முத்துக்களையும், சமுத்திரத்திலிருந்து மனிதன் எடுப்பதோடு, அங்கு வசிக்கும் ஜீவ ஜந்துக்களிலிருந்து சாயங்காய்ச்சச் சாயமும், சித்திரம் வரையக் கறுப்பான மையும், கையில் அணிய வளையல், மோதிரங்களும், பை, சேணம் முதலியன தைக்கத் தோலும், தோல் பதனிட எண்ணெயும், வயலுக்கு உரமும், வீடு வெள்ளையடிக்கச் சுண்ணும்பும் கைப்பற்றுகிறான். இக் கைத்தொழில்கள், தென்னிந்தியாவில் எப்படி நடைபெற்று வருகிறதென்று சிறிது கவனிப்போம்.

இவ்வுலகத்திலே ஒரு தேசத்தார் அதிக ருசியுள்ளதென்று மிகப் பிரீதியுடன் சாப்பிடும் ஒரு பிராணியை மற்றொரு தேசத்தார் அருவருப்புடன் புறக்கணிப்பதை நாம் காண்கிறோம். நாம் ஆளி என்னும் ஆன்ஸ்டரின் மாமிசத்தை அதிக வெறுப்புடன் தள்ள, ஆங்கிலேயர், அதைக் கோழிமுட்டையைப் போன்ற சத்துடையதென்று, பச்சையாகச் சாப்பிடுகிறார்கள். இராமநாதபுரம் ஜில்லாவிலிருந்து ஏற்றுமதியாகும் புழுப்போன்ற கடல் அட்டைகளை நம் தேசத்தவர் எவருமே புசிப்பதில்லை. ஆனால் சீனரோ, அவைகளிலிருந்து இறக்கின குப்பை, அதிக ருசிகரமானது என்று கொண்டாடுகிறார்கள். இப்படி ஒரு தேசத்திற்கு உதவாவிட்டாலும் மற்றவர்களுக்கு உபயோகப்படும் பிராணிகள் பல, கடலில் உண்டு. மீன் வகைகளில் சிலவற்றைச் சிலர் தள்ளுபடியாக நீக்கி வைத்தபோதிலும், மீன் பொதுவாக உலகத்திலே ஒரு முக்கிய ஆகாரம். மீனானது, ஆட்டிறைச்சி முதலிய மாமிசத்தைவிட, இலேசாக ஜீரணமாகக் கூடியதாயிருக்கிறது. சாதாரண ஜனங்கள், மீன் சாப்பிடுவதனால் வாதம் முதலிய வியாதி வருகிற

தென்றும் வாளையினால், வாந்திபேதியும், ஐலையினால் குஷ்டமும்
உண்டாகிறதென்று நம்பிய போதிலும், வைத்திய சாஸ்திரிகள்
இவைகளை மறுப்பதுமன்றி, மூளைக்கு பலன் கொடுக்கும் ஆகார
மென்று மீனைப் புகழ்கின்றார்கள். மேலும், சிலவகை மீன்கள்,
மற்ற ஆகாரங்களை விடச் சொற்ப விலைக்கு கிடைப்பதாலும், பால்
சுறா முதலிய வகைகள் வியாதியஸ்தருக்கும் தாய்மாருக்கும்
அவசிய ஆகாரமாக எண்ணப் படுவதாலும், சாதாரணமாய் மாமிசம்
சாப்பிடாத சிலர் மீனைக் ‘கடற் பழங்கள்’ என்று சொல்லிச்
சாப்பிடுவதாலும், நம் தேசத்தில், மீன் ஒரு முக்கிய ஆகாரமென்று
சொல்லலாம். ஆதலால் மீன் பிடிப்பதும் விற்பதும் ஒரு முக்கிய
கைத்தொழிலாகும். நம் ராஜதானியில் கஞ்சம் தொடங்கி மங்க
ளூர் வரையிலுள்ள கடலில் உபயோகிக்கப்படும் சுதேச வலைகள்
முதலியனவற்றின் வகைகளுக்குக் கணக்கு வழக்கில்லை. ஆனால்
அவையெல்லாம் பழையகாலத்தி லுண்டானவை. அவைகளால்
மீன் கிடைத்தபோதிலும், அவை கடலில் கிடைக்கக் கூடிய முழு
லாபத்தையும் தரக்கூடியவை அல்லவென்று சென்னை மீன்
இலாகாகாரர் கண்டு, வெளித்தேசங்களில் உபயோகிக்கப்படும் வலை
கள், யந்திர வலைகள் இவைகளினால் வேலை நடத்தி, நம் தேசத்துச்
செம்படவர்களுக்கு அந்த நவீன ஏற்பாடுகளை கற்றுக்கொடுக்க
முயலுகிறார்கள். இங்குள்ளவர்கள் மீன் எவ்வளவு சிறியதாயிருந்
தாலும், அவைகளை விட்டுவிடுவதில்லை. இப்படிக் கொல்வதனால்
மீன் உற்பத்திக்கு வரும் கெடுதிகளை அவர்கள் உணருகிறதில்லை.
மற்றத் தேசங்களில் இதைத் தடுக்கச் சட்டங்கள் ஏற்பட்டிருக்
கின்றன. இங்கும் அப்படிச் செய்ய மீன் இலாகாகாரர் உத்தே
சித்திருக்கிறார்கள். மீன் கிடைத்தவுடன் கறிசெய்யப்படலாம்,
அல்லது பின்னால் ஆகாரமாக உபயோகப் படுவதற்காக உப்பிட்டா
வது, புகையிலிட்டாவது பந்தோபஸ்து செய்யப்படலாம். மீனை
உப்பிட்டுக் காயவைத்துக் கருவாடாக உள்ளூரிலும் வெளியேயும்
அதிகமாய் ஏற்றுமதி செய்கிறார்கள். இவ்வியாபாரம் அதிக
முக்கியமான தென்பதை விளக்க, ஒருவர், ‘இதிலிருந்து துரைத்
தனத்தாருக்கு வரும் வருஷ வரியைக்கொண்டு ஒரு ஹைகோர்ட்
ஜட்ஜுக்கு ஆறு மாதச் சம்பளம் கொடுக்கலாம்’ என்று சொல்லி
யிருக்கிறார். கருவாடு செய்கிறவர்கள், சுத்தமில்லாமலும், அஜாக்
கிரதையாயும் வேலை செய்வதனால் க்ஷீணதசை யடைந்திருந்த
இவ்வர்த்தகம், தம் உத்தியோகம் நீங்கியபின் இந்தியாவின் கைத்
தொழில் அபிவிர்த்திக்காகத் தம்மை ஒப்புக்கொடுத்த ஸர். நிக்கல்
ஸன் துரை (Sir F. A. Nicholson) அவர்களும் அவர்க்குப்
பின்னர், அவரிடம் பயின்று, ஐரோப்பாவின் பல மீன் இலாகாக்
கள் நடத்திவரும் நவீன முறைகளெல்லாவற்றையும் கண்டறிந்து
பெயர் பெற்றுள்ள ராவ் பகதூர் கோவிந்தன் அவர்களும் இப்
பதினைந்து வருஷங்களாய்ச் செய்த பல ஏற்பாடுகளால், சீர்ப்படுத்
தப்பட்டதால், தற்காலம் செய்யப்படும் கருவாடுகள் நல்ல சரக்
கென்று மதிக்கப்பட்டும், அதிக விலைக்கு விற்கப்பட்டும் வரு
கின்றன. மலையாளத்தில், இருவது வருஷங்களுக்கு முன்னர்,
சுறா, திருக்கை இவைகளின் ஈரல்களிலிருந்தும் மத்தி மீனிலிருந்
தும் ஒரு துர்க்கந்தமுள்ள எண்ணெ யெடுத்து வந்தார்கள். காலா

காலங்களில் கோடிக் கணக்காய் வந்து விழுகின்ற மத்தி மீனை யந்திரத்தில் நசுக்கி, நல்ல நிறமும், வாசனையு முள்ள எண்ணெயை எடுக்கலாம் என்று கோவிந்த னவர்கள் கிராமம் கிராமமாகப் பிரசிங்கித்தார். இச்சுற்றுப் பிரயாணங்களில், ஒரு சிறு யந்திரசாலையையும்வைத்து நிரூபணம் செய்ததில், தற்சமயம் மீன் எண்ணெய் சாலைகள் மலையாளத்திலும் தென் கன்னடத்திலும் 800 க்கு மேல் உண்டாயிருக்கின்றன. இவ்வெண்ணெய், தோல் பதனிட கான்பூரிலும், எஃகு செய்ய வங்காளத்திலும் ஏராளமாய் வாங்கப் படுகிறது. கவர்ன்மெண்ட் ரசாயன பண்டிதர் ஓ. எஸ். மேனோன் பி. ஏ. தானூரில் மத்தி எண்ணெயைச் சாப்பிடத் தகுந்த விதமாய் சுத்தப்படுத்துகிறார். எண்ணெ யெடுத்தபின் கிடைக்கும் திப்பியையும், தலையையும் குடலையும் எருவாக உபயோகப் படுத்துகிறார்கள். மத்தி மீனையும், அப்படியே கடற்கரையில் உலர்த்தி உரமாக விற்கிறார்கள். இப்பிண்ணாக்கு, காப்பி, தேயிலை முதலிய தோட்டங்களுக்கு விலையுயர்ந்த எருவானதால், நம்முடைய மலைநாடுகளுக்கும் இலங்கைக்கும் முக்கியமாக ஜப்பானுக்கும், ஏராளமாக அனுப்பப் படுகிறது. நீலகிரியிலுள்ள கவர்ன்மெண்ட் உருளைக்கிழங்கு மாதிரித்தோட்டத்தில் இவ்வுரத்தை உபயோகித்த நாள் தொடங்கி, கிழங்குகள் பருத்துச் செழித்திருப்பதோடு, அத்தோட்டத்தை நாசஞ்செய்யும் பன்றிகளும் அங்கு வருகிறதில்லையாம். மத்தி எண்ணெயிலிருந்து, கள்ளிக்கோட்டை கோளசோப் பாக்டரியில், ஏ. கே. மேனோன் B.A., F.C.S. சவர்க்காரம் செய்கிறார். இச் சவர்க்கார ஜலத்தை நோய் பிடித்த செடிகளின் மீது தெளித்தால், வியாதிப் பூச்சிகள் உடனே மரிக்கின்றன. காப்பி தேயிலைத் தோட்டங்களிலும், தெங்கு முதலிய தோப்புகளிலும், இச் சோப்பு அதிகமாக வாங்கப்படுகிறது. மத்தி மீனையும் ஐலையையும், தலை குடல் நீங்கலாக, எடுத்து வேகவைத்து, தொடுசுவை சாதனங்களைச் சேர்த்து, தகர டப்பாக்களிற் அடைத்து விற்கிறார்கள். முதல் முதல் மாஹியில் ஒரு பிராஞ்சுக்காரர் இவ்வேலையைத் தொடங்கினார். அச்சாலையை தற்சமயம் வில்ஸன் கம்பெனியார் நடத்திவருகிறார்கள். கவர்ன்மெண்டாரும் சாலையத்தில் இம்மாதிரிச் சாலையை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். மத்தி மீன் பல வர்த்தகங்களின் மூலாதாரமா யிருப்பதனால், மலையாளத்தார் இதை குடும்பம் புலார்த்தி யென்று சொல்லுகிறார்கள். ஆனால் இம் மீன் சில வருஷங்களில் கோடிக்கணக்காய் அகப்பட்டும், சில வருஷங்களில் சொற்பமாய் கிடைத்தும், சிலவற்றில் கிடையாமலும் போகிறதால், இவ்வர்த்தகங்கள் ஸ்திரமில்லாமல் தத்தளிக்கின்றன. இம் மீனின் மாறுபாடான சுற்றுப் பிரயாணத்தின் காரணத்தைக் கண்டுபிடிக்க, கவர்ன்மெண்டார், வர்க்கலில் சில பரிசோதனைகள் நடத்தி வருகிறார்கள். பல மீன்களின்--முக்கியமாக கட்டிக்காளை, கத்தாளை, கெளுத்தி---இவைகளின் காற்றுப் பை யென்ற நுரை யீரலை யெடுத்துக் காயவைத்து, இங்கிலாந்து முதலிய தேசங்களுக்கு அனுப்புகிறார்கள். இப் பண்ணை கட்டியாகவாவது இலை இலையாக வெட்டி மடிக்கப்பட்டு, புஸ்தகப் பண்ணையாக இருக்கும். இப்பண்ணை, சாராயம் சுத்தம் பண்ணவும், மையும் வச்சிரமும் காய்ச்சவும் உதவுகிறது. வேளா

வேளையில் நம் கடலில் பிடிபடும் கடற்பன்றி, ஓங்கோல், முதலிய வற்றின் தோலைப் பதனிடுவதோடு, சுறா, திருக்கை இவைகளின் தோலினால் கத்திக் கைப்பிடி முதலானவை செய்கிறார்கள். தென்னிந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் ஒரு முக்கிய சாதனம், சுறா திருக்கைகளின் சிறகு துடுப்பு. வாலையும் மற்றத் துடுப்புக்களையும் உடம்பிலிருந்து வெட்டி, அவைகளின் அடிப்பாகத்தை சுண்ணும்பில் தோய்த்து, அவைகளை உலரவைக்கிறார்கள்; பிறகு சீனா, ஜப்பான், மலேயா தேசங்களுக்கு அனுப்புகிறார்கள். சீனர் இச் சிறகுகளிலிருந்து சூப் செய்வார்கள். கடலிலே கணவாய் என்று ஒரு பிராணி உண்டு. விரோதிகளால் துரத்தப் படும்பொழுது, இது, ஒரு தந்திரத்தால் தப்பிப் பிழைக்கும். தன் உடம்பிலிருக்கும் மைப் பையிலிருந்து கறுப்பு மையை வெளியிட்டு, தண்ணீர் கலங்கி யிருக்கும்போது இது லேசாய் நீந்தி ஓடிவிடும். மற்றத் தேசங்களில் இம் மைப்பையைக் காயவைத்து, சித்திரக்காரர் உபயோகிக்கும் சீபியா என்ற வர்ணமாக விற்கிறார்கள். இங்கே பல ஜாதி கணவாய்கள் அகப்பட்டும், அவைகளைத் தூண்டிலிரைக்கும் சாப்பிடவும் உபயோகிக்கிறார்களே தவிர, மையைப் பற்றிக் கவலை யெடுப்பார் ஒருவருமில்லை. கடற்கரையில் ஒதுங்கிக்கிடக்கும் கடல் நுரையை, அநேகர் சேர்த்து ஏற்றுமதி செய்கிறார்கள். இது ஓட்டுக் கணவாயின் முதுகெலும்பு. இந்நுரை, நம் தேசத்திற்குப் பற்பொடியாக திரும்பி வருகிறதாம். நம் கடலில் அகப்படும் ஆமைகளில் ஒருவகை ஆமையை, ஐரோப்பியர் சூப்புக்காக மிகவும் மதிக்கிறார்கள். மற்றொரு சாதியின் முதுகோட்டிலிருந்து சீப்பு முதலியன செய்கிறார்கள். இவ்வாமைகளை வலைகளினால் கடலிலும், ஒரு தந்திரத்தினால் கடற்கரையோரத்திலும் பிடிக்கிறார்கள். யாருஞ் சஞ்சரிக்காத கடற் கரையில், ஆமைகள் முட்டையிட வரும்பொழுது, அவைகளை, முதுகு தரையிற்படத் திருப்பிப் போட்டுப் பிடிக்கிறார்கள். செந்நாய்களும் அப்படியே ஆமைகளைப் பிடிக்குமாம். லக்ஷதீவு, தூத்துக்குடி, பாம்பன் முதலிய இடங்களைச் சார்ந்த கடலில் ஏராளமான கடல் அட்டைகளுண்டு. வற்ற நேரத்தில் ஆழ மில்லாத பாகங்களில் நடந்து, அவைகளைப் பொறுக்கிச் சேர்த்து, கரைக்குக் கொண்டு வருவார்கள். பெரிய சட்டிகளில் வேகவைத்து, பின்பு காயவைத்து, கோணிப் பைகளில் போட்டுத் தைத்து, சிங்கப்பூருக்கு அனுப்புகிறார்கள். மகமதிய தங்கல் ஒருவர் இவ் வர்த்தகம் செய்தால் சாபமென்று தடை செய்து போட்டதால், மகமதியர் யாரும் இதைச் செய்வதில்லை. திருப்பாலக்குடியில் செழித்தோங்கிய இவ்வர்த்தகம், அதைச் செய்தவர் அதிக மணலைக்கூட்டி நிறையைப் பெருக்கினதால், நிலைகுலைந்தது. சீனர், கடல் அட்டைகளை இங்கு வாங்காமல் ஆஸ்திரேலியா முதலிய இடங்களிலிருந்து வாங்கத் தொடங்கினதால், இவ்வர்த்தகம் ஒழிந்தே போய்விட்டது. தற்சமயம் 4 அல்லது 5 வருஷகாலமாக, கவர்ன்மெண்டார் அதைப் புதுப்பித்து நடத்தி வருகின்றனர். நம் கடலில் சில வேளைகளில் மீனம்பர் கிடைப்பதுண்டு. இது மஞ்சளாக இருந்தால் பொன் னம்பரென்றும், பச்சையானால் பூ வம்பர் என்றும், கறுப்பானால் மீனம்பரென்றும், மூவகைப்படும். இவைகளில்

விலையுயர்ந்தது பொன்னம்பர். இது கணவாய்களையே ஆகாரமாக உள்ள திமிங்கலங்கள் வயிற்றிலுண்டாகும் ஒரு கட்டி. இக் கட்டியை, அவை வாந்தி யெடுத்துவிட, அது கடலில் மிதந்து வருகிறது. அதை யெடுத்துத் துணியில் பொதிந்து காய வைத்து விற்பார்கள். இது ஒரு விலையுயர்ந்த வாசனைச் சாக்கு.

இராமநாதபுரம், திருநெல்வேலி கடலில் கிடைக்கும் முத்துச் சிப்பி முத்துக்களைக் கொடுப்பதால், எல்லாக் கிளிஞ்சல்களிலும் விசேஷித்தது. நம் தேசத்தில், முத்தை இச் சிப்பியில் விழுந்த மழை அல்லது பனித் துளியென்றும் கடல் மாதின் கட்டியான கண்ணீரென்றும், இடி இடிப்பதால் முத்து உண்டாகிறதென்றும், பலவாறாகச் சொல்லுகிறார்கள். கல். மண் அல்லது சிறுபுழு, சில வேளைகளில் முத்துச் சிப்பியின் உடலில் சென்று சதையை உபத்திரவப்படுத்தும்; அப்பொழுது, சிப்பியின் உட்புறத்தில் பளிங்கு நிறத்தைக் கொடுக்கும் வெண்ணிற நீர் கசிந்து, கல் மண், அல்லது புழுவைச் சுற்றிக் கவிந்து கொண்டு, தேகத்தின் அரிப்பை நிறுத்துகின்றது. இதுதான் முத்துண்டாகும் விதம். இம் முத்து, சதையிலிருந்தால் பருமனுக்கு தகுந்தபடி நல்ல விலை பெறும்; ஆனால் ஓட்டில் ஒட்டி யிருந்தால் பிரயோசன மில்லை. சீனர், புத்தரின் சிறு பொம்மைகளைச் சிப்பிகளுக்குள் விட்டு, புத்தரின் முத்துச் சிலையை வெளியே எடுப்பார்கள். அது போலக் கண்ணாடி மணிகளை உள்ளே யிட்டு, பல முத்துக்களை எடுக்க, முத்துச் சிலாபத்தில் உலகப் பிரசித்தி பெற்ற ஜேம்ஸ் ஆர்னல் (James Hornell) துரை யவர்கள் உத்தேசித் திருந்தார்கள். முதல் முத்து சிலாபம் 130 கி. பி. யில் காயல் பட்டணத்தில் நடந்ததாம். சிலாபங்களை நடத்திய தமிழர், போர்த்துக் கேசியர், உலாந்தக் காரர் யாவரும், மதுரைப் பாண்டிய ராஜாக்களுக்கு கப்பங் கட்டி வந்தார்கள். 1796 முதல் இச் சிலாப சுதந்தரம் இங்கிலீஷ்காரரிட மிருக்கிறது. கடைசியாக நடந்த சிலாபம் 1914–ல் தொண்டியில் நடைபெற்றது தான். 1926–ல் நிச்சயமாக ஒரு சிலாபம் கூடும் என்று கவர்ன்மெண்டார் சமீபத்தில் வெளிப்படுத்தி யிருக்கின்றார்கள்.

நமது கோயில்களிலும், ஆண்டிக ளிடத்திலும் ஊத உபயோகப்படும் சங்குகள், திருநெல்வேலி, இராமநாதபுரம் கடலில் ஏராளமாக அகப்படுகின்றன. இவை கவர்ன்மெண்டுக்கு உரியவை. சங்கு குளிக்காரர், இவைகளை மூழ்கி எடுத்து, சங்கொன்றுக்கு 6 அல்லது 10 பைசா வாங்குகிறார்கள். கவர்ன்மெண்டார், அவைகளை வங்காளத்தில் வளையல் செய்பவர்களுக்கு விற்று, அதிக லாபமடைகிறார்கள். முன் காலத்தில் கொற்கையில் இவ் வளையல்கள் செய்யப்பட்டனவாம். இப்பொழுதோ, சங்கறுக்கும் விதமே மறந்து போய் விட்டது.* நம்முடைய பெண்களும், அவ் வெண்மையான வளையல்களின் மேல் பிரியப்படாமல் பரதேசத்து கண்ணாடி வளையல்களை வாங்குகின்றார்கள். சங்கு, சிப்பி முதலானவைகளைச் சுட்டு சுண்ணாம்பு செய்யலாம். பலர், காள

---

* கடைச் சங்கப் புலவராக விளங்கின மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார், சங்கறுக்கும் கைத்தொழிலாளி என்பர். ப–ம் ப–ர்.

வாய்கள் போட்டுச் சுண்ணாம்பில் நல்ல வர்த்தகஞ் செய்கிறார்கள். சிறு பவளப் பூச்சிகள் கடலில் எத்தனையோ மைல் விஸ்தீரணமுள்ள பவளப் பாறைகளைக் கட்டுகின்றன. இப் பூச்சிகள் தண்ணீரிலிருந்து சுண்ணாம்பை உறிஞ்சி, தன் சிப்பி வீட்டுச் சுவரைக் கட்டுகின்றன. சுவர் வளர வளர, அடிப் பாகம் இறுகிக் கல்லாகும் ; மேல் பாகத்தில் மட்டும் மிருதுவான தேகமுண்டு. இக் 'கடற் கற்கள்' தூத்துக்குடி முதலிய இடங்களில் கட்டடங் கட்ட உபயோகப்படுகின்றன. இவை பளுவில்லாததாலும் குளிர்ச்சியைத் தருவதாலும் மற்றக் கற்களைவிடப் பிரயோசன மானவை. இவைகளைக் கடலிலிருந்து பெயர்த் தெடுத்து, நல்ல வர்த்தகம் செய்கிறார்கள். சில பவளப் பாறைகள் திருநெல்வேலியில் முன்பு கடலாயிருந்து இப்பொழுது பூமியாயுள்ள இடங்களில், தரையிலிருந்து வெட்டியெடுக்கப் படுகின்றன. இப்படியாக நம் கடலில் கிடைக்கும் பிரயோசனமான பொருள்களைப் பற்றியும், அவைகளில் நடக்கும் வர்த்தகத்தின் ஸ்திதியையும் ஒருவாறு கண்டறிகிறோம். பூமியில் மனிதன் விதைத்துப் பயிர் செய்து தன் உழைப்பின் பலனை அனுபவிக்கிறான் ; கடலிலோ, கஷ்ட மிருந்தபோதிலும், விதைக்காமல் லாபத்தை அடைகிறான். இந்த லாபத்தை அடைவதில் நம் தேசத்தில் ஜனங்கள் கவலைக் குறைவுள்ளவரா யிருக்கிறார்களென்றே சொல்லவேண்டும். மேல் நாடுகளிலும் அமெரிக்கா கண்டத்திலும் கண்டுபிடிக்கப்பட் டிருக்கிற புதிய ஏற்பாடுகளை நாமும் அனுசரித்து, இவ் வர்த்தகங்களை ஒழுங்காய்ச் சரிவர நடத்தினால், நம் தேசம் செழிப்பாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இவைகளின் தற்கால ஸ்திதியை கவனிக்கும்பொழுது இவைகளுக்காக கவர்ன்மெண்டார் எடுக்கும் சிரத்தை மற்றவர்களிடம் காணோமே என்று பரிதபிக்க வேண்டியதாயிருக்கின்றது. சமீபத்தில் கவர்ன்மெண்டு வேலையிலிருந்து நீங்கி பென்ஷன் எடுத்த ராவ் பஹதூர் கோவிந்தன் அவர்கள் நம் கடலில் கிடைக்கும் பொருள்களை சாஸ்திர முறைப்படி பண்படுத்தி இவ்வர்த்தகங்களை ஒழுங்காய் நடத்த ஒரு கம்பெனி தொடங்கியது ஒரு சந்தோஷமான காரியமே. சென்னை மீன் இலாகா இப்போது அடைந்திருக்கும் சிரேஷ்ட நிலைமைக்குக் காரணரும், அதன் பிதா என்று நாமகரணம் படைத்தவருமாகிய சர் பிரெடிரிக் நிக்கல்ஸன் துரையவர்கள், இந்தக் கம்பெனிக்கு, சாஸ்திரீய விஷயமாயும், மற்றும் உதவிசெய்ய ஒத்துக்கொண்டது நமது அதிர்ஷ்டமே.

இந்தியர் மூக்குக்கண்ணாடிகளின் வழியாக மேலையர் நாகரிகத்தின் தோற்றம்.

பின்வருவது, 'மைமாகஸின்' *(My Magazine)* என்னும் ஆங்கிலப் பத்திரிகையின் ஜூலை மாதச் சஞ்சிகையிலிருந்து மொழி பெயர்த்தது :—" மகாத்மா காந்தி

யின் கண்களுக்கு ஐரோப்பிய நாகரிகம் மிகப்பெருந் தீங்காகவே தோன்றுகிறது. ஏன் அவர் அதைத் தீங்கென்கிறாரெனில், பணமும் லௌகிக விஷயங்களில் வெற்றியுமே அதன் முக்கிய அம்சங்களா யிருக்கின்றன. கடவுளை வழிபடுவது, ஐரோப்பாவில் ஒரு கிளை வழியாகவோ விளையாட்டாகவோ பாவிக்கப்படுகிறது. அது முக்கிய நோக்கமா யில்லை. இன்பம், செல்வம், அதிகாரம், ஆட்சி—இவை தாம் மேலையர் நாகரிகத்தை ஆட்டுவிக்கும் விசைக்கருவிகள்; புனிதமன்று, தியாகமன்று, அன்பன்று. ஆனல் மனித வாழ்வானது பாற்சோற்றிற்கும் பட்டாடைக்குமாகப் போராடுவதன்று; மகத்தான இப்பிரபஞ்சம் இவ்வற்ப நோக்கங்களுக்குப் பொருந்தாது, நமது வாழ்க்கைக்கு ஓர் உன்னதக்குறி யிருத்தல் வேண்டும். கடவுளின் ஆணையை நிறைவேற்றுவதன்றி, வேறு எதுவாக அக்குறி யிருத்தல் கூடும்?

"இந்தியர்கள் நமது லௌகிகப்பற்றை நோக்கித் திகைப்படைகிறார்கள். நாம் குழந்தைகள் போல் விளையாட்டுப் பொருள்களில் இச்சைவைப்பதைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். நமது ஆன்மாக்கள் என்னவாயின என்று, அவர்கள் அறிய விரும்புகிறார்கள். கடவுள் நமக்கு நெருங்கித் துணைசெய்வதை நாம் உணர்கிறோமா? அவர் ஆணையை ஐரோப்பாவின் சட்டமாக்க முயல்கிறோமா? நமது அறிவைப்பற்றியும் செல்வத்தைப்பற்றியும் நாம் மெச்சலாம்; ஆனல் நமது கண்டத்தில் போராட்டம் நின்றுவிட்டதா? நமது நாகரிகமெல்லாம் தப்பெண்ணங்களால் உண்டான ஒரு வியாதியே என்று காந்தி சொல்கிறார். கண்கூடாக்காணும் உலக வஸ்துக்களிலேயே உழலும் நமது சிந்தனைகள், நித்தியமான மறைவான பொருள்களைப் பாராட்டுவதில்லை. நமது எண்ணங்கள் நேர் வழியில் சென்றால் நமது நாகரிகத்தில் சச்சரவு ஏற்படாது.

"அவர் சொல்வது ஒருவாறு உண்மையே. அவர் சாற்றும் குற்றத்தை முட்டாள் தனமாகவும் கர்வத்துடனும் பொய் என்று இகழ்ந்து விடலாகாது. நமது நாகரிகத்தில் பல விஷயங்கள் நம்மை துக்கிக்கச் செய்கின்றன. சில, நமக்கு வெட்கத்தையும் தரக்கூடியவை. நிலையாப் பொருள்களைப் பாராட்டியும், நிலையான பொருள்களை யிகழ்ந்தும் நாம் வாழ்கிறோம் என்று அவர் கூறுவது, ஒருவேளை உண்மையா யிருக்கலாம். அவர் கூறுவது சரியென்று நாம் ஒத்துக்கொள்ள வேண்டியது தான்.

“ஆனால், சிலரைப்போல் ஏமாந்து, இந்தியா மட்டும் அழகும் சாந்தமும் நன்மையும் நிறைந்ததோர் தேசமென்றும், கடவுளின் அன்பில் அந் நாடு எப்பொழுதும் மூழ்கி யிருக்கிறதென்றும், நாம் நினைத்துவிட மாட்டோம். சொல்ல முடியாத கொடுமைகள் இந்தியாவில் நடை பெறுகின்றன. ஐரோப்பாவி லுள்ள எந்தப் பாழிடங்களுமே மேலென்று சொல்லும்படி அசங்கியமான இடங்கள் இந்தியாவில் உள்ளன. மனிதனது மேல் நோக்கும் சிந்தனைகள், அவன் சிறிது கண் அயர்ந்தால் அழிந்துவிடும். காந்திக்கும் நமக்குமுள்ள நோக்க வித்தியாசத்தை, சில சொற்களில் விளக்கலாம்: காந்தி, மனிதனது ஆன்மாவானது சாந்தமும் அன்பும் நிறைந்திருந்த ஏதோ ஒரு பழைய காலத்திற்கு மீண்டும் செல்ல வேண்டுமென்று நினைக்கிறார். நாமோ, ஆன்மாவானது அநாகரிகத்தினையும் சோம்பலையும் விட்டு, அறிவையும் ஆதிக்கத்தையும் அடைய, முன் செல்லவேண்டுமென்று நினைக்கிறோம். காந்தி, நாம் நெறி தவறிச் செல்கிறோமென்று நினைக்கிறார். நாமோ நம் வழி கஷ்டமானதாயிருப்பினும், அதுவே நன்னிலைக்குச் சேர்ப்பிக்குமென்று நினைக்கிறோம். காந்தி, ஆன்மாவால் மட்டும் மனிதன் உயர்வடைகிறானென்று நினைக்கிறார்; நாமோ எதைக்கொண்டும் திருப்தி யடையாது, எப்பொழுதும் மேல் நோக்கி முயலும் சிந்தனையால் தான் ஆன்மா அதிக உயர்வைப் பெறுமென்று நினைக்கிறோம். ஓயா உழைப்பிலும், அறிவைப் பெருக்குவதிலும், ஆதிக்கத்திலும் நாம் நம்பிக்கை வைத்து நடக்கிறோம்; காந்தி, எதையுமே எதிர்க்காமையிலும், அறியாமையிலும், திருப்தியும் அமைதியும் குடிகொண்ட சிந்தையிலும் நம்புகிறார்.

“யார் சரியென்று காலம்தான் காண்பிக்கவேண்டும். ஆயினும், நாம் நமது சிந்தனைகளை விருத்தி செய்வதற்காகவும், உலக நன்மைக்காகவும் பாடுபட்டு உழைக்கும் உழைப்பில், ஆன்மாவே நமது வர்ழ்க்கையில் முக்கியமென்றும், எண்ணங்களே வாழ்வென்றும் கூறும் இந்தியாவின் மெல்லொலிக்கும் சில வேளைகளில் செவி கொடுப்போமாக. காந்தி நமக்கு அதிக உதவி செய்யக் கூடும். நமது நாகரிகத்தி லுள்ள தீங்குகளை மாத்திர மின்றி, நன்மைகளையும் அவர் பாராட்டுவாரானால், நாமும் காந்திக்கு உதவி செய்யலாகும் என்று நினைப்பது, கர்வமாகாது.”

——பா.

இலங்கையும் இலங்கையரும்*

Rev. F. கிங்ஸ்பேரி.B. A; சென்னை

40 வருஷங்களுக்கு முன்னே தமிழ் நாட்டிலே ஒரு கிராமத்திலே சில வருஷம் கழித்தேன். நான் இருந்த வீட்டுக்கெதிர் வீட்டிலே ஒருவர் மாலை தோறும் இராமாயண வசனம் வாசிப்பார். அத்தெருவிலுள்ளவர்கள் எல்லாரும், வாசிக்கப்படும் இராமாயணக் கதையைக் கவனத்தோடு கேட்பார்கள். அப்பொழுது ஒரு நாள், அவர்கள் சிலரிடம், என் சொந்தத் தேசம் இலங்கை யென்றும், நான் இலங்கைக்குப் பலமுறை போய் வந்தேனென்றும், என் பந்துக்கள் அநேகர் அங்கே யிருக்கிறார்களென்றும் சொன்னேன். அவர்களோ, சிறுவனாயிருந்த என்னைப் பார்த்து, "நீயாவது இலங்கையையாவது பார்த்ததாவது?" என்று பரிகாசம் பண்ணினார்கள். இதன் காரணம் முதலிலே எனக்குப் புலப்படவில்லை. பின்பு தெரிந்தது: இலங்கையிலே இன்னும் இராட்சதர்கள் இருக்கிறார்களாம். விபீஷணர் சிரஞ்சீவியாய் இன்னும் இலங்கையை ஆள்கிறாராம். மனுஷர் யாரும் இலங்கைக்குப் போகக் கூடாதபடி, அதைச் சுற்றிலும் கடலிலே பெரிய சுழிகள் இருக்கின்றனவாம். எந்தக் கப்பல் போனாலும் கடற் சுழியிலே அகப்பட்டு அமிழ்ந்து போகுமாம். ஆகவே, நான் இலங்கைத் தீவானென்றும்,

* The blocks illustrating this article, like several others before now, were kindly lent to me by the Secretary, C. L. S. Madras, to whom my best thanks are due. *Ed.*

அங்கே பலமுறை போயிருக்கிறே னென்றும், அங்கே என் பந்துக்கள் இருக்கிறார்க ளென்றும் நான் சொன்னதெல்லாம், அவர்களுக்குப் பைத்தியம் போலத் தோன்றினது. வேறு சிலரோ, "நானும் அறியேன், அவளும் பொய் சொல்லாள்" என்றதுபோல, "நீ சொல்கிற இலங்கைத் தீவு வேறு, இராமாயணத்திற் சொல்லப்பட்ட இலங்கை வேறு" என்றார்கள். இராமேசுவரம், தனுஷ்கோடி, சேது (=இராமர் அணை) ஆகிய இவை யெல்லாம், என் இலங்கையை அடுத்திருப்பதால், இதுவே இராமாயணத்திற் சொல்லப்பட்ட இலங்கை என்பதை இவர்கள் கவனிக்கவில்லை. இன்னும் வேறு சிலர், "உன் இலங்கை



முத்துக் குளித்தல்.

யிலே இராவணன் கோட்டை யிருக்கிறதா? இலங்காபுரி என்னும் பட்டணம் எங்கே? அசோகவனம் எங்கே?" என்று என்னைக்கேட்டார்கள். இப்போது இதை வாசிக்கும் சிலருக்கும் இப்படிப்பட்ட சந்தேகம் வருமோ என்று ஓரெண்ணம் பிறக்கிறது. என் வார்த்தையை நம்பாவிடினும், இப்பொழுது இலங்கைக் காப்பித் தோட்டம், தேயிலைத் தோட்டம், கறுவா (=இலவங்கப் பட்டைத்) தோட்டங்களிலே வேலை செய்யும் இலட்சக் கணக்கினர் இந்தியரையும், கொழும்பு, யாழ்ப்பாணம் முதலிய பட்டணங்களிலே வர்த்தகஞ் செய்யும் பல்லாயிரவர் இந்தியர்களையும் கேளுங்கள்; அவர்கள் சொல்வதை யாவது நம்புங்கள். சிரஞ்சீவி அநுமான் என்னும் வானரவீரனை நீங்கள் எனக்குக் காட்டும்போது நானும் சிரஞ்சீவி விபீஷணுழ்வாரைக் காட்டுவேன். இஃதிப்படி யிருக்க.

"லங்கா" (Lanka) என்னும் சமஸ்கிருத பதத்துக்குத் "தீவு" என்பது பொருள். ஆகவே இஃது ஒரு தீவுக்கும் இயற் பெயர் அல்ல. 'ஸிம்ஹலம்' என்னும் பெயரே சிங்களம் எனத் தமிழிலும் (Ceylon) என ஆங்கிலத்திலும் மருவிற்று. ஈழம் என்பதே இதற்குத் தமிழ்ப் பெயர். (ஈழம் = பொன்).

இலங்கை இந்தியாவை அடுத்து, அதன் தெற்கேயுள்ள ஒரு பெருந் தீவு. தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள கோடிக்கரை முனைக்கும் இலங்கைத் தீவிலே வட பாகத்திலுள்ள காங்கேயன் றுறைக்கும் உள்ள தூரம் 37 மைல் மட்டுமே. இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த இராமேசுவரந் தீவிலுள்ள தனுஷ்கோடிக்கும் இலங்கையைச் சேர்ந்த மன்னுர்த் தீவிலே தலைமன்னர் என்ற ஊருக்கும் இடையேயுள்ள தூரம் 20 மைல் மட்டுமே.

இலங்கை உருவத்தில் மாம்பழம் போன்றது. நீளம் வடக்குத் தெற்கு 271 மைல். பெருகிய இடத்திலே அகலம் 137 மைல். சுற்றளவு 760 மைல். விஸ்தீரணம் 25,300 மைல். கொஞ்சங் குறைய மைசூர் சமஸ்தான அளவுள்ளது. கரையடுத்த பாகம் சமவெளிகளே. மத்திய பாகம் பீடபூமியும் பெரிய மலைகளும் உள்ளது. பேதுருதலாகலை, சிவனெளி பாதம் என்னும் மலைகள், உதகமண்டலம், கோடைக்கானல்போல உயர்ந்தவைகள். சிவனெளிபாதம் என இப்போது தவறாய் வழங்கும் மலை,

தமிழிலக்கியத்திலே சமனொளிபாதம் எனச் சொல்லப்படும். அதில் கௌதம புத்தரது திருவடிகள் என இரண்டு பாதங்கள் கல்லிற் செதுக்கப்பட்டுள்ளன. ஆயின் அவற்றின் பருமையோ ஐந்தரை அடி நீளம். மகாபவிகங்கை, களனிகங்கை, காலுகங்கை, வளவைகங்கை ஆகிய நாலு ஆறுகள் உண்டு. இவற்றுள் முந்தியது 150 மைல் நீளமுடையது; மற்றைய மூன்றும் தனித்தனி 70 மைல் நீளமுடையன. இவைகளைத் தவிர பல அருவிகளும் ஓடைகளும் உண்டு. நிலவளம் நீர்வளம் இரண்டும் அமையப் பெற்றதும், உஷ்ணதேச தாவர விருத்தி இயற்கையால் அருளப் பட்டதுமான இலங்கையிலே பல பல பாகங்கள் கண்ணைக் கவரும் காட்சிகள் உள்ளன. உலகத்திலே யுள்ள மிக அழகிய தேசங்களிலே இலங்கையொன்று என்பது உபசார வார்த்தையல்ல, முற்றும் மெய்யேயாம். இலங்கையிலுள்ள காடுகளில், பாலை கருங்காலி முதிரை முதலிய பெரிய மரங்கள் உண்டாகின்றன. அவைகளில் யானைகள் உண்டு. பெரு மரங்களை இழுப்பதற்கும் தூக்குவதற்கும் யானைகள் உபயோகிக்கப் படுகின்றன. தென்னை பனை காப்பி தேயிலை புகையிலை ஏலம், இலவங்கப்பட்டை முதலியன உண்டுபண்ணப் படுகின்றன. மன்னாருக் கருகிலே குளிக்கப்படும் முத்து மிகச் சிறந்தது. இலங்கையிலே மாணிக்கம், பூனைக்கண், சந்திரகாந்தம் முதலிய விலையுயர்ந்த இரத்தினங்கள் விளைகின்றன.

(தொடரும்)

மீன் பிண்ணாக்கு எரு

வெள்ளச் சேதத்தாலும் வேறு காரணங்களாலும் கெட்டுப்போன நஞ்செய்களுக்கு இதனினும் சிறந்த உரம் கிடையாது' இந்த எரு சுத்தமானதாயும் சத்தானதாயும், வேறு கடற்பொருள்களும் மலிவாய்க் கிடைக்குமிடம் :— சர்க்கார் மச்சலாகா உதவி டாரக்ராக இருந்து சமீபத்தில் பென்ஷன் பெற்றுள்ள ராவ் பகதூர் வி. கோவிந்தன் அவர்கள் (B. A., F. Z. S.) புதிதாக ஸ்தாபித்துள்ள

Indian Marine Products Co, Calicut.

LIX



இலவங்கப் பட்டை உரித்தல்.

LVIII



புத்த பாதம்.



யானைக் கூடம்.

தேயிலை கிள்ளுதல்.

373

பல துறைப் பொறுக்கு மணிகள்
பத்திரிகை ஆராய்ச்சி

(334-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

உடம்பின் மேல் தோல்—இரத்தம் தசை கொழுப்பு எலும்பு முதலியவற்றை யெல்லாம் உட்பொதிந்து கவசம் போல் காப்பதுமன்றி, தன்னிடத்துள்ள பல கோடி நுண்ணிய துவாரங்களின் வழியாக உடம்பிலுண்டாகும் மலங்களை வெளியே தள்ள நமது மேல் தோல் உபயோகமாகின்றது என்பதைப் பலர் அறிந்திருப்பர். இத்தோல் நல்ல நிலைமையி லிருப்பின், பல நோய்கள் நம்மை அணுகா. ஒவ்வொரு நாளும் நீராடும் பொழுது, ஒரு சிறங்கை எண்ணெய்யை உடம்பு மேலெங்கும் படும்படி நன்றாய் இழுத்துத் தடவி அரக்கித் தேய்த்து, பிறகு சவர்க்காரத்தால் சுத்தி செய்து வந்தால், உடம்பின் மேல் தோல் தன் தொழிலை நன்குசெய்யும்படி நல்ல நிலைமையி லிருக்கும்.

கண்ணில் புல்—இங்கிலாந்தில் ஒரு குடியானவன் கண்ணுக்குள் ஒரு நாள் ஏதோ விழ, அதை எடுக்க முடியாமல் அவன் சில நாள் வருந்தினான். நோவு அதிகரிக்கவே ஆசுபத்திரிக்குச் சென்றான். அங்குள்ள கண் வைத்தியர் அவன் மேலிமையைக் கிழிப்பார்க்க, கண்ணுக்குள் ஒரு வெடித்த புல்வித்தும், அதிலிருந்து முளைத்த ஒரு சிறு பசும் புல்லும் இருப்பதைக் கண்டெடுத்தார். வித்துக்கள் முளைக்கிளம்பக் கொஞ்சம் ஈரமும் சூடுமே வேண்டும்; கண்ணிமைக்குள் இவ்விரண்டும் சேர்ந்திருப்பதால், கண்ணுக்குள் விழுந்த புல்வித்து, அங்கேயே முளைத்து வளரலாயிற்று!

முதுகுத்தண்டே காது—பிறவிச் செவிடனும் ஊமையுமான யூஜீன் ப்யூட்டர் மீஸ்டர் என்னும் வாலிபன், ஸ்விட்ஸர்லாந்தில் பெர்ந் நகரவாசி, முதுகுத்தண்டின் வழியாக ஸங்கீதத்தைக் கேட்கிறானாம். மனிதர் பேச்சொலியையும், பக்கத்தில் உண்டாகும் பேரொலியையும் இப்படிக் கேட்க முடியவில்லை; சங்கீத வாத்தியத்துக்கும் அவனுக்கும் இடையே யாராவது நின்றால், அல்லது வேறு தடையிருந்தால், சங்கீதத்தையும் கேட்க முடிய

4

வில்லை; அப்படியொரு தடையும் இல்லாவிட்டால், சங்கீதத்தை அவன் உணர்ந்து அநுபவிக்கிறான். சங்கீதம் வாசிக்கும் பொழுது, தன் முதுகுத் தண்டுக்குள் உள்ள நரம்புக் கசேரின் வழியாக மூளைக்கு ஒலியலைகள் செல்வதை அவன் உணருகிறான்; அவனுக்கு அது மகிழ்ச்சியைத் தருகிறது. அவன் பேசுவதெல்லாம் கைவிரல் சமிக்ஞைகளால் தான். வைத்திய நிபுணர்கள் அவனைச் சோதனை செய்து பார்த்து, விவரம் விளங்காமல் மயங்குகின்றனர்.

பச்சை மரங்களைச் சாயங் காய்ச்சுதல்—முறையே ஜெர்மனியையும் அமெரிக்காவையும் சேர்ந்த இரண்டு ரஸாயன நிபுணர், பச்சை மரங்களுக்குப் பலவித நிறங்களை யூட்டி வருகின்றனர். மஞ்சக் கடம்பு, பலா, தேக்கு, கருங்காலி முதலிய சில மரங்களுக்கு இயற்கையிலேயே வெவ்வேறு நிறங்கள் அமைந்திருக்கின்றன. இவர்களோ, எந்த மரத்துக்கும் எந்த நிறம் வேண்டினும் ஊட்டி வருகின்றனர். வெவ்வேறான இருபது நிறச் சாயப் பொருள்களைக் குப்பிகளில் வைத்திருக்கின்றனர். நிற மூட்ட வேண்டிய மரத்தின் தூரில் அல்லது வேர்களில் பல துளைகளைச் செய்து, முதலில் மரத்தின் (நம்முடலில் இரத்தம் போன்ற) சாரத்தை வாங்கி விடுகின்றனர்; பிறகு ஊட்டவேண்டிய சாயப் பொருளை உள்ளே பீச்ச, மர அணுக்களின் கிராகிய சக்தியால், சாயம் மரமெங்கும் உச்சிவரையும் ஏறிப் பரவி விடுகின்றது. இவ்வாறு சாயமேற 2 முதல் 10 நாள் வரை செல்லும். பிறகு மரத்தை வெட்டி விடலாம். பலகைகளும் கட்டைகளும், எங்கே அறுத்துப் பார்த்தாலும் ஊட்டின சாய நிறமாகவே இருக்கும். பிறகு மரத் துண்டுகளைக் கழுவினாலும், கொதிக்கவைத்தாலும், வெயில் மழையில் போட்டுவைத்தாலும், எவ்வளவு காலமானாலும், சாயம் மாறுவதில்லை. இவ்வண்ணம் சாயம் ஊட்டுவதில், மரத்துக்குள் இயற்கையிலுள்ள பூச்சி புழுக்களும் மடிந்து போகின்றபடியால், மரம் பின்பு மக்கிக் கெடுவது மில்லை. இப்படிச் சாயங் காய்ச்சிய பலவகை மரங்களைக்கொண்டு வீடுகளுக்கு வேண்டிய பெட்டிகள், சோடிப்புத் தட்டுமுட்டு சாமான்கள் செய்தால் எவ்வளவு அழகா யிருக்கும்!

உலகில் உயர்ந்தோன் — ஆம்ஸ்டர்டாம் நகரத்து "லாப்டி" (Lofty—உயர்ந்த) என்பவன் 9 அடி 3½ அங்குல உயரமும் அதற்கேற்ற பருமனுமுள்ளவன். அவன்

தந்தை—சித்திரக் கூடை முடையும் தொழிலாளி—யின் உயரம் 5–8" தான்; அவன் தாயும், உடன் பிறந்த சகோதரிகள் ஐவரும் சாதாரண மனிதரே. அவன் மட்டும் ஏழாவது வயதிலேயே ஏழடி உயரம் இருந்தானும்; குடும்பத்தில் வேறொருவருமே அப்படி யில்லை. இப்பொழுது அவனுடைய காலை போஜனத்துக்கு, 15 முட்டைகள், 3 தட்டு, புகைமீன், ஒரு பெரிய இறைச்சித் துண்டு, ஓட்மீல் சூப் 2 தட்டு, வெண்ணெய் தடவிய 7 ரொட்டித் துண்டு, 8 கப் டீ, இவ்வளவும் போதும். அவனுடன் கைகுலுக்கும்போது சாதாரண மனிதர் தானறியாமலே நடுங்குகின்றனர்; அவன் மோட்டார் டாக்ஸி வண்டியில் ஏறும்போது, வண்டியே நடுங்குகின்றது. வீமன், கடோற்கசன், கும்பகர்ணன் முதலியோர் இப்படிப்பட்டவரே போலும்.

மாஸ்கோவில் கவிவாணர்—உலகம் அறியாத கவிவாணர் பலரைப் பத்திராசிரியர்கள் அறிவர். ருஷியாவில் உள்ள மாஸ்கோ நகரத்தில் எண்ணாயிரம் கவிவாணர் வரை இருக்கின்றனராம்! இவர்களில் ஈராயிரவர்க்குக் கவி பாடுவதையன்றி வேறு தொழிலில்லை; மூவாயிரர் சமய கவிகள்; மிகுந்த மூவாயிரர், தாம் உண்டாக்கிய கவிகளைப் பாடித் திரிபவர். மாஸ்கோவுக்கும் நம் மூருக்கு முள்ள நெடுந் தூரத்தை நினைந்து சந்தோஷப்படுகிறோம்.

தீர்க்க ஆயுள்—இவ்விஷயத்தைப்பற்றிப் பலவித ஆராய்ச்சிகள் செய்துள்ள ஒருவர், சாதாரண மனிதரைவிட விசேஷ புத்திக் கூர்மையுள்ள மேதாவிகளும் உழைப்பாளிகளும் நெடு நாள் சீவித்திருக்கின்றனரென்று கூறுகிறார். சாமானியர் 62 ஆண்டிருந்தால், மேதாவிகள் 67-69 ஆண்டுகள் வரை வாழ்கின்றனராம். பக்திமான்களும் கவிவாணர்களும் மட்டும், நீண்டு வாழாது, அகாலமரணத்தை அடைகின்றனராம். பிரிட்டிஷ் பார்லிமெண்டின் அக்யக்ஷர் (Speaker) களின் சராசரி வயது, 80க்குக் குறைவில்லையாம். "மாடர்ன் ரிவியூ" பத்திராசிரியர், தம் பத்திரிகைக்கு நெடுங்காலமாய் எழுதிவரும் இருவர்க்கு, 86 வயதுக்கு மேலாயிற்றென்று கூறுகிறார்.

பிறவியிற் சிறப்பு—வெள்ளைக்காரரெல்லாம் பிறப்பிலேயே பிறசாதியரைவிடச் சிறந்தவர், மேம்பட்டவர் என்னும் கூற்றுக்கு, எவ்விதமான அத்தாட்சியும் இயற்கையில் இல்லையென்று பலமேதையர் கூறுகின்றனர். மனிதனது நாகரிக வளர்ச்சியைக் கவனித்துப் பார்த்தாலுமே,

மண்டையோட்டை அளந்து பார்த்தாலுமே, மற்று எவ்வண்ணம் ஆராய்ந்து பார்த்தாலுமே, அக் கூற்று அடிப்படையில்லாத வீணுரையாகவே காண்கின்றதென்று ஐரோப்பிய மேதாவிகளே கூறுகின்றனர்.

தேனீக்களும் மின்சார சக்தியும் — இங்கிலாந்திலே தேனீக்களை வளர்த்துத் தேன் வியாபாரம் செய்துவரும் மாத்யூஸ் என்பவர், மின்சார சக்தியைக்கொண்டு தூண்டி, உரிய காலத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்பே, தேனீ அரசியை முட்டையிடவும், உழைக்கும் ஈக்களைத் தேன் தேடி வரவும் செய்து, மற்ற வியாபாரிகளிடம் இல்லாத புதுத் தேனைச் சம்பாதித்து விட்டனர். உரிய காலத்துக்கு முன்பு செய்வது கிடக்க, உரிய காலத்திலே தத்தம் கடன்களைச் செய்து முடிக்கும்படி மக்களில் பலரைத் தூண்டி வினை முடிக்கும் சக்தியொன்று அகப்பட்டால், உலகம் எவ்வளவோ மேன்மையுறும்.

தொழிற் சாலைகளில் வைரங்கள்—நவமணிகள் என்றால் நகைகளைப் பற்றின நினைப்பே நமக்குச் சாதாரணமாய் உண்டாகிறது. எனினும், அனேகம் தொழில்களில் (உருக்கினும் வலிய) வைரங்கள் உபயோகமாகின்றன. உயர்தரக் கடியாரங்களில் வைரச் சின்னங்களை உபயோகிப்பதை நாம் அறிவோம். மோட்டார் வண்டிகளின் பல பாகங்களைச் சாணை பிடித்து மெருகிடும் எமரி சக்கரங்களை ஒழுங்கு படுத்திப் பதனிட, வைரங்களே வேண்டுமாம். அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களிலுள்ள ஒரு மோட்டார் வண்டிச் சாலையில் மட்டும் சுமார் ¾ கோடி ரூ. மதிப்புள்ள வைரங்கள் இவ்வாறு உபயோகத்தி லிருக்கின்றனவாம். இவ் வைரங்கள் ¼ காரட்டு முதல் 1½ காரட்டு வரை நிறையுள்ளன. உபயோகத்தில் தேய்ந்து தேய்ந்து மிகக் குறுகிய பின், இக் கற்கள், நகை வியாபாரிகளுக்கு விற்றுவிடப் படுகின்றன.

1921-ம் வருஷத்து ஜன சங்கைப்படி, இந்தியாவின் ஜனத்தொகை 31 கோடியே 35 லக்ஷம் சில்லரையாகும். எனவே, 1911-ம் வருஷத்து ஜனசங்கைக்கு மேல் சுமார் 38 லக்ஷம் அதிகம். இந்த மொத்தத்தில், பெண்களைவிட ஆண்கள் ஒரு கோடி அதிகம். ஹிந்துக்கள் 21 கோடியே 67 லக்ஷம் பேர்; முஸல்மான்கள் 6 கோடியே 87 லக்ஷம் பேர்; கிறிஸ்தவர் 4¾ லக்ஷம்; சீக்கியர் 32 லக்ஷம்; ஜைனர்களும் பௌத்தர்களுமாக 1 கோடி 27 லக்ஷம்; பார்ஸிகள் 1 லக்ஷம்; ஹிந்துக்களுக்குள், பிராமணர் 14 லக்ஷம்;

பிராமண ரல்லாதவர் 143 லக்ஷம் ; 'கீழ் சாதி'களாக ஒடுக்கப்பட்டவரோ—5 கோடியே 27 லக்ஷம் ; ஐரோப்பியர்—1¾ லக்ஷமும், ஆங்கிலோ—இந்தியர்கள் 113 ஆயிரமும் தான். பால் வகுப்பில், ஆண்களும் பெண்களும் சரிசமமின்றி, பெண்கள் குறைந்திருப்பது, கல்கத்தா பம்பாய் முதலிய நகரங்களில் மற்ற விடங்களில்விட அதிகமாயிருப்பது, கவலையைத் தருகின்றது. குஜ்ஜராத்துக் குடியானவர்களான 'பத்திதார்' என்னும் சாதியார்க்குள், கலியாணப் பெருஞ் செலவை அஞ்சி, பெண் சிசுக்களை அபினைக் கொடுத்துக் கொன்றுவிடும் வழக்கம் அதிகம் பாவியிருக்கிறதென்றும் ; 12 கிராமங்களை வீடு வீடாகத் தான் பரிசோதித்துப் பார்த்ததில், சென்ற 25 ஆண்டுகளுக்குள், ஒரு பெண் சிசுவையேனும் இப்படிக் கொலை செய்திராத வீடே கிடையாதென்றும் ; கொலைக் குரிய தண்டனையை விதிப்பதா யிருந்தால், பத்திதார்கள் அனைவரையுமே தூக்கிலிட வேண்டு மென்றும், பத்திதாரில் ஒருவரே மகாத்மா காந்திக்கு எழுதி யிருக்கும் செய்தி, இத் தருணத்தில் கவனிக்கத் தக்கது. மற்ற விடங்களிலும் சாதியார்க்குள்ளும், இவ்வண்ணம் பெண் சிசு ஹத்தி செய்யாவிட்டாலும், பெண்களை உபேக்ஷையோடு நடத்துவதாலும், ஆண்களைப் போல் பேணாததனாலும், நோய்கள் க்ஷாமம் முதலியன நேர்ந்த காலங்களில்——இவை சிறிது மில்லாத நாள் நமது புண்ணிய பூமியிலே என்றுமே எங்குமே யில்லை யன்றோ?——வருந்துபவர் பெண்களென்றால் அசட்டை செய்வதனாலும், இக் குறை நேர்ந்திருக்கலாகும். நாட்டின் நலத்தை நாடுவார் எல்லோரும் கவனித்தற் குரியதிது.

அதிசயமான நீர்ப்பாய்ச்சல் வேலை—இந்தியாவின் வடமேற்குப் பாகத்தில், ஸட்லெட்ஜ் நதி தீரத்தில், அந்நதியை நான்கு அணைகளால் நான்கிடங்களில் தடுத்து, இப்பொழுது நீர்வளமின்றி யிருக்கும் பிரதேசத்தைச் செழிக்கச் செய்யும் வேலை நடந்து வருகிறது. இவ்வாறு புதிதாக நீர்வளம் பெறும் பிரதேசம், 250 மைல் நீளமும் 350 மைல் அகலமு முள்ளதாகும். புதிதான அணைக்கட்டால் ஏற்படும் 4 பெரும் கால்வாய்களில் ஒவ்வொன்றும் சுமார் 15 லக்ஷம் ஏகரா பூமிக்கு நீர்வளமளிக்கும். இவ்வேலையின் உத்தேசச் செலவு மதிப்பு ரூ. 15¾ கோடியாகும். இவ்வேலை முடிந்த பின் புதிதாக ஆண்டுதோறும் விளையும் பருத்தி, ஆமணக்கு, கோதுமை முதலிய தானியங்களின் விலை மதிப்பு ரூ. 37½ கோடியாகும்.

இவ்வேலையினால் ஸர்க்காருக்குச் செலவான முதலுக்கு நூற்றுக்கு 30 அல்லது 40 விகிதம் வருஷ வட்டி கிடைக்கு மாம். இவ்வேலையை ஒட்டியே, ஸிந்துப் பிரதேசத்தில் 7000 மைல் கால்வாய்களும் 80 லக்ஷம் ஏகரா நீர்ப்பாசன மும் புதிதாக ஏற்படும் மற்றொரு வேலையும், 18 கோடி ரூ. செலவில் நடக்கிறது. இவ்விரு வேலைகளுமாகக்கூடி ஒரு கோடி ஏகரா பூமியைப் புதிதாக விளையச் செய்யுமென்றால், இவற்றின் பெருமையும், இவற்றால் உலகத்துக்கே விளையக்கூடிய பெரும் பேறும் ஒருவாறு ஊகிக்கலாகும். அப்பொழுதேனும் நமது நாட்டின் பஞ்சமும் பட்டினியும் ஒருவாறு நீங்குமோ, அல்லது பண்டம் ஒரு பக்கமும் பலன் ஒரு பக்கமும் ஆகவே முடியுமோ, கடவுளே அறிவார்.

நாணயமான நடத்தை—பிரான்ஸ் தேசத்துப் பத்திராதிபர் ஒருவர், ஒரு பரீக்ஷை பார்த்து, அதன் பலனை வெளியிட்டிருக்கிறார். நாட்டில் பல தொழில்களிலும் பல துறைகளிலும் பிரமுகர்களான நூறு பேரைத் தெரிந்தெடுத்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும், "தங்களுக்கு நான் நாலு பிராங்கு கடன் கொடுக்கவேண்டுமே; அதை மறந்துவிட்டேன்; இப்பொழுதே ஞாபகத்துக்கு வந்தது; அந்தப் பணத்தை தபால் முத்திரைகளாக இதில் அடக்கம் செய்து அனுப்பி யிருக்கிறேன்" என்று ஒரு கடிதமும், ஸ்டாம்புகளும் அனுப்பினர். 100 ல் 66 பேர்களே தங்களுக்குக் கடன் கொடுக்க வேண்டியதில்லை யென்று ஸ்டாம்புகளைத் திருப்பியனுப்பினர், மிகுந்த 34 பேர் வழிகளும் ஸ்டாம்புகளைக், கிடைத்தது லாபமென்று, வைத்துக் கொண்டு விட்டனர். இதனால், சாதாரண மனிதரில் மூன்றில் ஒருத்தருக்கு நாணயமில்லை யென்று அவர் கூறுகிறார். தங்கள் தங்களுக்குரிய வேலை அவசரத்திலும் தொந்திரவிலும் சிலர் இதைக் கவனிக்காம லிருந்திருக்கலாமென்பது நிற்க; ரயில் பிரயாணத்திலும், சுங்கச் சாவடிகளிலும், மற்ற விஷயங்களி லெல்லாம் யோக்கியமாயும் நாணயமாயும் நடப்பவர்கள் கூட, டிக்கட்டில்லாமலும், கீழ் வகுப்பு டிக்கட்டுக்களோடு மேல் வகுப்பில் பிரயாணம் செய்தும், சாமான்களை மறைத்தும் ஏமாற்றுவதை நாம் தினசரி அநுபவத்தில் காண்கிறோம். மொத்தத்தில், போலீசாருக்கும் தண்டனைக்கும் பயந்தே மக்கள் நாணயமாய் நடக்கிறார்களென்றும், கண்டு பிடிக்க முடியாமல்

ஏமாற்றக் கூடுமானால் பலர் ஏமாற்றவே செய்வாரென்றும் சொல்லலாம்.

ரஸ வாதம்—பாத ரஸத்தின் உதவியைக் கொண்டு செம்பு பித்தளை முதலிய தாழ்ந்த லோகங்களைத் தங்க மாக்கிவிட நெடுங் காலமாகப் பலர் முயன்று வருவதும், அவர்களிற் சிலர் அம் முயற்சியில் சித்தி பெற்றனர் என்று கூறுவதும் பிரசித்தம். இதனாலேயே அதற்கு 'ரஸ வாதம்' என்ற பெயர் ஏற்பட்டது. ஒரு லோகத்தை மற்றொன்றாய் மாற்ற முடியாது என்று இதுகாறும் நம்பியிருந்த அறிஞர்கள், ரஸவாதத்தால் ரஸாயன சாஸ்திரம் முன்னுக்கு வந்ததேயன்றி, 'ரஸ வாதத்தில், அதாவது செம்பைப் பொன்னாக்குவதில், எவருமே இதுவரை சித்தி பெறவில்லை என்று கூறி வந்தனர். இப்பொழுது சில நாளாக, பகாப் பொருள்களாக நினைத்துவந்த நுண்ணிய அணுக்களை மின்சார சக்தி (electricity) யையும் ரேடியத்தையும் (radium) கொண்டு ஆராய்ச்சி செய்ததன் பயனாக, அவ் வணுக்களுமே பகாப் பொருள்களல்ல; அவற்றில் ஒவ்வொன்றும் எலக்ட்ரான் (electron) என்னும் அதி நுட்பமான சக்தி யணுக்கள் பலவற்றின் சேர்க்கையால் ஆயினதாகும்; 'பகாப் பொருள் அணுக்கள்' ஒன்றுக்கொன்றுள்ள பேதம், இந்த எலக்ட்ரான் சக்தியணுவின் தொகை ஒன்றுக்கொன்று மாறுபட்டிருப்பதனால் (அதாவது, ஓரணுவில் 80 எலக்ட்ரான், மற்றோர் அணுவில் 75 எலக்ட்ரான், வேறொன்றில் 8 என்றிருப்பதால்) ஏற்படுகிறதே யன்றி வேறில்லை; அதனால், அந்த எலக்ட்ரான் குழுவைப் பிரித்துத் தொகை மாற்றி விட்டால், ஒரு 'பகாப் பொருளை' மற்றொரு 'பகாப் பொரு'ளாக மாற்றி விடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டு, அவ் வண்ணம் சில மாறுதல்கள் நிகழ்ந்ததையும் சாஸ்திரஞ்ஞர் வெளியிட்டு வந்தனர். கடைசியாக எட்டியுள்ள செய்திப்படி, அடால்ப் மீத் (Adolf Miethe) என்னும் ஜெர்மனி தேசத்து சாஸ்திரஞ்ஞர், பாத ரஸ அணுக்களை அவ்வாறு உடைத்து நிலை குலைத்து ஆராய்ந்து பார்த்ததில், அவற்றினின்றும் தனித் தங்கப் பொடிகள் கிடைத்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால், இந்த 'ரஸ வாதம்' தங்கத்தின் விலையைத் தாழ்த்தி விடாதாம்; ஏனெனின், இம் முறைப் படி சிறிது தங்கத்தைப் பெறுவதற்கும் பல்லாயிரம் பவுன்கள் செலவு பிடிக்குமாம்.

——மா.

நான்கு பிள்ளைகளின் பிறப்பு--திருச்செங்கோட்டை யடுத்த தாழக் கரையைச் சேர்ந்த கருக்கன் பாளையத்தில் கோவம்சத்தினர் ஜாதியைச் சேர்ந்த பெண்ணொருத்தி, சில தினங்களுக்கு முன், ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகளைப் பெற்றாள். இதில் ஆண் மூன்று, பெண் ணொன்று; முதற் பிள்ளை கனமாயிருக்கின்றது; மற்றைப்பிள்ளைகள் 3 பவுண்டு நிறையிருக்கலாம்—லோகோபகாரி.

தாய் தந்தையரின் அன்பு—சிசுவைப் பாதுகாத்து, பக்ஷத்துடன் வளர்த்து வருவது மனிதர்களுக்குச் சுபாவசித்தம். மனிதர்களுக்குக் கீழ்ப்பட்ட அநேக பிராணிவர்க்கங்களில் கூட, தாய் தந்தையர் குஞ்சுகளிடத்தில் அன்பு பாராட்டுவதைக்காண வியக்கத்தக்கதாயிருக்கும்:—ஸால்மன் என்னும் மீன், முட்டைகளை இடுவதற்கு முன், ஆண்பெண் இரண்டும் சேர்ந்து, சிறிய கற்களைக் குவித்து, பிறகு கற்களின் மத்தியில் தண்ணீர் அடித்துக் கொண்டு போகாதபடி முட்டைகளை வரிசையாய் இடும்; இட்ட பிறகு குஞ்சுகள் வெளிவரும் அளவும், அவ்விடத்திலேயே சுற்றிக்கொண்டிருக்கும். அஹோலாடில் என்னும் ஒருவகைத் தவளை, தன் முட்டைகளை காலில் சுற்றிக்கொண்டு தண்ணீரில் முழுகி, சிறிய மீன் குட்டி போன்ற குஞ்சுகள் வெளிவரும் அளவும், ஒரு மூலையில் இரையெடாமல் பதுங்கிக்கிடக்கும். மற்றொரு தவளை இனம், முட்டைகளை வாயினால் விழுங்கி, நெஞ்சில் வைத்துக்கொண்டு பாதுகாக்கும். இக்தியோபிஸ் என்னும் ஒரு வகைப்பாம்பு, முட்டைகளைச் சரீரத்தினால் சுற்றிக்கொண்டு, அவைகள் வெடிக்குமளவும் இரை தேடாது காக்கும். எரி ஆறுகளில் சஞ்சரிக்கும் முதலை, தன் முட்டைகளை மணலில் பள்ளம் தோண்டி, அதனுள் புதைத்து, சில நாள்கள் வரைக்கும் பெண் முதலை அதன் அருகாமையிலேயே சஞ்சரித்துக் கொண்டிருக்கும். முதலைக் குஞ்சு முட்டையினின்றும் வெளிவரும் காலத்தில் சிறிய சத்தமிடும். அதைக் கேட்டுப் பெண் முதலை மணலைப்பறித்துக் குட்டியை வெளியே அழைத்துவரும். பக்ஷிகள் முட்டைகளையும் குஞ்சுகளையும் எவ்வளவு அன்புடன் ஆதரித்துவருகின்றன வென்பதை, அவைகள் கட்டும் கூடுகளினின்றும், ஆகாரம் தேடிக் குஞ்சுகளுக்கு ஊட்டுவதினின்றும் தெரிந்து கொள்ளலாம். சில பக்ஷிகள், கூட்டின் ஒருபுறத்தில் களிமண்ணை வைத்து, அதில் மினுமினுப்பூச்சிகளைப் புதைத்துவிடும்; இரவில் இப்பூச்சிகளின் வெளிச்சத்தைக் கண்டு குஞ்சுகள் படும் ஆநந்தத்திற்கு அளவேயில்லை. மிருகங்கள், குட்டிகளை முலைப்பாலளித்து அன்புடன் பாராட்டுவது எல்லோரும் நன்கறிந்த விஷயம். குட்டிகளைப் பழக்குவதையும், அவைகளுக்குக் கற்பிப்பதையும், தங்களுடைய பற்கள் கொம்புகள் நகங்கள் முதலியவற்றால் அவைகளைக் காப்பாற்றுவதையும், உற்றுப் பார்க்குங்கால், நாம் நம் குழந்தைகளை வளர்ப்பது அதிசய மன்றென்பது தெளிவாகும்.—ராது.

சிலா சாஸன ஆராய்ச்சி

(1922—23)

ஸ்ரீ. V. சாமிநாத சர்மா, சென்னை

ஒரு நாட்டின் முற்காலத்து நிலைமையும், அக்காலத்தில் அநுசரிக்கப்பட்டு வந்த வழக்க ஒழுக்கங்களும் நமக்குத் தெரிவதற்கு ஆங்காங்கு காணப்படும் புராதன கட்டடங்களும் கல்வெட்டுக்களும், தாமிரப்பட்டயங்களுமே வழி காட்டிகளாயிருக்கின்றன. எந்தத் தேசமும், அஃது உயர்ந்த நிலையிலிருந்தாலும், தாழ்ந்த நிலையிலிருந்தாலும், அது தன் பண்டை நிலைமையை அறிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது. இந்தியாவில் இப்பொழுது சிறிது காலமாகவே இந்த உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இதற்குள் பண்டைப் பெருமையைப் பன்னிப் பன்னிப் பேசுவதில் என்ன பயன் என்று சலிப்புக்கொண்டு விட்டார்கள்.

நமது பள்ளிக்கூடங்களில் சரித்திர பாடம் எங்ஙனம் போதிக்கப் படுகிறதென்பதைப் பற்றி நான் இங்கு விரிவாகக் கூறவேண்டுவதில்லை. அது தனியாகக் கூற வேண்டியதொரு விஷயம். ஆனால், தற்பொழுது பள்ளிக்கூடங்களில் படிக்கும் பாடப் புத்தகங்களினால் மாணவர்களுக்குத் தேசபக்தியாவது, வீர உணர்ச்சியாவது ஒன்றும் உண்டாகாதென்பது நிச்சயம்.

நமது நாட்டிடையே பிறந்து வளர்ந்து தேசத்திற்காகவோ, மதத்திற்காகவோ பல தியாகங்களைச் செய்த பெரியோர்களின் வரலாறுகள் நமது மாணவர்களுக்குப் பெரும்பாலும் தெரிவதில்லை. ஆனால் இங்கிலாந்தில் அல்லது அமெரிக்காவில், எந்த வருஷத்தில் எந்த மன்னன் ஆண்டானென்றும், எந்த ஆண்டில் எந்த விதமான குழப்பம் உண்டாயிற்றென்றும் விளக்கமாகக் கூறுவார்கள். இங்ஙனம் நான் கூறுவதனால் மேனாட்டுச் சரித்திரங்களை நமது மாணவர்கள் படிக்கக் கூடாதென்று கூறவில்லை. நமது நாட்டுச் சரித்திரத்தை ஒருவாறாகவாவது உணர்ந்து,

அதற்குத் துணையாகப் பிற நாட்டுச் சரித்திரங்களைப் படித்தால், அதனால் பயன் உண்டாகும் என்றே கூறுகிறேன்.

லார்ட்கர்ஸன் இந்தியாவின் கவர்னர்ஜனரலா யிருந்த போது, ஆங்காங்கு சிதை வுற்றுக் கிடக்கும் புராதன கட்டிடங்கள் கோயில்கள் முதலியவைகளைப் பழுது பார்த்து, அவைகளைப் பாதுகாப்பதற்கு, ஒரு சட்டம் ஏற்படுத்தினார். அஃது இந்தியாவின் சரித்திர முன்னேற்றத்தில் குறிக்கப்படவேண்டியதொரு விஷயமாகும். சரித்திர ஆராய்ச்சிக்காரர்களுக்கு இச் சட்டம் பெரும் பயனை அளித்தது என்பதைப் பற்றி நான் அதிகமாகக் கூறவேண்டுவ தில்லை.

1922—23-ம் வருஷத்திய சென்னைச் சிலாசாஸன இலாகா அறிக்கை சின் னாட்களுக்கு முன்னரே வெளியாயது. இதில் முக்கியமான விஷயங்கள் ஒன்றும் வெளியாகவில்லை. யாயினும், சரித்திரக் காரருக்கு உபயோகமாகும் பொருள்கள் பல இதில் காணப்படுகின்றன. இந்த அறிக்கை சம்பந்தப்பட்ட வருஷத்தில் 683 சிலா சாஸனங்களும், பதினைந்து தாமிரப் பட்டயங்களும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இனி இச் சாஸனங்களில் குறிக்கப்பட்ட சில விஷயங்களைக் கவனிப்போம் :—பல்லவர் காலத்திய சாஸனங்களில், கோவிஜய நந்திவிக்ரம வர்மன் (மூன்றாவது நந்திவர்மன்) ஆட்சிக்காலத்ததான ஒரு தாமிரப் பட்டயத்தை முக்கியமாகச் சொல்லலாம். மேற்படி கோவிஜய நந்திவிக்ரம வர்மன், தன்னுடைய ஆட்சியின் 61-வது வருஷத்தில், 'பட்டத்தாள் மங்கலம்' என்னும் கிராமத்தைச் சேர்ந்த பதினறுவேலி நிலத்தைப் பல கோத்திரங்களும் பல சூத்திரங்களும் உடைய பல வகைப்பட்ட பிராமணர்களுக்குத் தானமாக வழங்கினன் என்று இதில் கூறப்படுகிறது. மூன்றாவது நந்திவர்மன் என்ற இந்த அரசன், பாலியமாக இருந்த போதே அரியணை ஏறினன் என்றும், வல்லப, களபர, கேரள, பாண்டிய, சோழ, துளுவ, கொங்கண இவ்விராஜ்ஜியங்களை ஜயித்தானென்றும், முதன் முறையாக இந்தச் சாஸனத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதற்குமுன் இந்த அரசன் சம்பந்தமாக அகப்பட்ட எந்தச் சாஸனங்களிலும் இவ் விஷயம் கூறப்படவில்லை. இந்த நந்திவர்மன் சைவனென்று சில சாஸனங்களிலும், வைஷ்ணவனென்று சில சாஸனங்களிலும் கூறப்பட்டிருப்பது விநோதமாகவே இருக்கிறது.

கிழக்கு சாளுக்கிய வமிசத்து அரசனான மூன்றுவது குகை விஜயாதித்தனுடைய (கி. பி. 844—888) சேனுதிபதியாகிய பாண்டுரங்கன் என்பவன், தன் அரசனுடைய ஆட்சியின் முதலாவது வருஷத்தில், அரசனுக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகளான சாமந்தரிகளோடு, படையெடுத்துச் சென்று, போயர்களுடைய பன்னிரண்டு காப்பு நிலயங்களை (கோட்டம்புகள்) தாக்கினன்; வேங்கி நாட்டை ஜயித்தான்; காட்டேபு துர்க்கத்தைக் கைவசப் படுத்திக் கொண்டான். சாளுக்கியர் காலத்தியதாக அகப்பட்ட சாஸனங்களில் இதொன்றையே நாம் முக்கியமானதாகக் குறிப்பிட வேண்டும்.

பெல்லாரி ஜில்லாவி லுள்ள சிறுகுப்பா என்ற ஊரில் அகப்பட்டதொரு சாஸனத்தில், மேற்கத்திய சாளுக்கிய அரசர்களில் ஒருவனை திரிபுவன மல்லன் என்று சொல்லப்படும் ஆருவது விக்கிரமாதித்தியனுக்கு, பிரிய கேடலதேவி என்ற ஒரு மனைவி கூறப்படுகிறுள். விக்கிரமாதித்தியனுக்கு இத்தகைய பெயருடைய ஓர் அரசி யிருந்தாள் என்பது இப்பொழுதே முதன் முதலாகத்தெரிய வந்தது. பிரிய கேடலதேவி என்ற இந்த அரசி, மிகுந்த கல்வி அறிவுடையவளென்றும், சங்கீதத்தில் அதிகத் தேர்ச்சி பெற்றவளென்றும் மேற்படி சாஸனத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. இவளுக்குப் பல பாஷைகள் தெரிந்திருந்ததென்றும், இம் மொழிப் புலமையால், இவளுக்கு 'அபிநவ ஸரஸ்வதி' என்ற பட்டப் பெயரும் கிடைத்ததென்றும், இவள் மூன்று ஊர்களை ஆண்டுகொண் டிருந்தாளென்றும் தெரிகின்றன.

சோழ வமிசத்திய சாஸனங்கள் பிரஸ்தாப வருஷத்தில் அதிகமாக அகப்பட் டிருக்கின்றன. முதலாவது பராந்தகச் சோழனுக்கு கோக்கிழானடிகள், வில்லவன் மஹா தேவியார் என்ற இரண்டு மனைவியரே இருந்தனரென்று இது காறும் கிடைத்து வந்த சாஸனங்களால் தெரியவந்திருந்தது. ஆனல் இந்த வருஷத்தில் புள்ளஊர் என்ற இடத்தில் அகப்பட்ட தொரு சாஸனத்தின்படி, பராந்தகனுக்கு "செய்ய புவன சுந்தர மணியார்" என்ளுெரு மனைவி இருந்ததாகத் தெரிகிறது. முற்காலத்தில், கிராம நிருவாகத்தைக் கவனிப்பதற்குக் கிராமச் சபைகள் இருந்தன. இவைகளில் ஒவ்வொரு விஷயத்தையும் கவனிப்பதற்கு, சபையைச் சார்ந்த சில அங்கத்தினர் அடங்கிய பஞ்சாயத்துக்கள் நியமிக்கப் பட்டிருந்தன.

அவைகளில் ஒன்றுக்கு 'சபைவாரியம்' என்று பெய ரென்று பராந்தகன் காலத்திய சாஸன மொன்று கூறுகிறது.

முதலாவது இராஜராஜ சோழனுடைய காலத்திய தாக அகப்பட்ட சாஸன மொன்றில், அவன் (காந்தளூர்) சாலை, தட்டபாடி (தடிகைபாடி ?) தலைக்காடு, நுளம்பபாடி, பிருது கங்கர்வளநாடு, வேங்கைநாடு முதலியவைகளை வரி சைக்கிரமமாக ஜயித்து வந்தான் என்று காணப்படுகிறது. இது காறும் அகப்பட்ட சாஸனங்கள், "காந்தளூர் சாலை கலமறுத்தருளி, வேங்கை நாடும், கங்கை பாடியும், நுளம்பபாடியுந் தடிகை பாடியும், குடமலை நாடும் கொல்ல மும் கலிங்கமும், எண்டிசைப் புகழ்தரு ஈழமண்டலமும், இரட்டபாடி ஏழரை இலக்கமும், திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட" என்று கூறும். பிரஸ்தாப வருஷத்தில் காணப்பட்ட சாஸன மொன்றில், இராஜராஜன், தன் 'தண்டேவி', சாலைக்கல மறுத்தருளினன் என்று காணப்படுகிறது. 'தண்டேவி' என்ற இந்த ஒரு மொழியைக் கொண்டு, இராஜராஜன் தான் நேரில் சென்று சாலைக்கல மறுக்கவில்லையென்றும், தன் சேனையை அனுப்பி மேற்படி செயலைச் செய்வித்தான் என்றும் சிலர் ஊகிக் கின்றனர். இந்த ஊகத்துக்கு எவ்வித ஆதாரமு மிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அரசனே நேரிற் சென்று தண்டேவிச் சாலைக்கல மறுத்தருளினன் என்று ஏன் சொல்லக் கூடாது? இராஜராஜனுக்கு, லோக மஹா தேவியார் என்று அழைக்கப் பட்ட தண்டி சக்தி விடங்கி, சோழ மஹா தேவியார், த்ரைலோக்ய மஹா தேவியார், பஞ்சவன் மஹா தேவி, அபிமான வல்லி, இலாதமா தேவி, ப்ரத்வீ மஹா தேவியார் முதலிய பல மனைவிகள் இருந்தார்கள். இந்த வருஷம் கிடைத்துள்ள சாஸன மொன்றில், அவனுக்கு, செம்பியன் முக்கோக் கிழானடிகள் என்று சொல்லப்பட்ட கன்னார நாச்சிப் பிடாரி நங்கையார் என்ற ஒருமனைவியும் இருந்ததாகத்தெரிகிறது.

இராஜராஜன் காலத்தில் வரிசெலுத்த மறுத்தவர்கள், அல்லது அபராதம் செலுத்த மறுத்தவர்கள் என்ன செய்யப் பட்டார்கள் என்பதைப் பற்றி ஒரு சாஸனம் தெரிவிக்கிறது. நிருபதுங்க ருயந்தாங்கி சதுர்வேதி மங்கலம் என்ற கிராமத்துச் சபையானது, விக்ரம சோழ மூவேந்த வேளார் என்ற அதிகாரியிட மிருந்து ஓர் உத்தரவைப் பெற்றது. அதில், தங்களுக்கு விதிக்

கப்பட்ட அபராதத் தொகையைச் செலுத்தாமல் தப்பி ஓடுகிறவர்களுடைய சொத்துக்களை, அவைகள் எந்த விலைக்கு வருகின்றனவோ அந்த விலைக்கு விற்று, அந்தத் தொகையை கச்சிப்பேட்டிலுள்ள கோயில் கஜானாவில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டுமென்றதும் காணப்பட்டிருந்தன. அக்காலத்தில் கோயில்களின் நிருவாகம் கிராமசபையைச் சேர்ந்த ஒரு பஞ்சாயத்தாரால் கவனிக்கப்பட்டு வந்தது. இப்பஞ்சாயத்து ஆண்டு தோறும் தெரிந்தெடுக்கப்பட்டு, தன் வேலையைக் கவனித்து வந்தது. இப்பஞ்சாயத்தில் சாதாரணமாக எட்டுப்பேர் அங்கத்தினரா யிருந்தனர். இதற்கு "மன்றாடி வாரியம்" என்று பெயர். இவர்கள் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைக் கவனித்ததும், அவைகளிலிருந்து வரும் மேல் வாரத்தைக் கொண்டு வருஷாதி உற்சவங்களைச் செய்தும் வந்தார்கள்.

சோழர் காலத்திய சாஸனங்களில் பல விதமான வரிகள் கூறப்பட் டிருக்கின்றன. சித்தாயம், பஞ்சவாசம், சில்லிறை, எச்சோறு, கூற்றரிசி, ஆற்றுக்கால் அமஞ்சி, ஏரிக்கட்டி, பாடக நெல்லு, உழவிறை, நீர் விலை, வெட்டி தனி ஆள் ஆயம், பாடி காவல், கார்த்திகை அரிசி, கார்த்திகைக் காசு, கார்த்திகைப் பச்சை, தறி இறை, கடை இடை, தட்டார்ப் பாட்டம், செக்குக் கடமை, காலகதப் பாட்டம், இனவரி, வகைந்த காசு, பட்டோலைக் காசு, கண்காணி, கணக்கவரி, முள்ளடி இனம், அச்சுதறி, சாலிகைத்தறி, தூசகத்தறி, பறைத்தறி, உவச்சன் பேர்க் கடமை முதலிய பலவகை வரிகள் கூறப்பட் டிருக்கின்றன. இவைகளிற் பெரும்பாலன விளங்கவில்லை. இவைகளைப் பற்றி விளக்கி எவரேனும் வெளியிடின், அவர் தமிழ் நாட்டிற்குப் பெருந் தொண்டு செய்தவராவார்.

முற்காலத்தில், ஒரு பொருளை அல்லது ஒரு பூஸ்தியை நிருவகிப்பதற்குச் சிலரைச் சேர்த்து ஒரு நிருவாக சபையாக (டைரக்டரேட்) நியமித்து வைத்திருந்தனர். 'டைரக்டரேட்' என்ற இந்த மொழிக்குச் சரியான தமிழ் மொழி 'ஆளுங் கணம்' என்று அக்காலத்து வழக்கச் சொல்லொன்றால் நன்கு தெரியவருகிறது. இப் பொழுது ஆட்சிமுறை சம்பந்தமாகவும், நீதிஸ்தலம் முதலியவைகள் சம்பந்தமாகவும் உபயோகிக்கப்படும் ஆங்கில மொழிகளுக்குத் தகுந்த தமிழ்ச் சொற்கள் அகப்படாமல் தவிக்கின்றோம். இக்கஷ்டத்தை நீக்கும் பொருட்டு,

நாம் பழைய சாஸனங்களையும் செப்பேடுகளையும் சிறிது ஆராய்ந்து பார்த்தால், அநேக பதங்கள் அகப்படும் என்பதில் ஐயமில்லை. நிலவரி முதலியவைகளை வசூல் செய்வோனுக்கு இப்பொழுது 'கலெக்டர்' என்று வழங்கப்படுகிறது. அக்காலத்தில் 'தண்டுவான்' என்று, இதே உத்தியோகத்தை வகித்தவன் அழைக்கப் பட்டான்.

விக்கிரம சோழனுடைய காலத்தில் அகப்பட்டதொரு சாஸனத்தில், திருக் கண்ணபுரத்துக் கிராம சபையில் முந்நூற்று ஐம்பதின்மர் அப்பகத்தவை யிருந்தனர் என்றும், திருக்கண்ணபுரத்து எம்பெருமானுக்கு சித்திரை மாதத்திலும் ஐப்பசி மாதத்திலும் நடைபெறும் உற்சவங்களுக்கும் மற்றும் சுவாமிக்கும் வேண்டிய துணிகளைத் தவறாமல் கொடுத்து வருவதற்காக நான்கு நெசவுக்கார குடும்பங்களை மேற்படி யூரில் குடியேற்றி வைப்பதாக ஐந்து நகரங்களிலுள்ள ஐந்து வியாபாரிகள் ஒத்துக்கொண்டார்களென்றும், இந்த நெசவுக்காரர்கள் எல்லா வரிகளினின்றும் நீக்கப் படுவார்களென்றும், இவர்கள் கோயில் பணியையே செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கின்றன.

இரண்டாவது ராஜாதி ராஜனுடைய ஆட்சியின் ஒன்பதாவது வருஷத்தில், நில அளவு (சர்வே) நடைபெற்றதென்று ஒரு சாஸனம் குறிப்பிடுகிறது. உத்திரமேரூர் கோயில் பிராகாரத்தில் அகப்பட்டதொரு சாஸனத்தில், ஆயிரத் திருநூற்றுவ மாணிக்கம் என்னும் ஒரு 'தேவரடியாள்' அக்கோயிலின் இரண்டாவது பிராகாரத்தையும் அபிஷேக மண்டபத்தையும் கட்டி வைத்ததாகவும், அதற்குப் பதிலாக அவள் கோயிலிலிருந்து சில உரிமைகளைப் பெற்றாள் என்றும் காணப்படுகின்றன. மற்றொரு சாஸனத்தில், மேற் கூறப்பட்ட தாசியும் சிய நாச்சி என்ற வேறொரு தாசியும் மேற் கூறப்பட்ட கோயிலில் சில பழுதுகள் பார்த்தன ரென்றும், இதற் கீடாக சுவாமியின் ரதோற்சவத்தின் போது இவர்களுக்குச் சாமரம் போடும் உரிமையையும், தினம் கோயிலி லிருந்து ஒரு குருணி நெல்லும் வம்ச பரம்பரையாகப் பெற்றுக் கொள்ளும் உரிமையையும் அடைந்தனர் என்றும் கூறுகிறது.

முற்காலத்தில், பெரும் பூஸ்திதியையுடைய கோயில்கள், அதிக வருவாயில்லாமல் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்த கோயில்களை ஆதரித்து வந்தன வென்றும் தெரிகிறது.

பாண்டிய வம்சத்தினரைக் குறித்த சாஸனங்கள் பிரஸ்தாப வருஷத்தில் அதிகமாக அகப்படவில்லை. ஜடவர்மன் திரிபுவனசக்ரவர்த்தி குலசேகர பாண்டியனுடைய காலத்திய சாஸனமொன்றில், கரம்பு நிலங்களை ஜனங்கள் தர்க்காஸ்து செய்து தரும்படி வேண்டிக்கொண்ட வரலாறுகள் காணப்படுகின்றன. திருவள்ளறையைச் சேர்ந்த திருமழிசை தாசர் என்பவர், திருத்தங்கல் மலையில் எழுந்தருளா நின்ற பரமசுவாமிக்கு பூஸ்திதியில்லையென்றும், அதற்காகச் சில கரம்பு நிலங்களை தர்க்காஸ்து செய்து தரும்படியும் பராந்தக சதுர்வேதி மங்கலத்துக் கிராமச் சபையாருக்கு விண்ணப்பம் செய்துகொண்டனர். அங்ஙனமே அவருக்கு நிலங்கள் கொடுக்கப் பட்டன. நாளடைவில் நின்றநாராயணப் பேரேரி என்றொரு கிராமமும் தோன்றியது. மாளவர்மன் சுந்தர பாண்டியனுடைய சிம்மாசனம், "மாளவராயன்" என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. முற்காலங்களில் ஒரு மடங்கட்டி, அங்கே பாரதம், இராமாயணம் முதலிய புராண இதிகாசங்களை வாசிப்பதற்காக பூஸ்திதி ஏற்படுத்தி வைக்கப்பட்டதாகவும், அவைகளிலிருந்து வரும் வரும்படியைக்கொண்டு மேற் கூறப்பட்ட காரியங்கள் நடைபெற்றனவென்றும் தெரிகின்றன.

உரத்தூர் கூற்றஞ்சேர்ந்த மருதூர் என்ற கிராமத்து நிலங்கள் இரண்டு வருஷமாகப் பயிரிடுவாரின்மையால் சாகுபடி செய்யப்படாமல் பாழாய்க் கிடந்தது. இதனால் அரசாங்கத்துக்கு ஏற்படும் நஷ்டத்தை, மேற்படி நாட்டைச் சேர்ந்த எல்லா ஜனங்களும் சேர்ந்து ஈடு செய்து விடுவதாக ஒப்புக் கொண்டார்கள். இதனால் இராஜாங்கத்துக்கும் நஷ்டமில்லை; குடிகளுக்கும் அதிக கஷ்டமில்லை. இதனால் முற்காலத்தில் குடிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இருந்த ஒத்துழைப்பு நன்கு புலனாகும்.

இவை தவிர, கொங்கு நாட்டரசர்களைப் பற்றியும், விஜய நகரத்து மன்னர்களைப் பற்றியும், முஸல்மான் வேந்தர்களைப் பற்றியும் சில சாஸனங்கள் கிடைத்திருக்கின்றன. பொதுவாகக் கூறுமிடத்து, பிரஸ்தாப வருஷத்துச் சிலாசாஸன அறிக்கை சரித்திரக்காரருக்கு நல் விருந்தளிப்பதாயிருக்கிறது என்று கூறலாம். இந்த அறிக்கையில் காணப்படும் அரிய விஷயங்கள், ஆங்கிலமறியாத் தமிழருக்குப் பயன்படா தொழிகின்றனவே என்ற ஒரு விசனம் மாத்திரம் எனக்கு உண்டு.

மதிப்புரை.

1. சுகாதாரபோதினி.—[ஸ்ரீ. K. வரதராஜராவ், L. M. H. பள்ளிக்கூட உபாத்தியாயர், சேலம் விலை. 0—8—0]. இச் சிறு நூல் 3-வது வகுப்பு மாணவருக்காக இயற்றப்பட்டது. தேக சௌக்கியத்தையும் அசௌக்கியத்தையும் பற்றிய மிகப் பல விஷயங்களை மிகச் சுருக்கமாகக் கூறுவது. நூலாசாரியர் வைத்திய சாஸ்திர நிபுணரல்லர். கல்வியிலாகா அதிகாரிகள் 3-வது வகுப்பு மாணவருக்கென்று நியமித்துள்ள சுகாதார போதனை முறைக்கிணங்க, இந் நூல் இயற்றப்பட்டதாம். ஆயின், இம் முறை பொருந்தாததாகத் தோன்றுகிறது: ஏனெனின், இத்தனை விஷயங்களைப் பற்றிச் சிறுவர் சிறிது சிறிது போதிக்கப் படவேனும்—இவ் விஷயங்களிற் பல வைத்திய சூக்ஷுமங்களைத் தழுவியுள்ளன—பொதுவான பெரும்பாடியான சுகாதார தத்துவங்களைப் பற்றி மட்டும் சிறுவர்க்குப் போதிய அறிவைப் புகட்டுவதே நலமாகும். இதைக் கல்வியிலாகா அதிகாரிகள் கவனிப்பாராக.

2. பக்திரச பஜனாமிர்தம்.—[ஸ்ரீ. க. திருமலை ஜக்கய கவுடர் இயற்றியதை ஸ்ரீ. R. திருமலை ஜக்கையா கவுடர் பதிப்பித்தது. கோம்பை, மதுரை ஜில்லா—விலை. 0—8—0] தெய்வ பக்தி விஷயமான தமிழ்ப் பதங்கள்.

3. வர்த்தமான பாரதம்.—[சுவாமி விவேகானந்தர் எழுதியதை ஸ்ரீ. மஹேசகுமார சர்மா மொழி பெயர்த்தது. கம்பநிலயம்—சென்னை—விலை. 0—10—0] இந் நூல் "பாரத நாட்டின் தற்கால நிலை"யைப் பற்றி ஸ்வாமி விவேகானந்தர் எழுதியதன் மொழிபெயர்ப்பு. முதநூல் எழுதியவரோ நம் நாட்டின் தற்கால முன்னேற்றத்தின் மூலகர்த்தர்களுள் ஒருவர்; எனவே, நூலின் சிறப்பையும் கருத்துக்களின் நயத்தையும் பற்றி விரித்துரைக்க வேண்டிய தில்லை. மொழி பெயர்த்தவரும் தமிழ் மக்கள் அறியாதவரல்லர். இம் மொழி பெயர்ப்புத் தமிழரானோர் அனைவரும் படித்துச் சிந்தித்தற்குரியது. மொழிபெயர்ப்பில் வடமொழிச் சொற்றொடர்களும் பிரயோகங்களும் சிறிது குறைந்து, தனித் தமிழர்க்கும் எளிதில் விளங்குவதா யிருப்பின், இந்நூல் இன்னும் மிகப்பயன்படுவதாகும். அடுத்த பதிப்பிலேனும் இதை மறவாது கவனித்தல் நலமாகும்.

விஜயமார்த்தாண்டம்—காதற்பத்து-கற்புப்பத்து.2-ம் பதிப்பு—நவரஸம் கொழிக்கும் நாவல்-பழமொழிக் களஞ்சியம்-விலை 1—4—0.

பாலராமாயணம்—இராமாயணக் கதையை இனிமையாய்க் கூறுவது—விலை 0—12—0.

பாரிஸ்டர் பஞ்சநதம்—புதிய சிறிய ரஸிக நாடகம்—0—6—0. பஞ்சாமிர்தம் சந்தாதாரர்க்குப் பாதி விலை—மூன்றணா தான்.

ஆனுல் நான் சுண்டு சொல் பொறுக்கமாட்டேன்; கறார் தான். முதலில் பதினெரு ரூபா கொடுத்தால் போதும்; வேலையைப் பார்த்துக்கொண்டு நீங்களே தருவீர்கள்," என்றான் மற்றொருவன். அவனுக்கு இருபத்தைந்து வயதிருக்கலாம்; கொஞ்சம் தைரியமாயும் சுத்தமுள்ளவனுயும் இருந்தான்; அவனொருவன்தான் தன்னைப்பற்றி 'நாம்' என்று பேசாதவன். நாராயணையர் அவனைத் திட்டம் செய்து கொண்டார்.

ஒரு நாள் மாலை அவன் முதலில் வேலைக்கு வந்தான். அன்றிரவு சாம்பாரில் நாலு பலம் புளியும், கறியில் கால்படி உப்பும் தான் அதிகம்; ஒருவராலும் சாப்பிட முடியவில்லை. அடுப்பில் ஒரு குப்பி மண்ணெண்ணெயையும், கறியில் அரைக்காற்படி நெய்யையும் விட்டு விட்டானென்றும், அவன் அடுக்களையி லிருக்கும் பொழுது தனக்கு உள்ளே போகப் பயமாயிருக்கிறதென்றும், பத்மாவதியம்மாள் குறை கூறினுள்.

"என்ன, வைத்தி, சமையல் இப்படி யிருக்கிறது?" என்று சாப்பிடும் பொழுது நாராயணையர் முகத்தைக் கடுத்துக் கொண்டு கேட்டார்.

"இதெல்லாம் ஒரு வாய்ப்புத் தானே: உங்களுக்கு அதிர்ஷ்டமில்லை. நான் இன்றைக்குத் தானு சமைக்கிறேன்?" என்றான் வைத்திய நாதன்.

நாராயணையர்:—இவ்வளவு புளியும் இவ்வளவு உப்பும் என்னமாய் வந்தது? மறந்துபோய் இரண்டு தரம் போட்டு விட்டாயா?

வைத்தி:—இல்லை, நான் கொஞ்சமாய்த்தான் போட்டேன்; ஒரு தரம்தான் போட்டேன். இப்படியெல்லாம் 'கிளாஸ் கேள்வி' கேட்கிறதா யிருந்தால் நம்மால் முடியாது; வேண்டுமானுல் அம்மாள் சமைத்து வைக்கட்டும், நான் எடுத்துப் பரிமாறுகிறேன்.

நாராயணையர் இதைக் கேட்டவுடன், வாய்ச் சாதம் பிரையேறிக் கொள்ளும்படி சிரித்து விட்டார். அவர் மனைவியும் சிரித்துக்கொண்டு, "நாளைச் சமையலையும் பார்ப்போம்," என்றாள். சாப்பாடு முடிந்தவுடன், "ஓய், வைத்தியநாதையரே! நான் குழந்தையை எழுப்பிக் கஞ்சி கொடுக்கிறேன், நீர் உயரப் போய்ப் படுக்கையை சற்று உதறிப் போட்டுவிட்டு வந்துவிடும்," என்றாள். உடனே வைத்தியநாதையர், "அதெல்லாம் நம்ம வேலையு மில்லை, நம்மால் முடியவும் முடியாது; படுக்கை போடு கிறது, வேஷ்டி துவைக்கிறது, இலாந்தர் துடைக்கிறது, இதெல்லாம் நம்மால் முடியாது. இந்த ரூபா ஒரு மிட்டாய்க் கடையிலோ, காப்பி கிளப்பிலோ, நிமிஷத் திலே கிடைத்துப் போம். இந்தச் சள்ளைக் கெல்லாம் நாம் ஆளில்லை, இதோ நான் வெளியி லிறங்கிவிடுகிறேன்," என்று புறப்பட்டார்.

"அப்படியே செய்கிறது," என்றார் நாராயணையர். இப்படி இரண்டு மூன்று பரிசாரகர்களைப் பரீக்ஷை பார்த்தும் சரிப்படாமல், கடைசியில், வீட்டுச் சில்லறை வேலைகளைச் செய்து பத்மாவதி யம்மாளுக்கு எப்பொழுதும் துணை யிருக்கும்படி ஒரு சூத்திர வேலைக்காரியையும்; படுக்கை போடுதல், வேஷ்டி துவைத்தல், இலாந்தர் துடைத்து ஏற்றுதல், கடை சாமான் வாங்கி வருதல், வேண்டியபோது வெந்நீர் போடுதல் முதலிய வேலைகளுக் காக ஒரு சூத்திரப் பையனையும், நாராயணையர் திட்டம் செய்து கொண்டார்; அவர் மனைவியே சமயல் செய்தாள்; அவளால் சௌகரியமாய் முடியாத போதும், இருவரு மாக மாலையில் வெளியே போக நேரிட்ட காலங்களிலும், பக்கத்திலிருந்த 'கிளப்'பிலிருந்து வேண்டியபடி சாப்பாடு தருவித்துச் சாப்பிட்டு வந்தார்கள். கடைசியாக வந்த பிராமணப் பையன், தில்லும் பில்லுமாக எதிர்த்துப் பேசி விட்டு ஓடிப்போன தினம் நடந்த சம்பாஷணை கவனிக்கத்

தக்கது. அன்று 'கிளப்'பிலிருந்து சாப்பாடு தருவித்துச் சாப்பிடும்படி ஆயிற்று; கோபாலையரும் வந்திருந்தார். போஜனத்துக்குப் பின் நிலவிலிருந்து வெற்றிலை போட்டுக்கொண் டிருந்தார்கள்.

கோபாலையர் :—ஒன்றையும் தூக்கிக் கொண்டுபோய் விட வில்லையே?

நாராயணையர் :—இல்லை; அந்த மட்டும் யோக்கியன் தான்.

கோபா :—இனி என்ன யோசனை? இவன் நாலாவதோ, ஐந்தாவதோ?

பத்மாவதி :—பாட்டியைச் சேர்த்து ஆறுவது.

நாரா :—யோசனை யென்ன? பத்மியும் நானுமாகச் சமைப்போம்; அல்லது இன்றிராத்திரிப் போல 'கிளப்' இருக்கவே யிருக்கு. மற்றதற் கெல்லாம் சூத்திர வேலைக்காரர் வைத்துக் கொள்கிறேன். பத்மி! இன்று சாயங் காலம் ஒரு பதம் உண்டாக்கினையே, அதைக் கொஞ்சம் பாடு; கோபு கேட்கட்டும்.

பத்மா :—அண்ணு கேலி பண்ணப் போகிறுர்.

நாரா :—சும்மா கேலி பண்ணட்டும்; பாடு.

பத்மாவதி மெதுவாய்ப் பாடத் தொடங்கினுள் :—

பல்லவி.

கஷ்டமெல்லாம் பொறுப்பேன்; பட்டினியும் கிடப்பேன்—நான்.

சரணங்கள்.

மற்றொருத்தர் குற்றமுரைக்கும் மாற்றம் பொறுக் கமாட்டேன்
நான். (கஷ்ட)

நாரா :—என் சங்கதியாச்சு; உன் சங்கதியையும் சொல்லு; அதை மாத்திரம் ஏன் மறைக்கிறுய்? குறையும் பாடு.

(பத்மாவதி பாடுதல்.)

மணமும் ருஜியும் பணமும் கெடுக்கும்
மடையர்ப் பொறுக்க மாட்டேன்— நான். (கஷ்ட)

கோபா :—அதெல்லாம் சரிதான்; எத்தனை நாளைக்குப் பொறுப்பீர்கள்? நடக்கிற சங்கதியா இது?

நாரா :—நடக்காமலென்ன? வேறு விதியில்லாவிட்டால் நடந்துதானே தீரும். பழைய நாளை வழக்கங்களின் பலனாக இந்த நாளில் நமக்குண்டாயிருக்கும் சங்கடங்களில், இந்தப் பரிசாரக விஷயம் ஒன்று.

கோபா :—பழைய வழக்கமென்ன செய்யும்? இந்த நாளைப் பெண்களால் முடியவில்லை. சொற்ப சம்பளக்காரனுக்கும் பரிசாரகனில்லாமல் தீரவில்லை. இதைப் பாரேன்: என் மாமனார் வீட்டில் தினமும் வேளைக்குக் குருணி அரிசிக்குக் குறையாமல் கூட்டமுண்டு; பரிசாரகன் கிடையாது; எல்லாம் பெண்டுகள்தான்; சாதாரண விசேஷங்களன்று பதக்கு முக்குருணி வடிக்கும்பொழுதும், அவர்கள்தான் சகலவேலையும். என் ஹம்படையாளையும் உன் ஹம்படையாளையும் செய்யச் சொல்லேன், பார்ப்போம்.

நாரா :—இதென்ன பேச்சு? உன் மாமனார் வீட்டுப் பெண் பிள்ளைகள் என்ன படித்திருக்கிறார்கள்? ஏதேனும் மூளையுழைப்புண்டா? பிள்ளை குட்டி யென்ற கவலைகளின்றி, இரண்டு மூன்று கைம்பெண்டாட்டிகளாவது வீட்டிலில்லையா? பகலில் ஒரு படியரிசிச் சாதமும் இராத்திரி எட்டு அடையும் தின்றுகொண்டு, வீண்வம்பு அளப்பவர்களுக்கு இது ஒரு பெரிதா? 'மலை விழுங்கி மகாதேவனுக்குக் கதவு ஒரு அப்பளாம்' தானே. முதலில், பெண்கள்தான் சமையல் முதலிய வீட்டு வேலைகளையெல்லாம் செய்யவேண்டுமென்று வைத்திருப்பதே பிசகு.

கோபா :—அதை நான் ஒப்பவில்லை: அவசியத்தின் பேரிலும் சௌகரியத்தைக் குறித்தும் ஏற்பட்ட வழக்கமே அது; புருஷன் வெளியேறிப் பாடுபட்டுச் சம்பாதிக்கிறது, ஸ்திரீ ஆக்கி யிடுகிறது.

நாரா:—பொதுவாய் அது சௌகரியந் தான்; ஆனால் ஆண்மக்கள் பிரவர்த்திகளுக்கே ஏற்ற பெண்களும், பெண்மக்கள் பிரவர்த்திகளுக்கே தக்க புருஷர்களும் எத்தனையோபே ரிருக்கிறார்கள். லக்ஷ ஸ்ரீமானான உன் மாமனார் வீட்டுப் பெண்டுகள் ஏன் அடுப்படியில் கிடந்து வாடவேண்டும்? பிள்ளைப் பெறுவதையும் மடைத்தொழிலையும் தவிர வேறொன்றுக்குமே யோக்கியதையில்லாமல், பெண்களை முழு மூடர்களாய் வைத்திருப்பதினால்தான் இப்படியாகிறது. இதோ, பத்மிக்கு இயல்பாயுள்ள சாரீரத்துக்கும் ஞானத்துக்கும், அவளை மட்டும் பாலிய முதல் சங்கீத சாஸ்திரத்தில் சரியாகப் பழக்கியிருந்தால், கச்சேரியொன்றுக்கு ஐந்நூறு ஆயிரம் என்று வாங்கும் வித்வான்களைவிட, அவள் மேற்போயிருப்பாள் என்பதிற் சந்தேகமில்லை. வேண்டிய பரிசாரகர்களும் வேலைக்காரரும் வைத்துக் கொண்டு, எவ்வளவோ சுகமாயும் கௌரவமாயும் வாழலாம். குலஸ்திரீகள் பாடக்கூடாது; அப்படியே பாடினாலும், ஒழுங்காய்ப் படித்து பகிரங்கமாய்ப் பாடக் கூடாதென்று வைத்துக் கொண்டு, இப்படிப்பட்ட ஒருத்தியை அடுப்பூதவிட்டு இம்சை செய்கிறோம். யார்யார்க்கு எதெதில் மூளை நன்றாய்ச் செல்கிறதோ அதிலேயே விட்டுப் பழக்கித் தேற்றினாலன்றோ, அவர்களுக்கும் சுகமுண்டு, அறிவும் விருத்தியடையும், தேசமும் முன்னுக்கு வரும்.

கோபா:—எல்லாரும் சுகவழியிலேயே திரும்பி விட்டால் கஷ்டமாயும் கீழாயும் உள்ள வேலைகளை யார் செய்கிறது?

நாரா:—கோபு! உளறாதே. உனக்கு முப்பது வருஷம் சிக்ஷை சொல்லி வைத்தாலும் ஸ்வரபேதமாவது தெரிந்திருக்குமோ, யோசித்துப் பார். அல்லது பத்மி டாக்டர் ஆய்விடுவாளோ? எல்லாருமா மேதாவிகள்? எல்லாருமா தனவான்கள்? எத்தனை பேர் சமையல் வேலை

யையே வெகு குதூகலத்துடனும் ஆசையுடனும் செய்கிறார்கள்? எத்தனை கோடிப்பேர், தம்மிஷ்டப்படி நடக்க முடியாமல், தாரித்திர தோஷத்தால், கிடைத்த வேலையைச் செய்து பிழைக்க வேண்டியதா யிருக்கிறது? வேலைகளில், கீழேது மேலேது? உயிர் வாழ்க்கைக்கும் நாகரிக விருத்திக்கும் இன்றியமையாதன வெல்லாம், தோட்டி முதல் தொண்டமான்வரை எல்லார் வேலைகளுமே மேலானவை தாம். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்," என்றார் நாயனாரும். அப்படிப் பார்த்தால், நாமெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவரே. நீ பயப்படுகிறது வீணே. பொய் களவாதியவே இழிவானவை, மற்றெந்த வேலையும் மனிதனுக்கு ஏற்றதே என்ற உண்மை மட்டும் நம்மவர்க்குள் உறைத்து விட்டால், ஜாதிக்கட்டொழிந்து, ஸ்திரீகள் தாழ்ந்தவர் என்னும் எண்ணம் தொலைந்து, அவரவர் புத்திக்கும் சக்திக்கும் தக்கபடி உழைக்கிற தென்றாகி விட்டால், இந்தச் சங்கடங்களெல்லாம் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கி விடும். தாழ்வாக நினைக்கப்படும் வேலைகளுக்கும் ஒரு நாளும் ஆள் கிடையாமல் போகாது. இந்தப் பரிசாரகன் விஷயத்தையே யோசித்துப் பார்: மாதம் முந்நூறு நானூறு சம்பள முள்ள ஒருத்தியோகஸ்தன், பத்தோ பதினைந்தோ கொடுத்து, ஒரு பரிசாரகனைத் திட்டம் செய்கிறான்; முதலில், பெண்கள் சுதந்தர மில்லாதவர்களென்றும், எப்பொழுதும் பராதீனத்துக்கே அருகரென்றும், கேவலம் காமபாத்திரங்களென்றும் நாம் நினைத்து நடந்தும் நடத்தியும் வருவதால், எஜமானி பாலியமா யிருந்தால், தன் வேலைக்காரனையே புருஷனென்று பயப்படுகிறாள்; அவனும், அவளை, எப்படி யிருந்தாலும் ஒரு ஸ்திரீதானே யென்று இகழ்ந்து நடத்துகிறான். எஜமானியாக அவளுக்குரிய ஸ்தானத்திலும், புருஷனாய்ப் பிறந்ததால் மட்டும் அவனுக்குள்ள அந்தஸ்துப் பெரிதாயிருக்கிறது; ஆகவே, அவன் அவளை அவ

மதிக்கிறான். அனேக வீடுகளில், சாணி யெடுத்து மெழுக்கிடுதல் பெண்டுகளே செய்ய வேண்டிய தென்று, எண்ணப் படுகிறது; தன் எஜமானர் வஸ்திரங்களைத் துவைத்து, அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்யும் பரிசாரகன், அவர் மனைவி வஸ்திரங்களையோ, பெண் குழந்தைகள் பாவாடைகளையோ சுத்தஞ் செய்யவும், பிறர் சுத்தம் செய்து வந்தவற்றைப் பிழிந்து உலர்த்தவும் கூட, ஒப்புக்கொள்கிற தில்லை; அவ்வேலையைத் தன் புருஷத்துவத்துக்குக் குறைவாக எண்ணுகிறான். தான் பிராமணனுய்ப் பிறந்ததனால் மட்டும், எவ்வளவோ படித்தவனும் யோக்கியனும் தனவானுமான ஒரு சூத்திரப் பிரபுவைத் தனக்குக் கீழாக எப்படி யெண்ணுகிறானே, அப்படியே, தான் புருஷனுனதால், எந்த ஸ்திரீயையும் தனக்குக் கீழாகவே நினைக்கிறான். "பெண் ஜன்மமோ: புண் ஜன்மமோ," என்று நமக்குள் வசனமுண்டு. நாம் நடத்தும் விதத்தினலேயே, பெண்கள், தம்மைக் காத்துக் கொள்ளவும், புருஷரென்று பயப்படாமல் தக்கபடி நடந்து கொள்ளவும் தெரியாமற் போய் விடுகிறார்கள். இன்று நேற்றல்ல, பல நூற்றாண்டுகளாக இப்படியே பெண்கள் சுதந்திரம் இழந்து, அவர்களும் கீழாய் விட்டார்கள்; புருஷராகிற நாமும், ஸ்திரீகளும் நம்மைப் போல் சுதந்திர முடையவர்களே, கேவலம் காமபாத்திரங்கள் மட்டு மல்ல, பரஸ்பரம் நன்மையும் சந்தோஷமும் உண்டாகும்படி ஸ்திரீ புருஷர் கூடிப் பழகலா மென்பதையே மறந்துவிட்டோம். நமது முன்னேர்கள் இப்படி யில்லவே யில்லை.

கோபா :—நீ நினைக்கிறபடி எப்பொழுது திருந்தப் போகிறது? நம்முடைய நாளிலில்லை!

நாரா :—ஆனல் நாம் கஷ்டப்பட வேண்டியது தான். இது மட்டும் நிச்சயம் தான்: ஜாதி யாசாரம் குறைந்து பெண் கல்வியும் விருத்தி யானல், எல்லாம் சீக்கிரம் சீராகிவிடும். பெண்கள் நன்ருகப் படித்துப் புத்தி விசா

லம் அடைந்து விட்டால், பாலிய விவாகமும் அதனால் விளையும் பெருங் கேடுகளும்கூட நீங்கி விடும்; அவர் களே நீக்கி விடுவார்கள்.

பத்மா :—பாலிய விவாகம் உள்ளவரையும் பெண்கள் தான் அதிகம் படிக்க முடியாதே: மாமியார் ஒட்டி னால், அகமுடையான் ஒட்டான்; அகமுடையான் ஒட்டி னால் மாமியார் ஒட்டாள்; இருவரும் ஒட்டினாலும் குழந் தைகள் ஒட்டாது. பத்திலும் பதினைந்திலும் பிள்ளை களும் பெற்றுக்கொண்டு, வீட்டு வேலைகளையும் செய்து கொண்டு, நாங்கள் வாசிப்ப தெப்படி?

நாரா :—வாஸ்தவம் தான்: நம்முடைய கெட்ட வழக்கங்க ளெல்லாம் ஒன்றோ டொன்று பிணைப்புண்டு ஒரே சிக்கலாய்க் கிடக்கின்றன; நாமும், சணப்பன் வீட் டுக் கோழி மாதிரி, தலைப்பட்டுத் தத்தளிக்கிறோம். ஆயினுமென்ன? அவரவரால் ஆனமட்டும், அவரவர் குடும்பங்களிலும் தம்மைச் சேர்ந்தவர்களுக்கும், சிறிது சிறிதாய், எறும்பூரக் கல்லுந் தேயும் என்பதை நினைந்து, பெண்களைப் படிப்பித்தும், சரியாக நடத்தியும், பாலிய விவாஹத்தையும் மௌட்டிய வழக்கங்களையும் நிறுத்தி யும், ஜாதி யகங்காரத்தை யொழித்து எல்லாரையும் சகோதரரைப் போல் நடத்தியும் வருவோமானால், நாம் கண்காண எவ்வளவோ திருந்திவிடும்.

கோபா :—ஏன், நாணு, உன் மாமனாரையும் மாமியா ரையும் கொஞ்சம் திருத்துகிறது தானே?

நாரா :—ஐந்திலே வளைத்தாலன்றி ஐம்பதில் வளையு மா? நம்ம குழந்தைகளையாவது இவ்விதக் கொள்கைகளில் வளர்த்து வந்தோமானால் அடுத்த தலைமுறையில் எவ்வள வோ சுகமுண்டு.

கோபா :—சீதுவுக்கு மூன்றாவது வயது நடக்கிறதே; எப்பொழுது கலியாணம்? மாப்பிள்ளை பார்த்திருக்கிறாயா? இந்த நாளில் ஆயிரம் இரண்டாயிரம் கொடுக்க வேணுமே.

வெள்ளக்கொடுமை

பத்திராதிபர்.

தஞ்சை திருச்சி சேலம் கோயம்புத்தூர் மலையாளம் தென்கன்னடம் முதலிய ஜில்லாக்களிலும், திருவாங்கூர் கொச்சி மைசூர் இராச்சியங்களிலும், இதுகாறும் கண்டறியாத கொள்ளை வெள்ளம் பெருகி, ஏழைகளோ செல்வரோ யாவருமே தாங்கமுடியாத மாபெருஞ்சேதம் ஏற்பட்டிருக்கின்றது. பொருக்கென வெள்ளம் பெருக்கெடுத்ததனால் உயிர் நஷ்டம் இவ்வளவென்று இன்னும் எவரும் கணக்கிட்டிலர்; வெள்ளத்தின் பின் விளைவாகும் பஞ்சத்தினாலும் சூறை நோய்களினாலும் அளப்பரிய உயிர் நஷ்டம் மேலும் ஏற்படத் தொடங்கி விட்டது. பல்லாயிரம் வீடுகளும் குடிசைகளும், சில ஊர்களும், இருந்தவிடமே தெரியாமல் விழுந்து பாழாயின; பல்லாயிரம் கால் நடைகள் மாண்டொழிந்தன; பல்லாயிரம் காணிப் புலங்களில் பச்சென்று வளர்ந்தோங்கி வந்த ஊண் முதலாகும் பயிர்கள் அடியோடழிந்தன; குடியானவர் வீடுகளில் சேமித்து வைத்திருந்த வித்துக்களும், மற்றைய சொத்துக்களோடு, தொலைந்துபோயின; ரயில் பாதைகளும் ரஸ்தாக்களும் வண்டிப் பாட்டைகளும் கிளைவழிகளும், பெரியனவும் சிறியனவும் பழையனவும் புதியனவுமான பாலங்களும் வாராவதிகளும் பலவாறாகச் சிதைந்து பழுதாண்டு, ஜனங்களின் போக்கு வரவு வசதிகள் நாசமாயின; நன்செய் புன்செய்களும் கால்வாய்களும் வரம்பழிந்தது மன்றி, பள்ளம் மேடாகவும், மேடு

LXIII

LXII



ஈரோட்டுப் பாலம்—36 அடி ஜலம்.

மெயில் தபால் பைகளை ட்ராலி வண்டிகளில் கடத்துதல்.

பள்ளமாகவும், களிநிலம் மணற்றிடராகவும் மணற்றிட்டுக் களிமண்ணாகவும் நிலை குலைந்து தடுமாறிக் கிடக்கின்றன. இம்மட்டோ? நமது சகோதரர் சகோதரிகளான பாரத மக்கள், நமது கண்மணிகள் போன்ற அருமைக் குழந்தைகள், பல்லாயிரவர், குடிக்கக் கஞ்சியும் உடுக்கக் கந்தலும் படுக்கப் பாயுமின்றி, பொங்க உலையும் தங்க நிழலுமே காணாதவராய்த் தவிக்கின்றனர்! என்னேதான் மனிதர் வாழ்க்கை!

> "அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
> மறுசிகை நீக்கியுண்டாரும் — வறிஞராய்ச்
> சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழ்."

என்னும் முதுமொழியின் மெய்ம்மை இன்று கண்கூடாக விளங்கிவிட்டது மன்றி, அதனினும் கொடியதாய், மற்றோரிடத்துச் சென்று கூழிரக்கவும் வழியின்றி இவர் தியங்குகின்றனரே! தமக்கு உள்ளனவற்றை யெல்லாம் நேற்றே இவ் வெள்ளப் பெருக்குக்குக் கொள்ளை கொடுக்கு



திருச்சி ஹோலிகிராஸ் பெண்பாடசாலை

Photo by J. Ponniah

LXV



திருச்சி ஸேன்ட் ஜோஸேப் கலாசாலை.

Photo by J. Ponniah

முன்னர், நம்மைப்போல் உண்டுடுத்துக் கொண்டு கொடுத்துச் சுகித்து வாழ்ந்து வந்தவரே இவர்! "ஈதாகுமொரு தீதியற்றினர்; அதன் தள்ளொணு விளைவாக, சாபத்தீடாக, வந்து பெருகியதே இவ் வெள்ளம்; 'தன் வினை தன்னைச் சுடும்' என்னும் நியாயப்படியே இவர்க்கு இக்கதி நேர்ந்தது," என்று கூறுதற்கு மில்லையே! பலலாயிரம் ஆண்டுகளாக, தலைமுறை தலைமுறையாக, தம் முன்னோர் இனிது வாழ்ந்து வந்த பொன்விளை புண்ணிய பூமியிலே தாமும் வாழ்ந்து வந்ததை யன்றி, தந்நெஞ்சறி குற்றம் சின்னஞ் சிறிதானது ஒன்றையுமே இவர் செய்திலரே! இவர்க்குற்ற கதி நமக்கு நேராதது, இவர் செய்த பாவமன்று, நாம் செய்த புண்ணியமன்று, இயற்கையின் திருவிளையாடலே. அந்தோ! பிரபஞ்ச சக்திகளின் பெருமையையும் மக்களின் சிறுமையையும் நமக்கு எடுத்துக் காட்ட, இயற்கைத்தாய், பிறிதொரு வழியை அறியாது போயினளோ?

ஆயினுமென்? என்றுமே, எவ்விடத்துமே, அழிதரும் ஊனுடலிலே அழியாத ஆன்மாவையுடைய மானுடன்

நானிலத்திலே தோன்றிய தொன்று தொட்டு இன்று மட்டும், மனிதனுக்கு மனிதனையன்றி, உதவுவார் மற்று யாவர்? அறவாழி அந்தணனை புத்த பகவான் புகன்றது போல,

‘சக்கி முக்கியுள் ஒளிந்துறை தழலினை,
தக்க வாறொரு மானுடன் தரும்வரை,
மிக்க கூதிரால் மிகப்பலர் மாய்ந்தனர்;
தானியம் விளை தரும் தத்துவம் தனை, ஒரு
மானுடன் விதைத்து விளக்கிடும் வரையுமே,
ஒனாய் போல் ஊன் விழுங்கி உய்ந்தனர்;
விழுமிய ஒருநான் மொழிதரு வரையுமே,
குழுமிய விலங்கிற் குரைத்துக் குழம்பினர்;
நன்றெனப் படுவ தெதுவும், எந் நாளிலும்,
துன்றிய முயற்சியால், சூழ்ச்சியால், மனிதனால்
ஒன்றிய தன்றி, மற் றெவரால் உற்றனோம்?’



திருச்சி ஸேண்ட் ஜோஸேப் கலாசாலை—லாலிஹால்.

Photo by J. Ponniah



திருச்சி சுதேசிய (நாஷனல்) கலாசாலை ஹாஸ்டல்

Photo by J. Ponniah

ஆயின், இத்தகைய இயற்கை விளையாட்டுக்களால் இவ்வளவு பேரின்னல்கள் விளையாது காக்குங் கடன், ஊன்றியுன்னிச் சூழும் உயர்மதியின் பாலதாக; இப்பொழுது மடிமையின்றியே மிடிமை வாய்ப்பட்டுழலும் நமது இந்திய சகோதரி சகோதரர்களைப் பேணிக்காத்து, அவர் மீண்டும் தலை நிமிர்ந்து தன் மரியாதையோடு வாழும் கவுரவத்தை அடையும்படிச் செய்தல், நம்முள் யாவர்க்கும் தாழ்க்கவொண்ணாத் தலைக் கடனாகும். இக்கடனில் மிகப் பெரும்பகுதி அரசாங்கத்தைப் பொறுத்ததும், சாமானிய மக்கள் தாங்க முடியாததுமா யிருத்தலின், இனிச் செய்யவேண்டிய பணியை இரு கூறாகப் பகுத்தல் பொருந்தும்: உடன் வேண்டிய உண்டி உடைகளை உதவிப், பசியையும் பிணியையும் போக்கி, வருந்துவாரைப் பேணும் கடனை நம்மைப் போன்ற குடிமக்களும்; அவர் பின் பிழைப்புக்கும், நாட்டிற் போக்கு வரவு வசதிகள் முன் போல் ஆவதற்கும் வேண்டியவற்றை யெல்லாம் செய்து, உழவு கைத் தொழில்களுக்கு இன்றியமையாத ஊற்று

முதலை நன்கொடையாகவோ முன் கடனாகவோ வேண்டிய வாறு கொடுத்து, நீடித்த நன்மைகளைச் செய்யும் கடனை அரசாங்கத்தாரும் பொறுத்தல் தகும். எனெனின், முதற் பணியை நன்கு செய்தற்கு, ஒப்பு நோக்கில் பொருள் சுருக்கமாயும், அன்பும் ஆர்வமும் அநுதாபமும் அளவின்றிப் பெருக்கமாயும் வேண்டும்; பின்னதற்கோ, நம்மால் உதவ முடியாத பெருந்திரள் நிதியமும், ஆட்கட்டும், அதிகாரமும், அநுபவமும், பலகலை நிபுணர்களின் ஒத்துழைப்பும் இன்றியமையாதன; எனவே; இவ் விரு திறப் பணிகளும், முறையே, பொது ஜனங்களும் அரசாங்கத்தாரும் செய்தற் கேற்றன என்பது துலங்கும்.

நாட்டிலே பல கூட்டங்கள் கூடிப் பொருள் ஈட்டி வருகின்றனர்; துன்பம் துடைக்கும் தொண்டும் ஒருவாறு தொடங்கப் பெற்று நடந்துவருகின்றது. ஆயின், வெள்ளக் கொடுமையின் மிகுதிக் கேற்பப் பணமேனும் தொண்டர் குழுவேனும் இன்னும் சேர்ந்திலது; வெள்ளத்தின் கொடுமை இன்னும் நின்ற பாடுமில்லை; எனவே, நம்முடன் பிறந்த இந்திய மக்கள் பல்லாயிரர், அரும்பசியும் கொடும் பிணியும் வருத்த, மனம் நொந்து பரிதவிக்கின்றனர். இத் தறுவாயில், இக் கொடுங்கதிக்கு அதிர்ஷ்டவசத்தால் தப்பிய நாம் அனைவரும், 'கூழுக்கு உப்பில்லானுக்கும் பாலுக்குச் சருக்கரை யில்லானுக்கும் ஒரே கவலை' என்னும் உரையின் பொய்ம்மையை உணர்ந்து, தம்மால் இயன்ற அளவு மட்டுமோ, தம் தகுதிக்கு மிதமிஞ்சியே தாராளமாய் உதவுவதுதான் சிறந்த தேச பக்தியும் அறமுமாகும். நம்முள் ஒவ்வொருவரும்,

"அன்பின் வழியது உயிர்நிலை;" "அற்றார் அழிபசி தீர்த்தல், அஃதொருவன் பெற்றான் பொருள் வைப்புழி;" "காதற்ற ஊசியும் கூட வாராது கடைக்கலைக்கே"

என்னும் ஆன்றோர் வசனங்களை மறவாது ஒழுகுவோமாக! அரசாங்கத்தார், சுவரை வைத்தே சித்திரம் என்பதுபோல, குடிகளைக் கொண்டே அரசென்பதையும், பொக்கிசப் பணமனைத்தும் குடிகள் கொடுத்த பணமே என்பதையும், அரசாங்கத்தின் அடிப்படை பொதுஜன ஊழியமே என்பதையும் மறவாது ஒழுகுவாராக! எதுவின்றியே இத்துணைப் பேரின்னல்களைத் திடீரென உற்றுழலும் நமது சகோதரி சகோதரர்களோ,

"இடுக்கண் வருங்கால் நகுக : அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்"

என்னும் பொய்யாமொழியை அவர்க்கு நினைப் பூட்டவும், நம் மனம் ஒப்பவில்லையே!

நாரியர்கள் 1 நாண் 2 அடக்கம் விட்டார், நலனறியாப்
பூரியர் 3 வாய்ப் புன்சொல் பொழிவென்ன—தோரா
மலமாசு தாங்கி வரம்பின்றி ஓங்கிப்
பலமாகப் பாயும் பயம். 4

1. பெண்கள்; 2. நாணம், 3. இழிமக்கள்; 4. நீர்.

கதாரத்நாகரம்.

ஓர் இனிமையான மாதாந்தரப் பத்திரிகை.

1920ஆ ஜூன்மீ முதற்கொண்டு நடைபெற்று வருகின்றது. இப்பொழுது 6-வது வால்யம் நடந்து கொண்டு வருகின்றது. யாவரும் படித்துணருமாறு எளிய தமிழ் நடையில் நவ நவமான நாவல்களும், ரசிகமான கதைகளும், விநோத விசித்ரங்களும், யுக்தி தரும் துக்கடாக் கதைகளும், எழுதப்பட்டு வருகின்றது.

உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள்.

சந்தா விகிதம்.

வருட சந்தா ரூ. 2. வெளி நாடுகளுக்கு ரூ. 3-8

மாதிரி காப்பி வேண்டுவோர்

அரையணா ஸ்டாம்பு அனுப்பவும்.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" லிமிடெட்,

சென்னை.

இயற்கை ஆராய்ச்சி.

(302-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மண்ணுணிப் பாம்பு என்னும் மண்புழு—ஈரக் கசிவுள்ள இடங்களில் மண்ணுக்குள் வாழும் வழவழப்பான இச்சந்து ஒரு பாம்பல்ல, புழுவேயாம். இதற்குக் கால்களில்லை; தேகத்தை நீட்டிச் சுருக்கி நெளிந்து, சுற்றிலுமுள்ள மெல்லிய சிறிய மயிர்களின் உதவியால் இது நகர்கிறது. இதன் மேல் தோலே, கண் காதுகள் போல, ஒளியையும் ஓசையையும் உணர்த்துகிறது. இளவெயில் காய இது வெளி வரும்போது எறும்பு, பக்ஷி, தவளை, பல்லி, ஓணன் முதலியன இதைத் தின்று விடும். இதன் வாய் தேகத்தின் முன் நுனியில் இருக்கும். மண்ணில் அழுகின இலை

1. மண்புழு

1. வாய் 2. இளைபெல்லம் 3. குதம்



2. மண் புழுவின் உள்ளமைப்பு

கள் முதலிய ஆகாரப் பொருள்களை அதன் வழியே மண்ணுடன் உட்கொண்டு, ஆகாரத்தை ஜீரணித்து, வெறு மண்ணை மட்டும் வெளியே தள்ளி விடும். இப்படி இதன் தேகத்துக்குள் சென்று வெளி வந்த மண்ணானது பயிருக்கு நல்ல உரமாகிறது. கோடிக் கணக்கான இப்புழுக்களின் உழவு வேலையினால், எவ்வளவோ உர மண் இயற்கையில் ஏற்பட்டு விடுகிறது. இதுவே மனிதர்க்கு இப் புழுக்கள் செய்யும் பேருதவியாம். இம்மண் புழு (ஆண் பெண் உறுப்புக்கள் ஒரே பிராணியில் அமைந்து) மிதுனப் பிராணி (hermaphrodite) எனினும், இவை இணை சேர்ந்து, பிந்து கருப் பையை அடைந்து, அண்டத்தோடு கலந்துதான், இவை பிற்கிளை யாக்கத்தைச் செய்கின்றன.

முத்து மீனாக்ஷி

ஒரு பிராமணப் பெண்ணின் சுவசரிதை

2-ம் பதிப்பு வெளிவந்து விட்டது - விலை எட்டணா.

பஞ்சாமிர்தம் ஆபீசு - மயிலாப்பூர்.

The "Hindu Nesan"

(THE LEADING TAMIL WEEKLY.)

Commands a decent circulation-stands as a best medium for advertising.

News of varied interest a special feature.

"இந்து நேசன்"

வாரப்பதிப்பு-சந்தா விவரம்.

1-வருஷத்திற்கு	...	ரூ.	6	0	0
6-மாதத்திற்கு	...	,,	3	8	0
3-மாதத்திற்கு	...	,,	1	12	0
மலாய், மோரீஸ், நேட்டால், முதலிய வெளிநாடுகளுக்கு.					
1-வருஷத்திற்கு	...	,,	10	0	0
தனிப்பிரதி	...	,,	0	2	0

For particulars apply to:

THE MANAGER

THE "HINDU NESAN"

65, Armenian Street,

MADRAS.

பஞ்சாமிர்தம்

407

பாவலர் விருந்து

ஸ்ரீராமகிருஷ்ண மடம்

ஸ்ரீமத் விபுலாநந்த ஸ்வாமிகள், மயிலை

[இளமாணியார் அறிவுடையரனார் அளித்தது.]

இவ்வுரைத் தொடர் கிரேக்க தேசத்தறிஞர் பிளேட்டோ என்பவர் இயற்றிய "விருந்து" (Plato's *Banquet*) என்னும் கட்டுரையைத் தழுவி யெழுந்தது. கிரேக்க தேசத்துப் புலவர் பெயரையும் அவரோடொத்த தமிழ்ப் புலவர் பெயரையும் இருபத்தியாகத் தருவாம்.

Socrates—சாத்தனார்—வடம வண்ணக்கன் பெரிய சாத்தனார்.
Agatho—நன் மாறன்
Aristodemus—ஆவூர் மூலங் கிழார்
Eryximachus—உறையூர் மருத்துவன் தாமோதரனார்
Alcibiades—மருதனிளநாகனார்
Pausanias—பரணர்
Aristophanes—கணக்காயனார் மகனார் நக்கீரனார்
Diotima—ஔவையார்
Phaedrus—காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார்

ஆவூர் மூலங்கிழார்:—(சாத்தனாரை நோக்கி)ஐய! தமிழ்ப் புலவ! தேவரீரைக் கண்டு உரையாடி இன்புறுதற்காக இங்கு வந்தேன்; தேவரீர் வெள்ளை வஸ்திரந் தரித்து, வெண்பூச் சூடிப் புறத்தே போதற்கு விரும்பி நிற்றலைக் கண்டேன். ஆதலால் இன்றுபோய் நாளை வருதற் கெண்ணினேன். அடியேன் போய் வரலாமா?

சாத்தனார்:—இல்லை, நண்பனே; நீயும் என்னுடன் கூட வரலாம். நம்முடைய அரசனும் அன்பனுமாகிய பாண்டியன் நன் மாறனுடைய திருமனையிலே இன்று விருந்து நடக்கப்போகின்றது. பரந்தகேள்வியான் மிக்க பாவலர் அங்கு வருவார்கள்; நாமும் போகலாமென்று புறப்பட்டேன். திருவுடையாரைக் காணப்போகும் பொழுது செழுமையுறப் போதலே தகுதியல்லவா? ஆதலால் உடுப்பன உடுத்து அணிவன அணிந்து நிற்கின்றேன். நேற்று அரசன் திருமனையில் அறக்களவேள்வி நடைபெற்றது. போகலாமென் றெண்ணினேன். ஆயினும் சில ஏது நிகழ்ச்சியினால் அவ்வெண்ணம் தடைப்பட் டொழிந்தது. இன்று நீயும் வருவாய், ஒருங்கு செல்லுவோம்.

ஆ:—ஐய! அரசர் என்னை விருந்துக்கு அழைக்க வில்லையே; நான் எங்ஙனம் தங்களோடு வருதல் கூடும்?

சா :—“நாடாதா ராயினு நல்லார் விருந்தளிப்பின் வாடாது போதன் மரபேயாம்,” என ஆன்றோர் கூறி யிருக்கின்றாரல்லவா?

ஆ :—சரி, உங்களோடு வருகின்றேன். அரசர் ஏன் வந்தாயென்று கேட்டால், “சாத்தனார் அழைத்தார், நான் அவர் பிறகே வந்தேன்,” என்பேன்.

சா :—சரி வா, போவோம். [நண்பர் இருவரும் நன்மாறனுடைய அரமனை வாயிலை நோக்கி நடந்தார்கள். சாத்தனார், வழியில் நடந்து செல்லும் போது பின்னாக வந்தவர், இடையில் நின்றுவிட்டார். இதனை ஆவூர் மூலங்கிழார் காணவில்லை; சாத்தனார் பின் வருகிறார் என்ற எண்ணத்தோடு போய் அரமனை வாயிற் கடையை யடைந்து திரும்பிப் பார்த்தார்; சாத்தனாரைக் காணவில்லை. அத்தருணத்தில் அரமனையி னுள்ளிருந்து ஒரு ஏவலாளன் வந்து அரசன் ஆவூர்மூலங்கிழாரை அழைத்து வரும்படி கட்டளை யிட்டதாகத் தெரிவித்தான். ஆவூர் மூலங்கிழாரும் ‘நன்று’ என்று உட்புகுந்தார்.]

நன்மாறன் :—பிரிய நண்பரே! தங்களைக் காண்பது கார்த்திகைப் பிறையாய் விட்டது. நேற்றுத் தங்கள் வீட்டுக்கு எத்தனை ஏவலாளரை அனுப்பினேன்! எங்கு போயிருந்தீர்கள்? உடலிற் சுகக் குறைவு ஏதேனும் உளதோ? மனத்துக்குக் கவற்சியைத் தரும் நிகழ்ச்சி ஏதாவது ஏற்பட்டதுண்டோ?

ஆ :—அரசே! தங்களுடைய பேரன்பு இருக்கும் வரையும் எம்மனோருக்குக் குறையும் உண்டோ?

ந :—நல்லது, சாத்தனார் எங்கே? பொழுது கழிந்து போகிறது, அவரை இன்னுங் காணோமே? நீர் அவரைக் கண்டதில்லையா?

ஆ :- அரசே! என் பின்னாக வந்தவர் இடையில் நின்றுவிட்டாரெனத் தோற்றுகிறது.

ந :— என்ன ஆச்சரியம். (வாயில் காப்பாளன் ஒருவனைவிளித்து) ஏ! வாயிலோய்! நீ விரைந்து சென்று சாத்தனாரைத் தேடி யழைத்து வா. (ஆவூர் மூலங்கிழாரை நோக்கி) பிரிய நண்பரே! மருத்துவன் தாமோதரனாருக்கு அணிமையாக அமர்ந்திருப்பீராக; நான் கை கால் சுத்தி செய்து கொண்டு சீக்கிரம் வருகிறேன். நக்கீரனாரும் பிறரும் அதோ அமர்ந்திருக்கிறார்கள். [சற்று நேரத்தில் நன்மாறன் திரும்பி வந்து ஆசனத்திருந்தான்]

வாயிலோன் :— அரசே! வாழ்க! ஏழையேன் வீதிவழியே சென்று சாத்தனாரைத் தேடினேன். சிறிது தூரத்திலுள்ள ஒரு வீட்டு முற்றத்தில் சிலையிற் செதுக்கிய கடவுள் வடிவத்தைப் போல அசைவின்றி நிற்கின்றார். அணுக நடந்து, “ஐயா, தேவரீரை அரசர் பெருமான் அழைக்கின்றார்” என்றேன். மறுமாற்றம் ஒன்றுங் கூறாதாராய்ப் பேசாது நிற்கின்றார்.

ஆ :—அரசே! சாத்தனர் சிற்சில வேளையில் உள்ளம் ஒரு வழிப்படத் தம்மை மறந்து பரவசப்பட்டு நிற்பதுண்டு. அத் தருணங்களில் அவருடைய நிலைகலையும் வரையும் அவரை அப் படியே விட்டு விடுவதே நன்று.

ந :— நல்லது ; சாத்தனர் வருந்துணையும் நாம் வாளா விருத் தலும் முறையாகாது. அன்பரீர் அனைவரும் வம்மின், செம் பஞ்சு பொதிந்து பட்டினுற் போர்வை யிடப்பட்டு மலர் பரப்பி யிருக்கும் இவ்வாசனங்களில் வந்து அமருமின். ஒள்ளிய வளை யலை யணிந்த இவ்விள மகளிர் பொன்னினுற் செய்யப்பட்ட கலங் களிலே நறுமணம் பொருந்திய தேறலை நிரப்பித்தா, அதனை வாங்கி மனங்களிகூர்வுடைய உண்ணுமின், அன்பரீர். இத்தேறல் யவன புரத்தி லிருந்து நல்ல குப்பிகளிற் கொண்டுவரப் பட்டது ; உண் போருக்கு மகிழ்ச்சியை யளிப்பது.

நக்கீரனர் :—

" யவனர்,

நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளு
மொண்டொடி மகளிர் மடுப்ப மகிழ் சிறந்
தாங்கினி தொழுகுமதி யோங்குவாண் மாற! "

வெற்றி யானுயர்ந்த வாளை யுடைய நன்மாற! எம்மரச! யவனர் நல்ல குப்பியிற் கொண்டுவரப்பட்ட குளிர்ந்த நறுநாற்றத்தை யுடைய தேறலைப் பொன்னுற் செய்யப்பட்ட புனைந்த கலத்தின் கண்ணே யேந்தி நாடோறும் ஒள்ளிய வளையை யுடைய மகளி ரூட்ட மகழ்ச்சி மிக்கு இனிதாக நடப்பாயாக ; நினது கொற்றம் நிலைபெற்று வாழ்க.

(இத்தருணத்திற் சாத்தனர் உள் வருகிறர்)

சா:— " புகன்ற செல்வமொடு புகழினிது விளங்கி
நீடு வாழிய நெடுந்தகை யானுங்
கேளில் சேஎய் நாட்டினெந் நாளுந்
துளிநசைப் புள்ளினின் னளிநசைக் கிரங்கிநின்
னடிநிழற் பழகிய வடியுறை கடமான் மாற வறவாதீமே. "

அரசர்க்கரசே! விரைந்த செலவையுடைய குதிரையை யுடைய மாற னே! பெருந்தகாய்! நீ விரும்பிய செல்வத்துடனே புகழும் இனி தாக விளங்கி நெடுங்காலம் வாழ்க ; யானும் உறவில்லாத் தூரிய நாட்டின் கண்ணே நாடோறும் துளியை விரும்புதலை யுடைய வானம்பாடிப் பறவையைப் போல நின்கொடை நசையான் இரங்கி நினது அடிநிழற்கட் பழகிய அடியின் வாழ்வேன் ; நீ செய்த செயலை மறவாதொழி வாயாக.

ந :—ஐய! அருந்தமிழ்ப்புலவ! அடியேன் இருக்கும் இவ்வாச னத்தில் அடியேனோடு உடனிருத்தல் வேண்டும். பரிச வேதி யைத் தொட்ட இரும்பும் பொன்னவது போல தேவரீருடைய பரிசத்தினல் என்போலியருந் தமிழ்ப்புலவராதல் வேண்டும்,

பொன்மலையைச் சார்ந்த பொல்லாக் கருங்காக்கையும் பொன்னிறமா யிருக்கு மெனப் பெரியோர் கூறுவாரன்றே. நீர் நிறை கலத்தினுள் பருத்தி நூற்றிரியின் ஒரு தலையை வைத்து நீர் வறிதாகிய கலத்தினுள் மற்றத் தலையை வைப்பின், இருகலத்தி னுள்ளும் நீர் ஒரு மட்டமாக நிற்குமல்லவா? அதுபோல, அணுகவிருக்குங் காரணத்தினால் அறிவினராகிய எம்போலியர் தேவரீருடைய ஞானத்திற் சிறிது பெறுதல் கூடுமென்றே?

சா:—அரசே! நன்கு கூறினீர். யான் விரும்புவதும் அஃதே. மன்னர் மன்னனாகிய நீரே நிறைகலம். சீவியகாலம் முழுவதும் ஞானம் எங்குளது எனத்தேடித் திரியும் நான் வறுங் கலம் என்பதற்கு ஐயமில்லை. உமது ஞானமானது பாந்த விளக்கத்தினாற் பகலவனை நிகர்த்தது. எனது ஞானம் பகற்கனவை நிகர்த்தது. சில நாட்களின் முன்னர் முப்பதினாயிரவர் கூடியிருந்த பேரவையிலே ஆண்மையினால் மாத்திரமல்ல, அறிவினாலும் நீர் அனைவருக்கும் அரசரே என்பதை நன்கு காட்டினீர். போறிவாளரும் எனது அரசரும் ஆகிய உமது பக்கலில் இருப்பதனால் உமக்கு உரிய அறிவையும் இசையையும் சார்ந்து நிற்பேன். ஆதலால் எம்பெருமான் கட்டளைப்படியே உடனிருப்பதற்கு உடம்படுகிறேன்.

நெ:—பிரிய நண்பராகிய தமிழ்ப் புலவீர்! வாதம் புரிய நேருமிடத்து வெற்றி அறிஞருக்கு உரியதாகு மன்றே? சாத்தனார் உரை என்றும் போல இன்றும் உயர்வுடையதே. மாலை கழிந்து யாமம் ஆகின்றது. இது வரையும் உணவின் எண்ணம் இன்றியே யிருந்து விட்டோம். செவியிற் சுவையுணரும் அறிவுடையோராகிய நும்மை நாவிற் சுவை யுணருமாறு வேண்டி நிற்கும் அடியேனுடைய பேதைமையை ஒருவாறு மன்னித்து உண்ணுதற்கு எழுந்தருள வேண்டும்.

(புலவரும் அரசனும் உணவு உண்ணுகிறார்கள்)

பாணர்:—

"உட்கப் படா அ ரொளி யிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார்,"

என ஆன்றோர் கூறி யிருக்கின்றனரே. அஃதங்ஙனமாக, நக்கீரனார் அரசனை வாழ்த்து மிடத்து, "யவனர் நல்ல குப்பியிற் கொண்டு வந்த மதுவினையுண்டு மகிழ் கூருவாயாக" என்றது தகுதியாகுமோ?

சாத்தனார்:—அறிவினை மயக்குங் கள் சாவக நோன்பிகளுக்கு யாண்டும் விலக்கப் பட்டது. உடலுக்கும் உள்ளத்துக்கும் மாறாத் தீமையை விளைப்பதாதலின் அதனை முற்றிலும் வெறுத்து விடுவதே நன்று.

மருத்துவன் தாமோதரனார்:—மிதமிஞ்சி மதுவினை யுண்போர் நோய்வாய்ப்பட்டு இளவயதில் உயிர் துறப்பாரென வைத்திய சாஸ்திரங் கூறுகின்றது.

ஆவூர் மூலங்கிழார் :—அன்பரீர், அரசர் அளித்த உணவின் சுவையும் பாடினி யளித்த இசையின் சுவையும் நிரம்பப் பெற்றோமாகி, யாம் கலைவல்லோர் அளிக்கும் அறிவமுதத்தையும் சுவைக்க விரும்பினோம். ஆதலால், பாடினியும் இவ்விளமகளிரும் தத்தம் இருக்கைக்குப் போய் விடுதல் நன்று. (இக்குறிப்பினைக் கேட்டு அன்னார் அகல்கின்றனர்.)

மருத்துவன் தாமோதரனார் :—அருந்தமிழ்ப் புலவீர்! அதோ விருக்கும் நமது நண்பராகிய காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார் என்னைப் பல முறையும் வினாவிய சில வினாக்களை உங்கள் முன்னிலையிற் கூற விரும்புகிறேன். "அன்பு என்பது யாது? அன்புக்குரிய தேவதை எது? அன்பினால் ஆவதென்ன? அன்பின் வரன்முறை யென்ன?" இவையே அவர் வினாவிய வினாக்கள். இவ்வினாக்களை யாராய்ந்து ஐயம் நீக்குமாறு அறிவுடையோராகிய நுங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

சாத்தனார் :—எடுத்துக் கொண்ட பொருள் மிகவும் சிறப்புடையதே. அன்பு நிறைந்த உள்ளத்தாராகிய அரசரும் பாணரும் அன்பினைப் பற்றியறிய அவாவுடையா ரென்பதற்கு ஐயமில்லை. அன்பு நூலுக்கு உரை கண்ட நக்கீரனாரும் மறுதலை யாகார். ஆதலால், இவ்வவையிற் குழுமி யிருக்கும் புலவர் அனைவரும் அன்பினைப் பற்றிச் சுருக்கமாகத் தாங்கள் கண்ட கருத்தினைக் கூறல் வேண்டுமென நான் கேட்டுக் கொள்ளுகிறேன். காரிக் கண்ணனார் இப்பொருளை வினவிய காரணத்திலே அவருக்கு இதனைப் பற்றிய ஆராய்ச்சி யுளது என்பது வெளிப்படை. ஆதலால் முதலில் அவரே பேசுவாரா.

காரிக் கண்ணனார் :—பெரியோருரைக்கு எதிருரை யில்லை. ஆதலால் சிறியேனாகிய யான் அறிந்ததைச் சொல்லுவதற்கு ஒருப்படுகிறேன். தேவர் மக்களாகிய சராசரப் பொருட்கள் அனைத்துந் தோற்றுவதற்குக் காரணம் அன்பேயாகலின், அன்பு தோற்றுவதற்கும் அன்பே காரணமாகு மன்றிப் பிறிதொரு காரணம் உளதாகாது. ஆதலின், அன்பு அநாதியாக வுள்ளது என்பது பெறப் படுகின்றது. பிரதம சிருஷ்டிக் காலத்தில் அன்பு வடிவனாகிய இறைவனுடைய திருவுளத்தில் அன்பின் வேறாகாத அருட்சத்தி தோன்றினள். இவ்விருவரிடத்தினும் நின்று உலகு உயிர் அனைத்துந் தோன்றின. இதனாலும் அன்பு அநாதியாம் என்பது பெறப் படுகின்றது. அன்பு மூப்பு விளிவு இல்லாதது. மிகுந்த வலிமை யுடையது, தேவர்களையும் மூவர்களையும் தன் வயப் படுத்துவது. அறத்துக்கு அன்பு துணை; மறத்துக்கும் அதுவே சார்பாகும். அனைத்தினுஞ் சிறந்தது அன்பேயாம். அன்புக்கு உரிய ஒரு நிலையம் இல்லாவிடின் அன்பு செய்வோனுக்கு உவகையிலதாகின்றது. அன்பனில்லா விடத்து அன்பு நிலையத்துக்கும் எய்திய பயனொன்றில்லை. வீரம் ஆண்மையாகிய இம்மைப் பயனனைத்தும் அன்பு ஆதாரமாகவே தோற்றுகின்றன. கடையாயினும் அன்புடையார் முன்னிலையிற் றலையாய தொழிலையே செய்ய முயலுவான்; கீழ்மகனும் தனது கீழ்மையை யகற்றி மே

லாய தொழிலைச் செய்வதற்கு முன்னிற்பான். ஒரு நாட்டில் வாழ்வோர் அனைவரும் ஒருவர் மீது ஒருவர் அன்புடையவரா யிருப்பின் அந் நாட்டில் தீச் செயலே நிகழாது. அந் நாட்டினை எதிர்த்து வெல்லுதல் பகைவருக்கு இயலாத தொன்றாகும். அன்புடையாருக்காகத் தம் முயிரையும் கொடுத்தல் அன்பருக்கு மரபு ஆதலால் அன்பிலிருந்து வீரமும் ஆண்மையும் தோற்று கின்றன. காதலருக்காக உயிரைவிட முயல்வது ஆண்மக்க ளிடத்து மாத்திர மல்லப் பெண் மக்களிடத்துங் காணப் படுகிற ஒரு சிறந்த குணமாகும். மன்னன் கரிகால் வளவன் மகள் தனது காதலனாகிய வஞ்சிக் கோனைப் புனல் கொண்டு செல்லத், தான் புனலின் பின் சென்று "கன்னவில் தோளாயோ!" என அழைப்பக், கடல், அவனைக் கொண்டு வந்து முன்னிறுத்திக் காட் டக், காதலனைத் தழுவிக் கொண்டு பொன்னங் கொடி போலப் போதந்தாள். இதனையாம் அறியோமா? கற்புக் கரசியாகிய கண்ணகியார் செயலை யாம் அறியோமா?

(தொடரும்)

விகடப்பா

(274-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பின் வரும் 6 செய்யுள்களும் "புத்திந்தி மகளார் ஒருவர்" (A Woman of New India) இயற்றியதாக, ரெவ். F. கிங்ஸ் பெரி அவர்கள் உரையுடன் பிரசுரித் துள்ள அகப்பொருட் குறள் என்னும் நூலில் வருவன :—

பல்வகை வாந்தை.

(10) சாரழி யேறி இவரேனே அன்பனொடு

காராழி ஓத் தெரு ?

ஈராழி-இரண்டு சக்கரம், இங்கே அன்மொழித் தொகை-A Bicyle. இவர்தல்-ஊர்தல். காராழி-கருங்கடல்-(காராழி ஓத் தெரு-Marina)

(12) வன்றேர் நான் எறி இவர்ந்து மகிழ்வேனே
கன்மைத் தோட் காதலனோடு ?

வன்றேர்-A Motor car. கன்மை-கல்லின் தன்மை.

(13) மருங்குதேர் தன்னில் எனையிருத்தி வன்மை பெறும்
ஈராழி வேள் ஊர்வ தென்று ?

வன்மை பெரும் ஈராழி-A Motor Bicyle. மருங்குதேர்-A Side Car. வேள்-தலைவன்.

(16) வளிக்கலமீ தூர்ந்து மகிழ்வேன், அளியன்ன
கண்ணனது மார்பினிற் சார்ந்து.

வளிக்கலம்-An aeroplane. வளி-காற்று. அளி-வண்டு.

(22) அசையும் படக்காட்சி அன்பனொடு கண்டு
நசை தீரு நாளே நன் னாள்.

அசையும் படம்-The Cinema. நசை-அவா.

(31) குட்டிச் சுருட்டுக் குடித்துப் புகைத்திடுவேன்
இட்ட முடன் என் அன்பனோடு.

குட்டிச் சுருட்டு—A Cigarette. பண்டிதர்காள், இவளும் பெண்ணோ என்று ஐயுறுகின்றீர்களோ? ஆடவருக்கு ஒரு தருமம் அரிவையருக்கு ஒரு தருமமோ? *

பின் வருவன ஐந்தும் "பித்தன் பாடிய காதற் செய்யுள்"கள் :—

(1) "மற்றுப் பற்றெனக் கின்றி"

சங்கை தங்கெழில் சாந்த பூஷணி !
தையல் நாயகி ! தங்கமே !
கங்கை மாநதி பாயு நாவலந்
தீவை வாழ்விக்கும் கன்னலே !
பங்க யங்களில் வாழும் பாவையர் *
ஒருத்தி யாய்வரு பாங்கியே !
நங்கையே ! உனை நான்ம றக்கினும்.
சொல்லு நாஉன நாமமே.

(2) "உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன்"

உற்றாரை யான்வேண்டேன், ஊர்வேண்டேன், பேர்
வேண்டேன்,]
கற்றாரை யான் வேண்டேன், கற்பனவும் இனியமையும்;
முற்றாதபிறைநுதலாள் முருக்கிதழ் என்னிதழ்பொருந்தும்
அற்றமொன்று வாய்ப்பதுவே அவனிமிசை வேண்டுவனே.

---

* ஸரஸ்வதியும் லக்ஷ்மியும்.

(3) "கோள்ளேன் புரந்தரன் ம:லயன்வாழ்வு"
கொள்ளேன் அருந்ததி ஊர்வசிவாணி! குடிகெடினும்
நள்ளேன் உனையன்றி வேறொரு பெண்; நரகம்புகினும்
எள்ளேன், உனதன்பு நான்பெறின், என்றன்
[எழிற்குயிலே!
உள்ளேன் உனைவிடல்; உண்மையிஃதென்றன் உத்தமியே.

(4) தரவுகொச்சகக் கலிப்பா
செந்தழலே வந்தழலைச் செய்திடினுஞ் செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லால் அலராவால்:
வெந்துயரே நீதரினும், வேல்விழியென் ராணிபொன்னே!
அந்தமில் சீர்க் கல்லால் அகங்குழைய மாட்டேனே.

(5) எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத் தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்!
[மற்றவை போல்,
மெய்த்துயரே நீதரினும், வேல் விழியென் ராணி
[பொன்னே!
சித்தமிக உன்பாலே வைப்பே னடியேனே.

சிறுபிழை திருத்தம்.

(331-ம் பக்கத்தைப் பார்க்க.)

சென்னைச் சர்வ கலாசாலைப் பட்ட தாரிகள் என்னும் மகுடத்தின் கீழ் 1857ம் வருஷத்தில் சர்வ கலாசாலை ஏற்பட்டது என்பது சரியே. ஆயினும் "1861-62ம் வருஷத்திற்றான் பட்டமளிக்கத் தொடங்கிற்று" என்பது பிழை. 1858-ம் வருஷத்தில் என் தந்தையார் சி. வை. தமோதரம் பிள்ளையும், D. C. விசுவநாத பிள்ளையும் B. A. பட்டம் பெற்றார்கள். அடுத்த வருஷம் 1859ம் வருஷத்தில், தஞ்சை கோபால ராயர் B. A. பட்டம் பெற்றார். 1860 ஞு N. அச்சுதன் நாயர், B. A. பட்டம் பெற்றார். 1858-ம் வருஷத்தில் B. A. பட்டம் பெற்றவர்கள் நான் சொல்லியபடி இருவரே. 1859-ம் வருஷத்தில் ஸ்ரீ. கோபால ராயரைத் தவிர வேறே யாரும் உண்டோ என்பது நான் அறியேன். 1860 ஞுத்தில் அச்சுத நாயரைத் தவிர வேறே யாரும் உண்டோ அறியேன்.—F. கிங்ஸ்பேரி

குறிப்பு—சென்னை யூனிவர்ஸிடி காலெண்டர், II—569-ம் பக்கப்படி, 1861-62 முதலே பட்டங்கள் அளிக்கப்பட்டன. ப-ம்ப-ர்.

ரிக்வேத ஆரியர்*

ஸ்ரீமத் சிவத்தியாநாநந்த மஹர்ஷி, ரங்கோன்.

சில நாள்கட்கு முன்பு, கல்கத்தா ஸர்வகலாசாலையில் புராதன இந்திய சரித்திர ஆராய்ச்சியாசிரியரான ஸ்ரீமான் அபிநஸ் சந்திரதாஸ் என்பவர் வெளியிட்டுள்ள ரிக்வேத இந்தியா என்னும் நூலைப் படித்துப் பார்த்ததில், பூதத்துவ சாஸ்திரம் வானசாஸ்திரம் முதலிய நூற்களை யாதாரமாகக் கொண்டும், ரிக்வேத சூக்த வசனங்களது ஆதாரத்தைக் கொண்டும், பின்வரும் முடிவுகளுக்கு அவர் வந்திருப்பது தெரியவந்தது :—

[பூதத்துவ சாஸ்திரிகள் மதப்படி, ஜீவாரம்பசகம், பிரதம ஜீவசகம், மத்திய ஜீவசகம், நவீன ஜீவசகம், துரிய ஜீவசகம் என ஐந்து சகங்களுண்டு. ஒவ்வொரு சகங்களுக்குள்ளும் பல உட்பிரிவுகள் உண்டு. இவற்றுள் மூன்றாவது சகமாகிய நவீன ஜீவசகத்தில் தான் மனித ஜாதி பூமியில் ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது. அம்மனித சிருஷ்டி பிரத்தியேகமாய்க் கடவுளமைத்ததெனச் சிலரும், கீழ்த்தரப் பிராணிகளிலிருந்து பரிபூரணப்படுத்தப்பட்டதெனச் சிலரும் அபிப்பிராயப்படுகிறார்கள்.]

1. "நவீன ஜீவசகத்தின் நடுக்காலத்தில் ஸப்த ஸிந்துப் பிரதேசமாகிய பஞ்சாப், ராஜபுதனந் தொடங்கி கிழக்கே அஸ்ஸாம் வரையிற் சென்றிருந்த ஒரு நீண்ட கடலினால், தட்சிண இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டிருந்தது. இக்கடலின் ஒரு பகுதி, தற்காலம் ஸிந்து நதி கடலில் ஸங்கமமாகும் பிரதேசத்தில் இருந்தது. இவ்விதமாகத் தெற்கு கிழக்கு மேற்கு என்னும் மூன்றிடங்களிலும் கடலிருந்தது மாத்திரமே யன்றி, வடக்கிலும் இப்போது துருக்கிஸ்தானமுள்ள விடத்தில் கடலிருந்தது. அன்றியும் துருக்கிஸ்தானத்திற்குக் கிழக்கேயும், லாப்நார் ஏரிப்பிரதேசம் ஒரு ஆசிய மத்தியதரைக் கடலாக விருந்தது.

2. "தென்னிந்தியாவானது, ஆப்பிரிக்காவின் கீழ்கரை தொடங்கிப் பர்மாதொட்டு ஆஸ்திரேலியா வரையில் ஒரு பெரும் பூகண்டமா யிருந்தது. பின்பு ஒரு கம்பம் ஏற்பட, இக்கண்டம் தாழ்ந்து, ஸப்த ஸிந்துவிற்கும் விந்தியத்துக்குமிடையே யிருந்த கடல் நீங்கி, ஆரியர் தெற்கே செல்ல இடமாயிற்று. இதனையே அகஸ்தியர்

* ஆடிக் காசில் 339-342-ம் பக்கங்களைப் பார்க்க.

கடலைக் குடித்தாரென்றும், விந்தத்தை யழுத்தினரென்றும் புராணங் கூறும்.

3. "ஸப்த ஸிந்துப் பிரதேசந்தான் ஜீவப் பிராணிகள் உண்டான முதற் பிரதேசம். அதுவே ஆரியர் எண்ணரிய காலங்களாக விருந்து வந்த ஜநந பூமியாம். தட்சிண இந்திய கண்டத்தில் கோலர்களும் திராவிடர்களுமிருந்து வந்தார்கள். இப்படியன்றி, இக்கோலர்களும் திராவிடர்களும் ஸப்த ஸிந்துப் பிரதேசத்தில் வந்து குடியேறின ஆரியரால் துரத்தப்பட்டவர்களென்று என்னுவது தவறு. ஸப்த ஸிந்துப் பிரதேசத்துக்கு வடக்கிலும் தெற்கிலும் கடல்களிருந்தமையால், ஆரியர் உத்தர துருவப் பிரதேசத்திலிருந்து வந்தார்களென்பதும், தெற்குப் பிரதேசத்திற்குத் திராவிடர்களைத் துரத்தினரென்பதும், நம்பத்தக்க தல்ல. ஸப்த ஸிந்துவுக்கும் தட்சிண இந்தியாவுக்கும் இடையிலிருந்த ராஜபுதனப் பிரதேசக் கடலினல் இவ்விருவருக்கும் போக்கு வரவு இல்லாமலிருந்தது. ஸப்த ஸிந்துவுக்கு மேற்கே காந்தார தேசமும், அதனேடு தொடர்ச்சியாக மேற்கு ஆசியாவும், ஆசிய துருக்கிப் பிரதேசமுமிருந்தன.

4. "ராஜபுதனக் கடலும், அதன் கிழக்கே அஸ்ஸாம் வரையில் சென்ற கடலும், ரிக்வேத காலத்துக்கும் பிறகு உண்டான பூகம்பத்தால் மேடிட, மனுப்பிரளயம் ஏற்பட்டது. இப்பிரளய காரணமாகத்தான், ஐர்யானு விஜோவிலிருந்த ஜாரதுஷ்டிரர்கள், 'யிமன்' என்னும் அரசனின் கீழ் உத்தர துருவப்பக்கத்தில் தங்கினர்கள். இது ரிக்வேத காலத்துக்குப் பின்னரேற்பட்டதனல், ஸப்த ஸிந்து ஆரியரது புராதனத்தன்மை வெளியாகும். ரிக்வேத காலத்து ஆரியர்கள் உத்தர துருவப்பக்கத்துக்குப் போனர்களென்ருவது, அல்லது உத்தர துருவப்பக்கத்திலிருந்து வந்தார்களென்ருவது சொல்ல, ரிக்வேதத்தில் யாதொரு அத்தாட்சியு மில்லை.

5. "ஸப்த ஸிந்துப் பிரதேசம் முதலில் குளிராயிருந்து, ராஜபுதனக் கடல் மறைந்து பாலையேற்பட்டதும், படிப்படியாக உஷ்ணமாயிற்று. முதலில் ரிக்வேதத்தில் வருஷத்துக்கிருந்த 'ஹிமம்' என்ற பேர், 'ஹேமந்த'மாய்ப் பின் 'சரத்' என்றுனதே, அதற்கு அத்தாட்சி. ராஜபுதனக் கடலும் கங்கைச் சமவெளிக் கடலும் வற்றினதனல், பஞ்சாப் பிரதேசத்தில் மழை குறைந்தது. இமயமலையின் அடிவாரங்களிலிருந்த பனிப்படைகள்

நீங்கின. ஸரஸ்வதி திருஷத்வதி என்னும் கம்பீரமான நதிகள் சிற்றாறுகளாயின. மழைக்காலம், புராதன ஸப்த ஸிந்துப் பிரதேசத்தில் 3,4 மாதங்கள் வியாபித்து, ஸூர்யனும் ஸூர்யோதயமும் தெரியாமல் மறைத்தது.

6. "தட்சிணத்தைப் பற்றியாவது, பாஞ்சாலம், மகதம், கோசலம், விதேகம், அங்கம், வங்கம் என்னும் ஸப்த ஸிந்துப் பிரதேசத்தின் கிழக்கேயிருந்த தேசங்களைப் பற்றியாவது, ரிக்வேதத்தில் சொல்லப்படவில்லை. ரிக்வேதத்தில் சொல்லப்பட்ட 'கிகடம்' என்னும் பதத்தைக் கொண்டு, ரிக்வேத ஆரியர்களுக்குத் தட்சிணபீகார் பிரதேசத்தைப் பற்றித் தெரியுமென்று எண்ணுதல் பொருந்தாது. அச்சொல், ஸப்த ஸிந்துப் பிரதேசத்திலேயே ஒரு மலைப் பிரதேசத்தைக் குறித்திருக்கலாம்; அல்லது, தக்ஷிண கண்டப் பிரதேசமாகிய அவ்விடத்துக்கு ஆரிய வியாபாரிகள் கப்பலில் வந்திருக்கலாம்.

7. "ரிக்வேதத்தில் கறுப்பு மனிதர்களாகச் சொல்லப்படும் தாஸர்களும் தஸ்யுக்களும், கோலர் திராவிடர் வம்சத்தினரல்ல. வேதக் கடவுளரிடத்தும், வேதக் கிரியைகளிடத்தும் நம்பிக்கையற்ற ஆரியர்களே. கறுப்பென்று சொன்னது, அவர்களது நிறத்தைக் குறிக்காமல், அவர்களது குணத்தைக் குறிக்கலாம். விருத்திரன் என்ற மேகங்கள், பசுக்களாகிச் சூரிய கிரணங்களை மறைக்கும் புராதன கதையிலிருந்து, பின்னர் ஆடு மாடுகளைத் திருடும் தொழிலிலேற்பட்ட அநாகரிக ஆரியர்களுக்கு இட்ட பெயராகும்.

8. "ஆரியர்கள் ஸப்த ஸிந்துப் பிரதேசத்தையே ஜநந ஸ்தானமாக வுடையவர்கள். அவர்களுட் சிலர் தம்முள் நாகரிக மடைந்த வாரியரோடு ஒத்து முன்னேற முடியாததால் துரத்தப்பட்டார்கள். இவ்வேலை புதுக்கற்காலத்திலேயே (in the neolithic age) தொடங்கிற்று. கடைசியாகத் துரத்தப் பட்டவர்கள் அசுரர்களாகிய ஜராதுஷ்டிர மதத்தினர். இப்படித் துரத்தப் பட்டவர்கள், மேற்கு ஆசியாவிற் சென்று, அங்கிருந்த புதுக்கற் காலதுத் துரானியரோடு கலந்து, ஐரோப்பாவுக்குட் சென்றூர்கள்.

9. ஸப்த ஸிந்துப் பிரதேசத்திலிருந்த பணிகள் என்னும் கப்பல் வியாபாரத்திற் சிறந்த ஆரிய வகுப்பினர், வேத நம்பிக்கை யில்லாததோடு, அதிக விலைக்கு விற்கும் பேராசைக் காரர்களா யிருந்தமையின், அவர்களையும்,

வைதிகமத ஆரியர்கள், தங்கள் நாட்டைவிட்டு ஓட்டினர். அவர்களே, ராஜபுதனக் கடலும், கிழைக் கடலும் வற்றின தும், கூர்ஜ்ஜரப் பிரதேசத்தின் வழியாக வந்து, மலையாளக் கரையிலும் கிழைக் கரையிலும் தங்கினர்கள். இவர்களே பாண்டியர்கள் சோழர்கள் என்று விளங்கியவர்கள். இவர்கள், அங்கிருந்த திராவிடர்களை யாரிய நாகரிகத்துக் குட்படுத்திப், பின்னர் மேற்கு ஆசியா வட ஆப்பிரிக்காப் பிரதேசங்களுக்குச் சென்று, சால்டியா (சோள தேசம் போலும்) எகிப்து (பாண்டியரது வேலையிது) என்னும் பெரிய ராஜ்யங்களை ஸ்தாபித்தனர். இப்பணிகள் நாடோடிகளானதுபற்றி, ஸிரியா நாட்டிற்சென்று தங்கிப் பினீஷியர்களானர்கள். இவர்களே, பியூனிக் ஜாதியா ரென்று, மெஸபடோமியா, எகிப்து, பினீஷியா, வட ஆப்பிரிக்கா ஸ்வீடன் முதலிய இடங்களில் குடியேறி, ஐரோப்பிய சரித்திரத்திற் பிரக்யாதி பெற்றவர்களாம்.

10. “துரானியர்களோடு கலந்துபோன அநாகரிக ஆரியர்களே, இப்பணிகள் செல்லுவதற்கு முன் ஐரோப்பா விற் குடியேறி யிருந்தவர்கள் (மேல் 8 வது பாரா பார்க்க). அவர்களுக்குப் பின் காக்கேசிய மலைப் பிராந்தங்களில் இதர அநாகரிக (அல்லது அவைதிக) ஆரியர்கள் குடியேறினர்கள். பாண்டஸ் (வடமொழி பந்த்தா, மார்க்கம் என்பது பொருள்) என்னும் பிரதேசமே கான்ஸ்டான்டிநோபில் பூஸந்தி துவாரா (தற்காலம் இது ஜலஸந்தியா யுள்ளது) ஐரோப்பாவுக்கு ராஜ பாட்டையா யிருந்தது. இவ்வைதிக ஆரியர்களும் பணிகளுமே ஸெமற்றிக் ஜாதியாரோடு கலந்து, அவருக்குத் தங்களது நாகரிகத்தை யளித்தனர்.

11. “பார்ஸிகளது முன்னோரான ஈரானியர்கள் முதல் முதல் ஸப்த ஸிந்துப் பிரதேசத்திலிருந்தவர்களே. வைதிக ஆரியர்களது தெய்வங்கள், பாஷை, ஸோமயாகம் முதலியவற்றை யேற்றுக்கொண்டு, மிருகபலி கொடுத்தல், பிணஞ் சுடல் முதலிய மத விஷயங்களில் விரோதப்பட்டு, வேறாக மாறினர்கள். இவ்விரு வகுப்பினர்க்கும் ஏற்பட்ட போராட்டத்தையே ‘தேவாசுர யுத்தம் வெகு நாள் நடந்தது’ எனப் பௌராணிகர் கூறுவர். இவ்வைரானியர்களே, தூரிய ஜீவசகத்தில் உத்தர துருவப்பனிக்காலம் நீங்கின போது, துருவப் பிரதேசங்களுக்கு ‘யிமன்’ என்னும் அரசனோடு சென்று, திரும்பவும் ஈரான் பீட பூமிக்கும் வடமேற்கு ருஷியாப் பிரதேசத்துக்கும் சென்றவர்கள். (மேல் 4-வது பாரா பார்க்க.)

12. "ஐரோப்பாவின் பூர்வ குடிகள், வட ஆப்பிரிக்காவிலிருந்து சென்ற ஐபீரியர்களும், கான்ஸ்டாட்டுகளுமென்னும் நெடுந்தலையர்களாம். இந்நெடுந் தலையர்களே (Dolico cephalic race) டியூடான்ஸ் என்னுஞ் சாதியாரின் மூதாதையராவர். துரிய ஜீவசகத்தின் முற்பகுதிக் காலமாகிய பனிக்காலத்தில், இவர்கள் ஐரோப்பாவின் தெற்குப் பாகங்களில் தங்கிப், பின்னர்ப் பனிநீங்க ஐரோப்பா முழுவதும் பரவினர்கள். அவர்களுக்குப் பின் வந்த (Brachy cephalic) குறுந்தலையர்களான ஆர்ய துரானியர்கள், இவர்களோடு கலந்து, அவர்களுக்கு ஆரிய பாஷைகளைத் தந்தார்களாயினும், அத்துரானியர்கள், வைதிக மதத்தைச்சாராத ஆரியர்களின் நாகரீகத்தையே பெற்றிருந்தவர்களானதாலும், அவர்கள் மத்தியிலிருந்த ஆரியர்களின் தொகை சொற்பமாயிருந்ததாலும், பாஷை மாத்திரம் ஆரியமாகவும், மற்ற நடையுடை பாவனைகள் யாவும் துரானியமாகவும், நின்று விட்டன. இவர்கள் தவிர, கெல்ட்ஸ் என்ற வேறொரு ஆரிய ஸம்மந்த மற்ற துரானிய ஜாதியாரும், மத்திய ஐரோப்பாவிலிருந்து இங்கிலாந்து வரையிலும் பரவியிருந்தார்கள். (இங்கிலாந்து முன்பு ஐரோப்பா கண்டத்தோடு சேர்ந்திருந்ததென அறிக.) அவர்களையும், நீகிரோ வம்சத்தவராயிருந்து சீதளதேச வாசத்தால் வெளுத்துப்போன ஐபீரியர், கான்ஸ்டாட்டு என்னும் ஜாதியார்களையும், பின் வந்த ஆரிய துரானியர்கள் ஆரியர்களாக்கினர்கள்.

13. "மேற்கண்ட விஷயங்களிலிருந்து, ஆரியாது ஜநந ஸ்தானம் ஐரோப்பாவாவது, உத்தர துருவப் பிரதேசமாவது அல்லவென்றும், அவர்களது ஜன்ம பூமி ஸப்த ஸிந்துப் பிரதேசமே யென்றும், திலகர் சொல்லுகிறபடி ரிக்வேதத்திலாவது, பார்ஸீ வேதமாகிய ஜெண்ட் அவெஸ்தாவிலாவது ஆரியர்கள் உத்தர துருவப் பிரதேசத்திலிருந்து வந்தவர்கள் என்று கூற ஒருவித ஆதாரமுமில்லையென்றும், ஜெண்ட் அவெஸ்தாவில் சொல்லப்படும் துருவப் பிரதேச யாத்திரை ரிக்வேத காலத்துக்குப் பிறகு வெகு நாளைக்குப் பின்பு ஏற்பட்டதாகுமென்றும், விசதமாகும்."

இவைகளே ஸ்ரீமான் அபிநஸ் சந்திரதாஸரவர்கள் கோட்பாடுகளின் பூர்வபட்சமாகும். இனி இவற்றைப் பரிசீலிக்கவேண்டியதும் நமது கடமையேயாம்.

(இன்னும் வரும்) —தமிழர்நேசன்.

இன் கவித் திரட்டு

ஸ்ரீ. வே. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C., வெள்ளக்கால்

(297-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பரதர் சுமித்திரா தேவியைக் குகருக்குத் தெரிவித்தல்.

அறந்தானே என்கின்ற அயல்நின்றாள் தனைநோக்கி, "ஐய! அன்பின்
நிறைந்தாளை உரை" என்ன, "நெறிதிறம்பாத் தன் மெய்யை நிற்ப தாக்கி
இறந்தான் தன் இளம்தேவி, யாவர்க்கும் தொழுகுலமாம் இராமன் பின்பு
பிறந்தானும் உளன் என்னப் பிரியாதான் தனைப்பயந்த பெரியாள்" என்றான்.

பொழிப்புரை—(கோசலா தேவியின்) பக்கத்தில் நின்ற, தருமமே (அன்றிவேறல்லர்) என்று சொல்லப் பட்ட—தருமம் உருவெடுத்தாற் போன்ற—சுமித்திரா தேவியைக் குகர் நோக்கிப் "பரதரே! அன்பு நிறைந்த இவரை (இன்னாரென்று) உரைப்பீராக" எனப், பரதர், "முறை தவறாத் தமது உண்மையை நிலைநிறுத்தி (அதற்காக) மரணமடைந்த தசரதரது இளைய மனைவி, 'இராமருக்குத் தம்பி உண்டு' என்று சொல்லும்படி அவரைப் பிரியாத இலக்குமணனை ஈன்ற மகிமை யுடையார்" என்றார்.

விசேடவுரை—தம் பர்த்தாவும் சக்கரவர்த்தியுமான தசரதரது ஆணையை அநுசரித்துக் கோசலா தேவி தம் குமாரர் இராமரைக் காட்டுக்குச் செல்ல மனவருத்தத்துடன் விடை கொடுத்து விடுத்தார். சுமித்திராதேவியோ, அப்படிப்பட்ட ஆணை ஒன்றும் இல்லா திருக்கவும், அன்பினால் தூண்டப்பட்டு, இராமரைக் காக்க அவருக்குத் துணையாகத் தம் புத்திரர் இலக்குமணரைக் காட்டுக்கு மனம் உவந்து அனுப்பினார். அவர் அத்தகைய அசாதாரண அறச்செயல் ஆற்றிய அரும் பெருந்தகையாள ராதலை அறிவிக்க, அவரை 'அறந்தானே யென்கின்ற' என்ற அடைமொழியால் விசேடித்து மேம்படுத்துக் கூறினார்.

தசரதருக்கு மூன்றாந்தாரமான சுமித்திரா தேவியை 'அயல் நின்றாள்' என்றதனால், இரண்டாந்தாரமான கைகேயிதேவி கோசலாதேவிக்குப் பக்கத்தில் நில்லாமல், தாம் செய்த கொடுமையை நினைவு கூர்ந்து தூரத்தில் விலகி நின்றா ளென்பதை உய்த்துணரவைத்தார்.

குகர் தாம் முன் அறியாத சுமித்திராதேவியை 'அன்பின் நிறைந்தாள்' என்றது, அத்தேவியாரது அகத்தில் உள்ள பரிபூரணமான அன்பை அவர் முகம் "அடுத்தது காட்டும் பளிங்கே போல்" காட்டக் கண்டதனா லென்க.

தசரதரது சத்தியம், கைகேயி தேவி பரதர் நாடாளவும் இராமர் காடேகவும் அவர் பால் வரங்கள் கேட்கும் வரை மாறா திருந்ததென்பது குறிக்க 'நெறி திறம்பாமெய்' என்றும், அதனை அவர் என்றும் மாறாததாகச் செய்தது குறிக்கத் 'தம் மெய்யை நிற்பதாக்கி' என்றும் கூறினர்.

உண்மையைத் துறத்தலாதல் உயிரைத் துறத்தலாதல் இரண்டிலொன்று செய்தே தீரக்கடவதாக உற்றருரும சங்கடமான சமயத்திலே உயிரினும் உண்மை ஓம்பற்குரியதென உய்த்துணர்ந்து உண்மையைக்காக்க உயிரை நீத்த சத்திய விரதர் தசரத ரென்பதை, 'மெய்யை நிற்பதாக்கி இறந்தான்' என, நயம்பட உரைத்தார்.

இராமரைத் தனியாகப் பார்ப்போருக்கு, அவருக்குச் சகோதாருண்டோ இல்லையோ என்ற உணர்ச்சி இயல்பாக உண்டாகாது. அவரை இலக்குமணருடன் காண்போருக்கோ, முகவடிவ ஒற்றுமை முதலியவை காரணமாக 'இருவரும் சகோதரர், இராமர் தனியாகப் பிறந்தவரல்லர், தம்பி உடையவர் என்ற நினைவு, அவர்களுடைய முயற்சியின்றித், தானே தோன்றும். இந்த விரிந்த கருத்துக்களை 'இராமன் பின்பு—பிறந்தானும் உளன் என்னப் பிரியாதான்' என்ற சுருங்கிய மொழிகளால் இனிது விளங்கக் கூறிய நயம் பாராட்டற் பாலது.

கைகேயி கோடுமை வருணனை.

சுடுமையா னத்திடைதன் துணைவகத், தோன்றல் துயர்க்
கடலின் ஏகக்,
கடுமையார் கானகத்துக் கருணைஆர் கலிஏகக்,
கழற் கால் மாயன்
நெடுமையால் அன்றளந்த உலகெல்லாம் தன்மனத்தே
நினைந்து செய்யும்
கொடுமையால் அளந்தாளை "யார் இவரென் றுரை" என்னக்
குரிசில் கூறும்.

பொழிப்புரை—தம் உயிர்த்துணையான கணவர் (உயிரற்ற பிணங்களைச் சுடும்) சுடுகாட்டை அடையவும், தம் புத்திரர் துன்பக் கடலில் முழுகவும், கருணைக் கடலான இராமர் கடினமான (கற்களும் முட்களும் மிகுந்த) காட்டிற் செல்லவும், அக்காலத்தில் நெடுமால் திருவடி நெடுமையால் அளந்த உலகங்கள் அனைத்தையும் (இக்காலத்தில்) தாம் செய்த கொடுமையால் அளந்த கைகேயியை "இவர் யார் என்று கூறும்" எனக் குகர் வேண்டப், பரதர் கூறுவார்.

விசேடவுரை—கைகேயி செய்த கொடுமை, அறியாது செய்ததன்று, ஆராய்ந்து துணிந்து அறிவொடு கூடிச் செய்ததென்பது குறிக்கத் 'தன் மனத்தே நினைந்து செய்யும் கொடுமை' என்றார்.

திரிவிக்கிரமாவதார மெடுத்து ஈரடியால் மூன்றுலகங்களையும் அளந்த காலத்தில், திருமாலின் பாதம் பரவாத இடம் எங்குமில்லை; (எங்கும் எல்லாராலும் உணரப்பட்டதனால்,) கைகேயியின் கொடுமை பரவாத இடமும் எங்குமில்லை; என்ற கருத்து இனிது விளங்க, 'மாயன் நெடுமையால் அளந்த உலகெல்லாம் கொடுமையால் அளந்தாள்' என்று கூறிய கவிசாதுரியம் கண்டுகளிக்கத் தக்கது.

(இன்னும் வரும்)

ஆசிரியர்
அச்சுப் பிரசுராலயம்—புஸ்தகசாலை
மயிலாப்பூர்—சென்னை

விஜயமார்த்தாண்டம்—காதற்பத்து-கற்புப்பத்து.2-ம் பதிப்பு—நவரஸம் கொழிக்கும் நாவல்-பழமொழிக் களஞ்சியம்-விலை 1—4—0.

பாலராமாயணம்—இராமாயணக் கதையை இனிமையாய்க் கூறுவது—விலை 0—12—0.

பாரிஸ்டர் பஞ்சநதம்—புதிய சிறிய ரஸிக நாடகம்—0—6—0. பஞ்சாமிர்தம் சந்தாதாரர்க்குப் பாதி விலை—மூன்றணா தான்.

சீமைக் கடிதம்

(294-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீமதி M. லக்ஷ்மீ அம்மாள், (B. A. Hons.) லண்டன்

இங்கே கோடை காலம் வெகு மனோரம்மியமா யிருக்கிறது.. ஒன்று விட்டொரு நாள் மழை பெய்து காற்றுச் சுத்தமா யிருக்கிறது. குளிர் காலத்தின் மப்பால் மதிமயங்கி நாங்கள் பட்ட கஷ்டத்துக்குப் பரிகாரமாக, பகல் வெளிச்சம் பதினெட்டு மணி நேரம் நீடித்து நிற்கிறது: 'நீள்பகல்' முழுதும் ஓயாது பக்ஷிகள் சத்தமிடும் ஒலி காது கேட்கிறது. வெறுங் குச்சிகளாய் நின்ற மரங்க ளெல்லாம், இலையடர்ந்து பூ நிறைந்து காணுகின்றன. மழைக்கால உடையைக் கழற்றி யெறிந்துவிட்டு மெல்லிய உடை தரித்த ஜனங்கள், தலையை மொட்டை யடித்துக் கொண்ட குழந்தைகளைப் போல, சேஷ்டையும் குதூகலமும் நிறைந்தவர்களாய்த் தோன்றுகிறார்கள். வேனிற் காலத்தைப் புகழ்ந்து கொண்டாடுவது இங்கு வெறும் சம்பிரதாய மட்டு மன்று; வாஸ்தவமாகவே, சகல உயிர் ராசிகளிடத்தும் 'பழந்தனம் இழந்தவர் படைத்தவரை ஒத்த' களை விளங்குகிறது.

அருமையான கோடை நாட்களை மனதார வீணாக்குவார் யாருமே யில்லை. சனி ஞாயிறு தோறும், ரயில் ஸ்டேஷன்களில், வினோதார்த்தமாய்க் கிராமாந்தரங்களுக்குப் போய் வரும் ஜனங்கள் கூட்டம் திருநாள் கூட்டமே. கூடிய மட்டும், வீடுகளில் அடைபடாமல் வெளி யிடங்களில் விளையாட்டாய்ப் பொழுதைப் போக்கி, ஒட்டகை நீர் பருகுவது போல, வெயிலையும் நல்ல காற்றையும் பருகிச் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டு மென்பது தான் எல்லோருடைய கோரிக்கையும். பஸ்வண்டிகளில்,

மேல் தட்டில் தான் இப்பொழுது நெருக்கடி அதிகம். இத்தேசத்து நிலவளத்தைப் பார்ப்பதற்கும், பிரயாணம் செய்வதற்கும், ‘டெனிஸ்’ ‘கால்ப்’ ‘போடிங்’ முதலிய விளையாட்டுக்களை அப்பியசிப்பதற்கும், உத்ஸவங்கள் கொண்டாடுவதற்கும், இது தான் உசிதமான காலம். சனி ஞாயிறு ரஜாவில், என் சிநேகிதிகள் சிலருடன், கேம்ப்ரிட்ஜ், வின்ஸர், கான்டர்பரி முதலிய ஊர்களை நான் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். லண்டனிலிருந்து, எத்தனையோ ஜனங்கள் எங்களுடன் அவ் வூர்களுக்கு ‘ஸீனரி’ (கண்காட்சி) பார்ப்பதற்காக வந்திருந்தார்கள். பட்டண வாசத்தில் போல் தோட்டங்களில் மட்டு மின்றி, எங்கும் காடாய் மரஞ் செடிகளும், புல் பூண்டுகளும் தழைத்து வளர்ந்து, பூச் செறிந்திருப்பது, மிகவும் அழகான, சந்தோஷமான காட்சியாயிருந்தது. போன வாரம் என் சிநேகிதி யொருத்தியுடன் நான் வேம்ப்லிக்குப் போயிருந்தேன். (ஆறுமாதமாய் வெம்ப்லி சமாசாரத்தைப் பற்றி சருவதாபடித்தும் கேட்டும், அங்குள்ள அதிசயங்களைச் சென்று பார்த்தவர்களுக்கும் பாராதவர்களுக்கும் அதைப் பற்றிய பேச்சே அலுத்துப் போய் விட்டது. வெம்ப்லி என்ற ஒரு வார்த்தை கண்காட்சி யென்றும், வினோத மென்றும், விகடப்பேச் சென்றும், வெறுப் பென்றும் பல விதமாய்ப் பொருள் படும். நம்மூரில் வெம்ப்லிப் பேச்சு இவ்வளவு பலப்பட்டிரா தென்று நினைக்கிறேன்.) கூட்டத்துக்குப் பயந்து வெகுநாளாக நாங்கள் அங்கே போகவில்லை. கடைசியாய் நாங்கள் புறப்பட்டுப் போன தினம் ரஜாநாள். பளிச் சென்று வெயிலடித்துக் குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. பஸ் வண்டிகளில் இடமகப்படாமல் தரைக் கீழ் ரயில் (Tube Railway) வழியாய் வெம்ப்லி போய்ச் சேர்ந்தோம்; வெகு நேரம் காத்திருந்து கஷ்டப்பட்டு உள்ளே நுழைந்தோம்; அங்கேயுள்ள கூட்டத்தைப் பார்த்து, உடனே திரும்பி விடுவது தான் உசித மென்று எனக்குத் தோன்றிற்று. ஆனால் என் தோழி அதற் கிணங்கவில்லை. நாங்கள் காட்சிமைதானத்தில் ஒரு மோட்டின் மேலேறி நெடுகப் பார்த்தோம். மேடு பள்ளமான ஒரு பெரிய மைதானத்தில், ஒன்றுக் கொன்று இசை வில்லாத பல விசித்திரக் கட்டடங்கள் இருந்தன. எங்கும் பல வகைக் கொடிகள் நாட்டி யிருந்தன. ‘ஆஸ்திரேலியா’ வும் ‘கானடா’ வும் வெண்மையான பெரிய பங்களாக்கள் போல் தோன்றின. ‘இந்தியா’ வும் வெள்ளையாய், அழகிய

தூண்களும் ஸ்தூபிகளும் மண்டபங்களும் விளங்குவதாய், 'தாஜ்மஹால்' படத்தை நினைப்பூட்டியது. 'பர்மா பகோடா' அழகிய மரவேலையால் அலங்கரிக்கப்பட்டு விசித்திரமா யிருந்தது. 'ஆபிரிகர் செங்கோட்டை' கம்பீரமாய் பயங்கரமாய் நின்றது. இன்னும் எத்தனையோ கட்டடங்கள் வெவ்வேறு வடிவும் அலங்காரமும் உள்ளனவா யிருந்தன. யந்திரசாலை, சித்திரசாலை, கைத் தொழிற் சாலை முதலிய அரமனைகள் போன்ற கட்டடங்கள் தூரத்தில் தெரிந்தன. 'தமாஷ்பார்க்' கின் மத்தியிலிருந்து, ராட்டினங்களிலும் ரயில்களிலும் அதி வேகமாய்ச் சுற்றும் ஜனங்கள், 'கோ' வென்றிரைச்சலிடுவது காது கேட்டது. மைதானத்தின் மத்தியிலுள்ள ஒரு சிறு குளத்தைச் சுற்றியும், பாதைக ளோரங்களிலும், நிழலிடங்களிலும் போட்டிருந்த நாற்காலி பெஞ்சுகளில், ஜனங்கள் கையில் கொண்டு வந்திருந்த ஆகாரத்தைச் சாப்பிட்டுக் கொண்டும், களைப்பாறிக் கொண்டும் உட்கார்ந்திருந்தார்கள்.

கட்டடங்களின் வாசல்களில், உள்ளே போவாரும் வெளியே வருவாருமாக ஜனக் கூட்டம் பெருகிக் கொண்டேயிருந்தது. பாதைகளில் பஸ்வண்டிகளும் கைவண்டிகளும் மெதுவாய்ப் போய்க் கொண்டிருந்தன. ஹோட்டல்களின் வாசல்களில், உள்ளே இடமொழிந்து தங்கள் முறை வருமட்டும் காத்துக்கொண்டு, நூற்றுக் கணக்கான ஜனங்கள் நெடுக வரிசையாய் வால் பிடித்து நின்றார்கள். எங்குப் பார்த்தாலும் ஜனங்கள் மொய்த்துக் கிடந்தார்கள். மூன்று லக்ஷம் பேர் அன்று வெம்ப்லிக்கு வந்திருந்ததாக மறுநாள் தினசரிப் பத்திரிகையில் வாசித்தோம்.

கூட்டம் இவ்வளவு இருந்த போதிலும், ஓரிடத்திலும் குழப்பமில்லை. எல்லாரும் ஏககாலத்தில் உள்ளே நுழைவதற்கு முடியாத இடங்களி லெல்லாம், ஜனங்கள், தங்கள் முறை வருமென்று பொறுமையுடன் காத்துக் கொண்டு வரிசையாய் நின்றார்கள். அங்கங்கேயுள்ள கூடைகளிலன்றி, ஒருவராவது, பழத்தோலி, காகித முதலிய குப்பை செத்தைகளைக் கீழே யெறிய வில்லை. 'தமாஷ் பார்க்' ஓரிடத்தில் தவிர, வேறெங்கும் இரைச்சலே யில்லை.

கூட்டத்தில் நாங்களும் கலந்து, 'ஆஸ்திரேலியா' வுக்குள் முதலிற் போனோம். அத் தேசத்திலுள்ள

சுரங்கங்களிலும், இடைக் குடிகளிலும், பழத் தோட்டங்களிலும் நடக்கும் வேலைகளை, அழகிய 'மாடல்' களால் விளங்கக் காட்டி வைத்திருந்தது. பழவர்க்கங்களும் ஆட்டு மயிரும் அங்குள்ள முக்கிய வர்த்தகப் பொருள்களென்றும், பாடுபடுபவர்களுக்கு நல்ல பலன் கொடுக்கக் கூடிய தேச மென்றும் தோன்றிற்று. ஒழுங்காகச் சாமான்களைச் சோடித்து வைத்து, எளிதில் மனத்திற் பதியக் கூடிய விளம்பரங்களை எங்கும் தொங்க விட்டிருந்தது.

'கானடா' விலே அத் தேசத்தில் ரயில் மார்க்கமாய்ப் பிரயாணம் செய்தால் பார்க்கக் கூடிய காடுகளையும் மலைத் தொடர்களையும், 'மாடல்' களாலும் படங்களாலும் நெடுகக் காட்டி யிருந்தது. கம்பளிகளும், மர சாமான்களும், பழவர்க்கங்களும் ஏராளமாய் வைத்திருந்தது. 'ஆபிரிகா' வின் ஒரு பாகத்தில், தங்கச் சுரங்கத்தில் வேலை நடக்கும் விதம் அநேக 'மாடல்' களால் காட்டி யிருந்தது. அங்கே சில நீக்கிரவர்கள் வாயில் காப்போர்களாய் நின்றார்கள். பர்மா காட்சி யிடத்தில், வெகு அழகிய மரவேலை சாமான்களையும், தந்தவேலை சாமான்களையும், அத் தேசத்துக் குடைகளையும், புத்த விக்கிரகங்களையும் பார்த்தோம்.

என் சிநேகிதி, 'இந்தியா' வைப் பார்க்கத்தான் வெகு ஆசைப்பட்டாள். நெசவுப் பொருள்களும், தானியங்களும், மரசாமான்களும், பித்தளை சாமான்களும், வெள்ளிப் பாத்திரங்களும், நகைகளும், விளையாட்டுச் சாமான்களும், இன்னும் பல பொருள்களும் தினுசு தினுசாய் வெவ்வேறிடங்களில் கடை பரப்பி வைத்திருந்தது. சென்னை ராஜதானிப் பொருள்கள் ஓரிடத்தில், வங்காளத்துச் சாமான்கள் ஓரிடத்தில், பீரார் சாமான்கள் மற்றோரிடத்தி லென்று, வெவ்வேறிடத்துச் சாமான்களைத் தனித் தனியாகப் பிரித்து வைத்திருந்தது. 'இந்தியா' வில் சாமான்களை விற்கத் தயாராய் நின்ற இங்கிலீஷ் பெண்களிற் சிலர், ஸாரி யுடுத்திக் கொண்டிருந்தார்கள். அதிசயமான சாமான்களை நான் தேடவில்லை; தினமாய் நாம் ஆளும் சாமான்களைப் பார்த்துப் பூரித்துக் கொண்டிருந்தேன். வெண்கலப் பானையின் வடிவையும் அழகையும் பார்த்து என் சிநேகிதி மெச்சினதும், பாய்களைச் சுவரில் மாட்டும் திரைக ளென்றும், காலணியைக் கழுத்தணி யென்றும் தாறுமாறாக அவள் ஊகித்துச் சொன்ன

தும், எனக்கு வேடிக்கையா யிருந்தன. நெடுகப் போய்ப் பார்த்து முடிந்த பின், நமது இந்தியா தேசத்தின் செல்வமும், செழிப்பும், கைத்தொழிலும் வர்த்தகமும், நாம் பெருமை பாராட்டத் தக்கன வென்று அவள் மனத்தில் படவில்லை. அதைப் பற்றி வெகு நேரம் தர்க்கம் செய்த பின், அவள், வெம்ப்லியில் பார்த்தது கிடக்க, வாஸ்தவத்தில் இந்தியாவானது கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் மேம்பட்டதா வென்று கேட்டாள்; இல்லை யென்று நானும் ஒப்புக் கொண்டேன். அங்கிருந்து சித்திரசாலைக்குப்போய் ஓர் அரமனையின் சர்வ அங்கங்களையும் நுட்பமாய்த் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள இராணியின் பொம்மை வீட்டை (The Queen's Doll House) போய்ப் பார்த்தோம். அப்புறம் 'தமாஷ் பார்க்கு' க்குப்போய், கிடு கிடு ரயிலில் ஏறி, ஆசைதீரத் தலைகிறுங்கச் சுற்றினோம். அங்குள்ள 'மாடல்' நிலக்கரிச் சுரங்கத்துக்குள் போய், தங்கக் கட்டியினும் அருமையான நிலக்கரி எப்படிக்கிடைக்கிறதென்று பார்த்தோம். அரைமணி நேரம் 'வால்பிடித்து' நின்று உள்ளே நுழைந்து, ஒரு ஹோட்டலில் டீ வாங்கிச் சாப்பிட்டோம். இதற்குள் அஸ்தமித்துவிட்டது. எட்டுமணி நேரம், காலைவீசிக்கூட நடப்பதற்கின்றி, அசைந் தசைந்து நடந்து, எங்களுக்கும் அலுத்துப் போய் விட்டது. வழியில் நின்ற சில கட்டடங்களை மட்டும் பார்த்து விட்டு, வீட்டுக்குத் திரும்பினோம். வெம்ப்லியில் நாங்கள் பார்க்க நினைத்த காட்சிகளில் பத்திலொரு பங்கு கூடப் பார்த்து முடியவில்லை. ஆனால் நாங்கள் எதிர் பாராத வண்ணம், பெரும் ஜனக்கூட்டத்தின் மத்தியில் பலர் மனத்திலும் தோன்றிய விழாவயர்ச்சியைக் கண்டு களித்து, வேடிக்கையாய்ப் பொழுதைப் போக்கினோம். அடுத்த தடவை கொட்டு மழையில் வெம்ப்லிக்குப் போகப் போகிறோம்.

Now Ready-One Rupee-Each

1. KUSIKA'S SHORT STORIES
   ON MARRIAGE REFORM & ALLIED TOPICS
   REVISED COMPLETE EDITION—27 STORIES
2. LIEUT. PANJU: A MODERN INDIAN

Mr. Madhaviah's Latest—A Fascinating Novel

THE AUTHORS' PRESS & PUBLISHING-HOUSE, MYLAPORE.

மூடக் கொள்கைகள்

(வெருலாம் பிரபு பிரான்ஸிஸ் பேகன் என்பவர் இங்கிலீஷில் எழுதியது)

(321-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீ. வே. நாராயணையர், M.A., M.L., மொழிபெயர்த்தது.

கடவுளின் தன்மையைப் பற்றித் தகாதன கொள்வதைக் காட்டிலும் யாதொரு கொள்கையு மின்றி இருப்பது நன்று ; இது பக்தியீனமாகு மெனில் அது தெய்வ நிந்தனையாகும் என்றறிக. வாஸ்தவத்தில் மூடக் கொள்கை கொள்வது கடவுளைப் பழித்த தாகும். ப்ளூடார்க் என்பவர் இது விஷயமாய்ப் பொருந்த ஒரு நல்லுரை செய்திருக்கின்றார் : (அவர் சொல்வதாவது) : "உண்மையில், (சனிக் கடவுளைப் பற்றிக் கவிகள் கூறியன போன்று) ப்ளூடார்க் என்பான் தன் குழந்தைகளை அவை பிறந்த வுடனேயே விழுங்கிவிடுவான் என்று மானுடர் பேசுவதைக் காட்டிலும் ப்ளூடார்க் என்றொருவனே இவ் வுலகில் இருந்ததில்லை என்று பேசுவது எனக்குப் பரம சம்மதமே." என்பது.

இவ்வித அவமதிப்புக் கடவுள்பால் அதிக நிந்தனையாவது போல மனிதர் பால் அதிகம் அபாயம் விளைக்கும் ; தெய்வம் இல்லை என்று கொண்டால், தன் சுயபுத்தி ; தத்துவ உணர்ச்சி ; இயற்கையாயுள்ள நல்லற நினைவு விதிகளின்படிக்கும், ஜன சமூக நன்மதிப்பின் படிக்கும் ஒழுங்கான நடையில் நடப்பது, இவற்றிற்கு வகையுண்டு. மத நம்பிக்கைகளின் உதவியின்றியே இவை யெல்லாம் மனிதனை நல்லொழுக்கத்திற் செலுத்துவன. மூடக் கொள்கைகளோ, இவற்றின் ஆதிக்கத்தை நீக்கி, மனிதர்களின் மனத்தில் கட்டுக் கடங்காத தமது ஆதிக்கத்தையே ஸ்தாபிக்கின்றன. ஆகவே, கடவுளை மறுக்கும் கொள்கையால் நாடுகள் எக்காலத்திலும் சீர் குலைந்ததில்லை. ஏனெனில், தெய்வ நம்பிக்கை யில்லாதவர் மேல்வருவனவற்றை எதிர்பார்த்தில்லாதவராய், இவ் வாழ்க்கையிலே கருத்துடையவரா யிருக்கின்றனர் ; தெய்வ நம்பிக்கை குன்றிய காலங்கள் (உதாரணமாக, அகஸ்டஸ் கெய்ஸர் காலம்) குழப்பமற்று அமைதியோடு இருந்தன. மூடக் கொள்கைகளோ, அநேக ராஜ்யங்களைச் சீர் குலைத்து ராஜ்ய நிர்வாகத்தின் சகல மண்டலங்களையும் * புதியதோர் சலனசக்தி போல் * ஆட்டி வைக்கின்றன.

மூட நம்பிக்கைகளுக்கு அதிகாரிகள் பொது ஜனங்கள் ; மூடக் கொள்கைகளில் எப்பொழுதும் அறிஞர் மூடரைப் பின்

* ஆகாயத்திலுள்ள சந்திரன், சூரியன் செவ்வாய் புதன் குரு சனி முதலிய மண்டலங்களை ஆட்டிவைப்பது Primus Mobile என்ற ஒரு சக்தி என்பது பண்டை ஐரோப்பியர் கொள்கை.

பற்றுவர்; நடத்தைக்குத் தக்கவாறு தலைகீழாய் வழக்காடிக் காரணங்கள் கண்டு பிடிப்பர். * * *

மூடக் கொள்கைகளுக்கு ஆதாரங்களாவன: இந்திரியங்களைக் கவர்ந்து இன்பம் பயக்கும் சடங்கு விதிகளும் அநுஷ்டானங்களும்; தூயவெனத் தோற்றும் வெளி வேஷங்களும்; மடாலயங்களில் பெருகும் பழக்க வழக்கங்களைத் தூய வழிகள் எனக் கொண்டாடுதலும்; பணத்துக்கும் பேருக்குமாய் மதாசாரியர் செய்யும் சூழ்ச்சிகளும்; மனது தூயதாக இருந்தாற்போதும், அபிப்பிராயங்கள் எப்படியாயினும் பாதகமில்லை என்று புதிய அபிமதங்களுக்கு இடங் கொடுத்தலும்; தெய்வீக விஷயங்களை மானுட விஷயங்களைக் கொண்டு அறிய விரும்பி, இருவகை விஷயங்களையும் தலை மயக்குறக் கலந்து குழப்புதலும்; விபத்துக்களும் கஷ்டங்களும் மிகுந்து, நாகரிக மற்றிருத்தலுமே.

முகத்திரையை நீக்கி நோக்கின், மூடக் கொள்கைகளின் குரூபம் தோன்றும். குரங்கு மனிதனை யொத்திருந்தால் அதற்கு அது குரூப மாவதுபோல, மத உண்மைகளை யொத்திருக்கும் மூட நம்பிக்கைகளும் குரூபமானவை. நல்லுணவு கிருமிகளாக மாறிக் கேடுறுவது போன்று, நன்மார்க்கங்களும் நல்ல நியமனங்களும், நாளடைவில், அற்ப ஆசாரங்களாக மாறிவிடுகின்றன. ஆதலின், பழைய மூட நம்பிக்கைகளை விலக்கி, அவற்றிற்கு நேர் எதிரிடையாக நடந்து கொள்வதே யுக்தம் என்று நினைத்து, மூட நம்பிக்கைகளினின்று விலகுவதும் ஒரு மூட நம்பிக்கையே. பொது ஜனங்கள் சீர் திருத்தத்தில் தலையிட்டால் அவர்கள் எல்லாவற்றையும் ஒருங்கே நீக்குவது வழக்க மாதலின், கெட்டவைகளோடு நல்லவைகளையும் ஒருங்கே கழியாமல் நாம் பகுத்தறிவுடன் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும். —தமிழர் நேசன்.

பத்திராதிபர் குறிப்புக்கள்

(350-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

திருவாங்கூர் மஹாராஜா.—ஸ்ரீ மூலம் திருநாள் ஸர் ராம வர்மா அவர்கள், தமது 67 வது வயதில், இந்த மாதம் 7உ அன்று உலக வாழ்க்கையை நீங்கினர். இவர் நமது பழைய பழக்க வழக்கங்களிலும் கொள்கைகளிலும் மிக்க நம்பிக்கையும் பற்றும், குடிகளின் நன்மையில் ஊக்கமும் உடையவர். எனவே, வைக்கத்துச் சத்தியாக்ரகம்

இவர்க்குக் கவலையைக் கொடுத்திருக்கும்.........தீயோடு பழகுவதுபோல அதிகம் நெருங்காமலும் விலகாமலும் அரசரோடு பழகவேண்டு மென்பதும், அரசர்க்குத் தோழர் என்பாரில்லை யென்பதும் முது மொழி. இயற்கையில் ஏற்பட்ட சாது குணத்தினாலும் உள்ளன்பினாலும் இவர்க்கு இரண்டொரு தோழர் இருந்தன ரென்றும், அவர்பால் விசேஷ விசுவாசமும் பிரியமும் இவர் பாராட்டி வந்தன ரென்றும் கூறுவர்...இவர் ஆண்டுவந்த காலத்தில், திருவாங்கூரின் துரைத்தன நிருவாக முறையில், காலத்துக்கேற்ற சில முன்னேற்றங்கள் ஏற்பட்டன. மருமக்கள் தாய முறைப்படி இவர்க்குப் பின் ஆளுதற்குரியவர், இப்பொழுது 12-வயதுச் சிறுவரா யிருக்கின்றனர்....இந்தியா முழுதும் ஒரு நாடாக, ஒரு ஜன சமூகமாக முன்னேற்றமுறும் முயற்சிக்கு, இத்தகைய சுதேச மன்னராளும் ராஜ்யங்கள் தடைகளே என்று சிலரும், உதவிகளென்று சிலரும் எண்ணுகின்றனர். கால சக்கரமே உண்மையைக் காட்ட வல்லது....மேலான விசாலமான நோக்கமும், தியாக புத்தியும், குடிகளின் முன்னேற்றத்தில் உழுவலன்பும் உடையவர்களாகி, சுதேச மன்னர்கள், விடம்பரங்களைத் துறந்து ஒழுகுவாராயின், இந்திய சுயராஜ்யம் விரைவில் அணுகலாகும்; எனினும், இவர்களில் பெரும்பாலார் சூத்திரப் பாவைகள் போன்றவரே என்பதையும், சூத்திரதாரிகள் வேறுளர் என்பதையும் நாம் மறக்க வொண்ணாது.

வெள்ளச் சேதம்.—நம்மினும் அதிகம் கஷ்டப்படுவோரைக் கண்டு நாம் சிறிது ஆறுதல் அடைவது மனித சுவபாவம். சீன தேசத்திலே பெரு வெள்ளம் பெருகி ஐம்பதினாயிரம் பேர் வரை மாண்டனர் என்றும், பல ஊர்கள் பாழாயின என்றும், ஒரு செய்தி எட்டியுள்ளது. இதில் மெய் எவ்வளவு, பத்திரிகைக் காரர்களின் படிற்றுரை எவ்வளவு என்று, இன்னும் தெரிந்திலது. தென்னிந்திய வெள்ளத்தால் உள்ளபடி நேர்ந்த பெருஞ் சேதம் நிற்க, தென் கன்னடத்தில் எண்ணூயிரர் மாண்டனரென்றும், சிறுதுருத்தியில் 64 மாணவர்கள் ஓர் உபாத்தியாயரோடு மாண்டனரென்றும், நமது பத்திரிகைகளில் சில கட்டிவிட்ட புளுகு ஞாபகத்துக்கு வருகின்றது.

நம் நாட்டு வெள்ளக்கஷ்ட நிவாரண நிதிக்குப் பஞ்சாமிர்தத்தின் உதவியைப் பற்றிய விளம்பரத்தை மற்றொரு பக்கம் பார்க்க.

தேசத் தொண்டர் மூவர்:—I. டாக்டர் ஆனி பெஸண்ட். முதலில் ஒரு கிறிஸ்தவ மதாசாரியாரின் மனைவியாயிருந்து, பிறகு நாஸ்திகராகி அவரை நீங்கி, நாஸ்திகப் பிரசாரம் செய்து, பிறகு தியோஸாபிக்கல் சொஸைட்டி என்னும் ஆஸ்திக சங்கத்தைச் சேர்ந்து, இப்பொழுது சில ஆண்டுகளாக அதன் தலைமை வகித்துவரும் இவ்வம்மையார், உலக மேதையாராய்ப் புகழுற்றிலங்கும் மாது சிரோமணிகளில் மிகச் சிறந்த ஒருவர் என்பதை, இவர்

டாக்டர் ஆனி பெஸண்ட்

விரோதிகளுமே மறுக்கார். இவர் இராசியத் துறையில் உழைக்கப் புகுந்து 50 ஆண்டுகளாகின்றன; இவற்றில் பெரும் பகுதி இந்தியாவிலே கழிந்து வருகிறது. இந்தியாவில் காணும் புத்தியக்கத்துக்கும் கிளர்ச்சிக்கும் இவரும் ஒரு மூலகாரணர் என்பதுறுதி. அரிய பெரிய வினைகளை வேண்டியவாறு சூழ்ந்து முடிப்பதில் மிக்க திறன் வாய்ந்தவர் இவர்; ஆங்கிலச் சொற்பொழிவாளர்களில் உலகப் பிரசித்தமானவர்; துரைத்தன சம்பந்த

மாயும் மதசம்பந்தமாயும் இவர் இயற்றியுள்ள நூல்கள் மிகப் பலவாம். தன் னெஞ்சறிவது பொய்யாத தீரரென்று இவரை எல்லோரும் புகழ்ந்ததுண்டு. இந்தியரின் சுதந்தரத்தைப் பற்றி எழுதியதற்காக, இவர், தன் சுதந்தரத்தை யிழந்து காவலிலிருந்தது முண்டு. பொதுநன்மைக்காக உழைப்பார், ஜனங்களில் சிலர் பிரியத்தையும் மதிப்பையும், சிலர் அப்பிரியத்தையும் அவமதிப்பையும் அடைதல் இயல்பு; இவரும் அவ்வாறே பெற்றுள்ள ரென்பதைக் கூற வேண்டுவதில்லை. இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து, தன் னெஞ்சறிவது பொய்யாது இவர் உழைப்பாராக!

II. ஸ்ரீமதி ஸரோஜனி நாயுடு :—இவர் புக்ககமாகும் தமிழ் நாட்டுக்கும் இவர்க்கும் விசேஷத் தொடர்ந்த முண்டு.

ஸ்ரீமதி ஸ்ரோஜனி நாயுடு.

வடமொழிப் பயிற்சிக்கும் யோக வித்தைக்கும் பெயர் போன ஒரு வங்காளப் பிராமண குடும்பத்தைச் சேர்ந்த இவர், ஹைதராபாதிலே பிறந்து வளர்ந்தவர்; ஆங்கிலத்தில் தேர்ந்து சிறு வயதிலேயே கவிபாடத் தொடங்கி; பதினைந்து பிராயத்துக்கு முன்னரே டாக்டர் கோவிந்தராஜுலு என்ற தமிழ் நாட்டார் மீது காதல் கொண்டு; இருவர் குடும்பத்தினருமே சாதி வேற்றுமையால் தடுக்க, காதல் முறிபடுமாறு இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டு; மூன்றாண்டுகள் ஆங்குக் கல்வி பயின்றபின் இந்தியாவுக்கு மீண்டு, தன் பழைய காதலரையே மணம் புரிந்தார். இவரது ஆங்கில கவிகள் அழகும் இனிமையும் ததும்புவன. இப்பொழுது சில்லாண்டுகளாகக் கவித் துறையை விட்டு, இராசியத் துறையி லிறங்கி, அரிய பெரிய தேசத் தொண்டுகளைச் செய்து வருகிறார். தட்டுத் தடையின்றி (அமுதக்) கடல்மடை திறந்தாற்போல, இனிமையும் கம்பீரமும் கலந்த குரலில் ஆங்கிலத்தில் இவர் பேசுவதைக் கேட்டவர், முதன் முறையேனும் பரவச மாகுதல் திண்ணம். இத்தகைய சொல்வன்மையோடு, அருமையான, எவரும் எதிர்பாராத சாமர்த்தியத்தையும், இவர், தன் புதிய உழைப்பில் காட்டி வருகிறார். சமீபத்தில் தென் ஆபிரிக்கா சென்று, ஆங்கு பலவித கஷ்டங்களை யநுபவித்து வரும் இந்தியர்களின் பொருட்டுப் பாடுபட்டு, 'மகாத்மா காந்திக்குப்பின் இவ்வளவு நன்மை விளைத்தவரில்லை' என்னும் படி தேசத்தொண்டு செய்து திரும்பினர். இப்பொழுது நாட்டிலுள்ள கட்சிகளைச் சமரசப்படுத்துவதிலும், வெள்ளக்கஷ்ட நிவாரணத்துக்கு நிதி சேர்ப்பதிலும் உழைத்து வருகிறார். அடுத்த காங்கிரஸுக்கு இவரையே தலைவராக்க வேண்டுமென்று பலர் கூறுவதே, இவரது தேசத் தொண்டின் சிறப்பை விளக்கும். இப்பொழுது இவர்க்கு வயது நாற்பத்தைந்தே; இன்னும் பல்லாண்டு பல்லாண்டு இவர் சுகஜீவியாய் வாழ்ந்து, நம்நாடு சுயராஜ்ய பதவியடைவதன் பொருட்டுழைத்து, அவ்வருமைக் காட்சியையும் கண் குளிரக் காண்பாராக! III டாக்டர் ரவீந்திரநாத தாகூர் :— இக்கவீசரைப் பற்றி அதிகம் எழுத வேண்டுவ தில்லை; தெய்வீகமான கவி வன்மையோடு, விசால புத்தியும், உலக ஞானமும், தீர்க்க திருஷ்டியும், நம்மவர்க்கு உள்ளக்கசப்பான உண்மைகளை அஞ்சாது எடுத்தோதி இடித்துக் கூறும் தீரமும் வாய்ந்தவர்; உலகப்பிரசித்தரான இந்திய மகான். இவர் சமீபத்தில் சீன, சியம் முதலிய கிழக்காசியச்

சீமைகளுக்குச் சென்று திரும்பினர். 'என்னுடு எனக்கு' என்று தன்னயமே கருதும் குறுகிய நோக்கமில்லாது, 'உலகத்திலே யுள்ள மக்கள் அனைவரும் ஒரே கடவுளின் புத்திரராக ஒத்து வாழவேண்டும்; அவ்வுணர்ச்சியை இந்தியாவே உலகத்துக்குக் கொடுத்தற்குரியது' என்று நம்பி ஒழுகுபவர். 'அன்னை உமை, அப்பன் அரன், சுற்றம் அவனடியார், என்னூர் உலகொரு மூன்றே' என்று கூறிய மகானது நாட்டவராயிலங்குதற் குரியவரே. இவர் சீனா சென்று திரும்பியதில், சீனர்களில் சிலர் மேலையரது லோகாயத நடைகளையும் நாகரிகத்தையும் நன்கு மதித்து, ஆன்மலாபத்தை மறந்து, அவ்வழியைப் பின்தொடர விரும்புவதாகத் தெரிய வந்தது. அன்றியும், இந்திய சீக்கியர் சிலர், சீனாவில் போலீஸ் உத்தியோகத்தில் அமர்ந்து, அந்நாட்டு ஏழைக்குடிகளை இம்சிப்பதாகவும் தெரியவந்தது. அடுக்களைப் பூனை அம்பலத்தில் சிங்கம் போல் நடிப்பதும்; அடிமைகளுக்கு அதிகாரம் கிடைத்தால், 'அரைப்பணத்துக்குப் பவுஷுவரின் அர்த்த ராத்திரிக் குடை பிடிக்கும்' என்னும் பழமொழிக்கிணங்க,

LXXII

டாக்டர் ரவீந்திரநாத் தாகூர்

படாடோபம் செய்வதும், இயல்பே; எனினும், இந்திய ராகும் நமக்கு வெட்கத்தைத் தருவதாகும்.

இருகிளையாட்சி—கிணறு வெட்டப் பூதம் புறப் பட்டது போல, அரசியல் சீர்திருத்தங்களின் விளைவாகப் போந்த இவ்வேற்பாடு, எவர்க்கும் பிடிக்கவில்லை. சீர் திருத்தக் கமிட்டியார் விசாரணையில், எல்லாச் சாக்ஷிக் காரரும் இதன் சாமகவியையே பாடுகின்றனர். உண் மையில் அதிகார மில்லாதாரது அந்தஸ்தும், பணமில்லா தாரது படாடோபமும், புலித்தோல் போர்த்த நெடுஞ் செவியனது வாழ்வுபோல, நீடித்து நிற்கா தென்பதைக் கூறவேண்டுமோ? நாட்டின் சுயராஜ்யக் கூக்குரலை இத் தகைய சீர்திருத்தங்களாலும், போலி மந்திரி களாலும் சமாதானஞ் செய்ய முயலுதல், "பாச்சி பாச்சி என்றழும் பாலர்க்குப் பூச்சி பூச்சி என்பது போலாம்."

வருஷ சந்தா உள் நாடு ரூ. 4.

வருஷ சந்தா வெளி நாடு ரூ. 6.

லோகோபகாரி

முப்பது ஆண்டுகளாய் நிலவி வரும்

வாரப் பத்திரிகை.

ஆசிரியர். பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிர் பெற்றுப் பொற்படைவதற்குப் பாடுபடும் ஒரு பத்திரிகை. லோகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் சமாச் சாரங்களெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். பாரத தேசம் சகல அம்சங்களிலும் சுயராஜ்யம் பெற்று லோகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டு மென்பது லோ கோபகாரியின் நோக்கம்.

"லோகோபகாரி" பத்திரிகாலயம்,

கோமளேசுவரன்பேட்டை, சென்னை. MADRAS.

திருக்குறள் — தமிழ் வேதமாகக் கருதப்படும் இந்நூலும், ஆரிய வேதங்களைப் போலவே, பொதுஜன மதிப்புக்குத் தக்க வெகுஜனப் பயிற்சி பெற்றிலது. சாமானியர்க்கு, இதன் பாகங்களில் பல, எளிதில் பொருள் விளங்காமையும்; பழைய உரை அன்னார்க்குப் பயன்படாமையுமே இதன் முக்கிய காரணங்களாம். தமிழ் மொழியில் புலமை யில்லாதவராய், வாசிக்க மட்டும் தெரிந்தவரா யுள்ள லக்ஷக்கணக்கான சாமானிய ஜனங்களும் எளிதில் படித்து, அநுபவித்து, பயன் பெறக் கூடியவாறு, சில நூறு குறள்களை மட்டும் திரட்டி, சிறிய தெளிய உரையுடன், நான்கணாவுக்கு மேற்படாத விலைக்கு வெளியிட உத்தேசித்திருக்கிறேன். கடினமான குறள்களும், தற்காலத்துக்கு அதிகம் பொருத்தமில்லாத குறள்களும், காமச்சுவை மிக்குள்ள குறள்களும், இத்திரட்டில் சேர்க்கப்படா. தமிழ்ப் புலமையும் திருக்குறட் பயிற்சியுமிக்குள்ள பண்டிதர் அறிவாளர் பலர், இவ்வேலையில் எனக்கு மனமுகந்து உதவி புரிந்து கொண்டிருக்கின்றனர். இத்தகைய பதிப்பில் அக்கரை யுள்ளார் தங்கள் அபிப்பிராயங்களை எனக்கெழுதியனுப்ப வேண்டுகிறேன்.

அ. மாதவையர்

The Authors' Press And Publishing = House

ED. ELLIOT RD. MYLAPORE

The Best and the Cheapest

For All Job & Book Work

GIVE US A TRIAL.

ஸ்ரீ. அ. மாதவையர் புஸ்தகங்கள்

[1] பத்மாவதி சரித்திரம்—முதலிரண்டு பாகங்கள்-416 பக்கங்கள்-10 படங்கள். எல்லா விதத்தாலும் தமிழ் நாவல்களில் முதன்மை வாய்ந்தது—ஐந்தாம் பதிப்பு-ரூ 2-0-0.

குறிப்பு—இந்த நாவலின் மூன்றும் பாகம் இப்பொழுது நூதனமாக மாதந்தோறும் பஞ்சாமிர்தம் பத்திரிகையில் வெளி வருகின்றது.

[2] விஜயமார்த்தாண்டம்—இரண்டாம் பதிப்பு—1-4-0. மதராஸ் மேயில்-இந்த நாவலைப்பற்றி :—"கதை மிகவும் புதுமாதிரியாகவும் ஆனந்தகரமாகவும்; நடை, செந்தமிழ் எழுதுவதில் கியாதி பெற்ற இந்த நாவலரின் கீர்த்திக்குப் பொருந்தியதாகவும், இருக்கின்றது" என்று சொல்லிற்று. இந்த நாவல், I காதற் பத்து, II கற்புப் பத்து என்று இரண்டு பாகங்கள் அடங்கியது. பழமொழிக் களஞ்சியம். நமது ஜமீன்தார்கள், நகரத்துச் செட்டிகள், பிடுங்கித்தின்னும் பிராமணர், கொள்ளைக்காரர், நாட்டுப் புறத்தார் முதலியோர்களின் நடபடிக்கைகளையும்; கோர்ட்டு விசாரணை முதலியவற்றையும்; ஸ்திரீ புருஷருக்குள் ஏற்படும் காதலின் மெய்ப் பண்பையும், அருமையாய், உள்ளங்கை நெல்லிக்கனி போல், எடுத்துக் காட்டி விளக்குவது. பல விதங்களில் இது போன்ற இனிய நாவல் தமிழில் இல்லையெனலாம். ருசிகரமான அரிய கவிகளும் மொழி பெயர்ப்புக்களும் அடங்கியிருக்கின்றன. வாங்கி வாசிக்கத் தொடங்கினல், கடைசிப் பக்கம் முடியும் வரை கீழே வைக்க மனம் வராது.

[3] முத்து மீனுக்ஷி—இரண்டாம் பதிப்பு-0-8-0.

[4] உதயலன் என்னும் கோற்கைச் சிங்களவன் :—இரண்டாம் பதிப்பு விலை 0-12-0.

ஷேக்ஸ்பியர் கவீந்திரரின் நாடகங்களில் மிகச் சிறந்ததான "ஒதெல்லோ என்னும் வெநிஸ் மோரியன்" என்ற நாடகத்தைத் தமிழுக்குப் பொருந்த அழகாய் அமைத்தெழுதியது பல பத்திரிகைகளாலும் கற்றேராலும் சிலாகித்துப் புகழப்பட்ட அருமையான மொழி பெயர்ப்பு-இதைப் படித்தால் ஷேக்ஸ்பியர் மகா கவியின் நாடகப் போக்கும் உலக ஞானமும் விளங்கும். இதுவே அவர் நூல்களிலெல்லாம் முதன்மையானது என்பார் பலர்.

[5] திருமலை சேதுபதி :—தேச பக்தியை வளர்க்கவல்ல ஒரு தமிழ் நாடகம்—விலை 0-8-0 (இரண்டாம் பதிப்பு அச்சிலிருக்கிறது)

[6] போது தர்ம சத்கீத மஞ்சரி :—விலை 0-4-0. ரூ 100 பரிசு பெற்ற "இந்தியக்கும்மி"யும், இன்னும் பல தேசிய கீதங்களும், பதங்களும், ஆங்கில காவிய மணிகளின் அருமையான மொழி பெயர்ப்புக்களும் இதில் அடங்கி யிருக்கின்றன-ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியது; இதைக் கருதியே சரச விலைக்கு விற்கப்படுகிறது.

[7] சித்தார்த்தன் :—கௌதம புத்த பிரானது திவ்ய சரித்திரத்தைத் தனித்தமிழ் வசன நடையில் அழகாய்க் கூறுவது. புத்த சரிதை என்னும் இனிமையான காவிய அநுபந்தத்துடன் கூடியது-0-12-0.

[8] பாலராமாயணம்—இராமாயணக் கதையை இனிமையாய் நவசரங் கொழிக்கக் கூறுவது-0-12-0.

[9] பாலவிநோதக் கதைகள்—சிறுவர் சிறுமிகளுக் கேற்ற அருமைக் கதைகள்—சித்திரப்படங்களுடன்-0-4-0.

[10] இந்தியக் கும்மி—மட்டும்-0-0-6.

[11] புதுமாதிரிக் கல்யாணப் பாட்டு—யாவரும் கட்டாயம் வாசிக்க வேண்டியது-0-2-0.

[12] ஆசாரச் சீர்திருத்தம்-0-2-0.

[13] பாரிஸ்டர் பஞ்சநதம்—புதிய சிறிய ரஸிக நாடகம். 0-6-0. இந்த இனிய நாடகம் நாலு காட்சிகளில் வெகு ரஸமாயிருக்கும்-வீடுகளில் சிறுவர் சிறுமிகள் சுலபமாய் ஆடிப் பார்க்கலாம்-பஞ்சாமிர்தம் பத்திரிகையின் வருஷச் சந்தாதாரர்களுக்கு, இது பாதி விலை [0-3-0] க்குக் கொடுக்கப்படும்.

[14] பஞ்சாமிர்தம்—சித்திரப்படங்களுள்ள ஒரு மாதாந்தரப் பத்திரிகை-இதைப்பற்றிய அபிப்பிராயங்களை வேறிடத்திற் காண்க-இதினும் சிறந்த பத்திரிகை தமிழிலில்லை என்பது பலர் கொள்கை. வருஷச் சந்தா உள்நாடு ரூ 5, வெளிநாடு ரூ 6; தனிப் பிரதி 8 அணா.

[15] துசிகர் குட்டிக் கதைகள்—முதல் எட்டு		0-10-0.
ஷை	இரண்டாம் எட்டு	0-10-0.
	இரண்டும் சேர்ந்து வாங்கினல்	1-0-0.

ஆசிரியர் அச்சுப்பிரசுராலயம், புஸ்தகசாலை,
மயிலாப்பூர், சென்னை.